கல்கி

KALKI
3.7.97
ரூ. 4.00

பள்ளி செல்லும் குழந்தைகள்: சமாளிப்பது எப்படி?



"என்னிடம் என்ன குறை? நான் அழகாக இல்லையா?"

— 'கருத்தம்மா' ராஜஸ்ரீ குமுறுகிறார்!

ஆண்டுக்கு 13% உறுதியான வருமானத்தை

5 ஆண்டுகளுக்கும் அளிக்கிறது.



அதோடு பிரிவு 54 இ ஏ-ன் கீழ் மூலதன லாப வரிவிலக்கு

இன்றைய நிலையில்லாத நிதிச் சந்தைகளில், முதலீடு பாதுகாப்பாக இருக்க வேண்டும். அதோடு நல்ல பலனளிக்கவும் செய்ய வேண்டும் என்றால் மன்த்லி இன்கம் பிளான் 97 (III)-ஐ தேர்வு செய்யுங்கள். எம் ஐ பி 97 (III)-ன் சிறப்பம்சங்களைப் பாருங்கள்.

- **தேர்வு:** மாத வருமானம் அல்லது க்யுமுலேட்டிவ் தேர்வு ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுங்கள். இரண்டுமே 5 ஆண்டு கால அளவுள்ளது.
- **வருமானத்துக்கு உறுதி:** இரண்டு தேர்வுகளுக்குமே 5 ஆண்டுகளுக்கும் (ஆண்டு கூட்டு 13.60%) ஆண்டுக்கு 13%.
- **மாத வருமானம் தேர்வு:** ஒவ்வொரு ஆண்டும் பின் தேதியிட்ட மாதாந்திர வருமான விநியோக வாரண்டுகள் முன்னதாகவே அனுப்பி வைக்கப்படும்.
- **க்யுமுலேட்டிவ் தேர்வு:** ரூ. 5000 முதிர்வடையும் போது குறைந்தபட்சம் ரூ. 9,543 ஆகவளரும்.
- **பாதுகாப்பு:** இத்திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதன தொகை முதிர்வடையும்போது பாதுகாப்பாக இருக்கும் என உத்தரவாதம் தரப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உறுதி செய்யப்பட்டுள்ள டிவிடன்ட் மற்றும் முதிர்வடையும்போது மூலதன பாதுகாப்பு ஆகியவை யூனிட் டெவலப்மென்ட் ரிசர்வ் ஃபண்டின் உத்தரவாதம் பெற்றது.
- **லிக்விடிட்டி:** 3 ஆண்டுகளுக்குப்பிறகு என் ஏ வி அடிப்படையிலான விலையில் திரும்ப வாங்கும் வசதி. கூடவே என் எஸ் இ (NSE)-ல் பட்டியலிடும் வசதி.
- **குறைந்தபட்ச முதலீடு:** ரூ. 5000 மட்டுமே. உச்ச வரம்பு ஏதும் இல்லை.
- **மூலதன மதிப்புயர்வு:** இரண்டு தேர்விலும் மூலதன மதிப்புயர்வுக்கு வாய்ப்பு உண்டு.
- **வரிச்சலுகைகள்:** வருமான வரிச் சட்டம் 1961 பிரிவுகள் 80 எல், 48 மற்றும் 112-ன் கீழ்.
- **மூலதன லாபங்கள் வரி விலக்கு:** பிரிவு 54 இ ஏ-ன் கீழ்.
- வருமான வரிச் சட்டம் 1961-ன் படி மூலத்தில் வரி பிடித்தம்.
- **மாற்றிக்கொள்ளும் வசதி:** எம் ஐ எஸ் 92 (II) முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

இக்காரணங்களுக்காக பாதுகாப்பான, பலனளிக்கும் முதலீட்டுக்கு எம் ஐ பி 97 (III) மிகச்சிறந்தது.

கூடுதல் விபரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள யூ டி ஐ அலுவலகம் அல்லது முதன்மை பிரதிநிதி அல்லது ஏஜென்டை அணுகவும்.

யூ டி ஐ-ன்
மன்த்லி
இன்கம்
பிளான் 97 (III)

UNIT TRUST OF INDIA

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் வளமான எதிர்காலத்திற்காக

விற்பனை ஜூன் 30 முதல் ஆகஸ்ட் 1.97 வரை

CWPL/UTI/TAM/128/97



ஸ்டாலின் ருசித்த சரவணபவன் சாம்பார்!

சாதிக் கலவரங்களைத் தவிர்ப்பதற்காக, மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வைக்கப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களை நீக்கிய கையோடு சென்னை நகரில் சில கோவில்களில் சமபந்தி போஜனத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். வடபழனி முருகன் கோவிலில் ஸ்டாலின் தலைமையில் நடந்த சமபந்தி சாப்பாட்டு மேளாவுக்கு ஒரு விஸிட் அடித்தோம். அங்கு கண்ட



''உங்க படத்துல ஆபாச காட்சியே கிடையாதா?''

''எப்படி கண்டுபிடிச்சீங்க?''

''படம் உள்ளே ஓடிக்கிட்டிருக்கு... சென்சார் அதிகாரிகள் பூரா வெளில சிகரெட் புடிக்க வந்துட்டாங்களே!''

— அம்பை தேவா

காட்சிகள் :

● மூன்றாம் தேதி பகல் பன்னிரண்டு மணிக்கு ஆரம்பம் என்று பேப்பரில் போட்டிருந்தது. அட்லீஸ்ட் ஒரு மணிக்காவது தொடங்குவதுதானே தமிழர் நாகரிகம்? பதினொன்று அம்பத்தொம்பதுக்கே ஸ்டாலின் வந்துவிட, உடன் சைதை கிட்டுவும் த.மா.கா. எம்.எல்.ஏ. செல்வகுமாரும் ஆஜராகிவிட, சரியாகப் பன்னிரண்டுக்கே ஆரம்பமாகி விட்டது விருந்து.

● மேயருக்குப் பின்னால் நிறைய கட்சிக்காரர்கள் வந்தாலும் யாரும் சாப்பிட உட்காரவில்லை. சும்மா வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

● முதல் நாள் (புதன் கிழமை) இரவுதான் வடபழனி முருகன் கோவிலிலிருந்து சரவண பவனுக்கு போன் வந்ததாம். 'திடீர்' ஏற்பாடு; சுமார் ஐந்நூறு பேருக்கு சாப்பாடு தயார் செய்துகொண்டு சரியாகக் காலை பதினொன் றரைக்கு வந்து விடுங்கள் என்று.

'அவர்கள் ஐந்நூறு என்றால் எப்படியும் கூட்டம் எழுநூறைத் தாண்டிவிடக்கூடும்; எதற்கும் எழுநூற்றைம்பது பேருக்குத் தயார் செய்துகொண்டு செல்லுங்கள்' என்று உத்தரவிட்டிருக்கிறார் பவன் உரிமையாளர் ராஜகோபால். "அண்ணாச்சி சொன்னதுதான் சரி. ஆறு பந்தியில் மொத்தம் எண்ணூறு பேர் சாப்பிட்டிருக்கிறார்கள்'' என்றார் சரவணபவனிலிருந்து வந்திருந்த சூபர்வைசர் நாதன்.

● சாம்பார், வத்தக்குழம்பு, ரசம், கோஸ் பொறியல், அவியல், ரசம், தயிர், அப்பளம், ஊறுகாய், பச்சடி தவிர ஸ்பெஷல் அயிட்டமாக ஒரு மில்க் ஸ்வீட்டும் மெனுவில் உண்டு. ஒரு சாப்பாடு இருபத்தி மூன்று ரூபாய். ஐந்நூறுக்கு மட்டும்தான் கோவில் நிர்வாகத்திடம் பில் தரப் போகிறோம். மீதி முன்னூறும் எங்கள் உபயம்" என்றார் நாதன்.

● ஸ்டாலினுக்கு சரவணபவன் சாம்பார் என்றால் உயிராம். "இரண்டு முறை கேட்டுக் கேட்டுச் சாப்பிட்டார்" என்றார் சப்ளையர். செல்லக்குமார் விரும்பிச் சாப்பிட்டது வத்தக் குழம்பு சாதம்.

● சமபந்தி போஜனம்தானே என்று அசால்டாக இல்லாமல் படுசுத்தமாகக் கைகளில் பாலிதீன் கிளௌஸ்கள் அணிந்தே பரிமாறினார்கள். அங்கே இங்கே சிந்தாமல் சிதறாமல் மிக சுத்தம் காத்தார்கள்.

● தெருவோரவாசிகளும் கோடம்பாக்கம் ஸ்டுடியோ பையன்களும் கோவிலுக்கு வந்த டூரிஸ்ட்களும்தான் அதிகம் சாப்பிட்டார்கள். சாப்பிட்டுக் கொண்டிருந்த சிலரிடம் 'எதற்கு இந்த சமபந்தி போஜனம் நடக்கிறது தெரியுமா?' என்று கேட்டபோது கிடைத்த பதில்கள் :

முனியப்பிள்ளை (வயது 60) : என்னமோ சொன்னாங்களே, புதுசா பஸ்ஸு உடறாங்களோ... பஸ்ஸு பேரு மாத்தறாங்களோ என்னமோ...

மீனாட்சி அம்மாள் (வயது 45) : தெரியுமே! சாதிக்காரங்க பேரெல்லாம் எடுத்துட்டாங்களாம்.

கார்த்திகேயன் (வயது 20) : சாதித் தலைவருங்க பேர்களை எடுத்ததைக் கொண்டாடறாங்க. எம்.ஜி.ஆர். பேர் எடுத்தது மட்டும் எனக்குப் பிடிக்கலை. அவருக்கும் சாதிக்கும் என்ன சம்பந்தம்?

ஆவுடைநாயகி (வயது 70) : அதெல்லாம் தெரியாது. சாப்பாடு நல்லா இருந்திச்சி.

டெயில் பீஸ் : தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஒரு டூரிஸ்ட் பஸ், சுமார் முப்பத்தைந்து பேரைக் கோவிலில் இறக்கிவிட, தரிசனம் ஆகி முடிந்ததும், கைடு, டூரிஸ்ட்டுகளை சமபந்தியில் உட்கார வைத்து விட்டாராம்.

"சாப்பாட்டுக்கும் சேர்த்துத்தானே பணம் வாங்கினான்? அது எப்படி இலவச உணவுக்கு உட்கார வைக்கலாம்?'' என்று கொதித்துப் போய்க் கேட்டார் ஒரு பயணி.

— ஔரங்கசீப்

படம் : சௌந்தர்ராஜன்



காதைக் கடித்த டைசன்!

யாராவது மற்றவரிடம் ரகசியமாக பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தால், "என்ன காதைக் கடிக்கறே?" என்று கேட்பதுண்டு. பிரபல குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் மற்றொரு பிரபலமான ஹோலிபீல்டின் காதைக் கடித்திருக்கிறார் - ரகசியம் பேச அல்ல; நிஜமாகவே. அதுவும் வலது காதை ஒரு முறை, இடது காதை ஒரு முறை என்று டர்ன் வைத்துக் கொண்டு கடித்திருக்கிறார்.

"என்னுடைய இவ்வளவு வருட குத்துச் சண்டை அனுபவத்தில் இப்படி ஒரு அதிர்ச்சிகரமான தாக்குதல் நடப்பதை இப்போதுதான் பார்க்கிறேன்" என்று பதற்றத்துடன் கருத்துக் கூறியிருக்கிறார் நடுவர் டர்னர்.

குத்துச் சண்டைக்கு வந்தபோதே மிகவும் டென்ஷனாகத்தான் காணப்பட்டார் டைசன். கற்பழிப்பு விவகாரத்தில் மாட்டிக் கொண்டு சிறைக்குச் சென்று வந்ததிலிருந்தே, தன்னை ஹீரோவாகக் கருதிய ரசிகர்கள் ஏளனமாகப் பேசுவதாக அவருக்கு ஓர் எண்ணம்.

தொடர்ந்து மூன்று முறை உலக ஹெவி வெயிட் சாம்பியனாக விளங்கியவர் முகமது அலி ஒருவர்தான். இந்தப் போட்டியில் மைக் டைசனை வீழ்த்திவிட்டால், ஹோலிபீல்டுக்கும் டைசனுக்கு நிகரான சாதனை கௌரவம் கிடைத்துவிடும். இப்படி நடந்து விடக்கூடாதே என்ற பதற்றம் வேறு டைசனுக்கு.

முதல் இரண்டு சுற்றுகளும் ஹோலி பீல்டுக்கு சாதகமாக அமைந்துவிட, மூன்றாவது ரவுண்டு (இதிலும் டைசனுக்கு நஷ்டம்தான்) முடியப் போகும் நேரத்தில் எதிரியின் வலது காதை வேகமாக ஒரு கடி கடித்தார். ரத்தம் பெருகியது. உடனே மருத்துவர் வரவழைக்கப்பட, ஹோலி பீல்டை பரிசோதித்துவிட்டு 'பந்தயம் தொடர்ந்து நடக்கலாம்" என்று எதிர்பாராத ஒரு கருத்தைக் கூறிவிட்டார்.

டைசனின் ஸ்கோரிலிருந்து இரண்டு பாயிண்டுகளைக் கழித்த போது, "இன்னொரு முறை எதிராளியைக் கடித்தால் போட்டியிலிருந்து விலக்கப்படுவீர்கள்" என்றும் எச்சரித்தார் நடுவர்.

'உலகப் புகழ் பெற்ற தமக்கு இப்படி ஓர் எச்சரிக்கையா?' இம்முறை ஆழமான டிராகுலா கடி ஒன்றை ஹோலி பீல்டின் இடது காதில் அரங்கேற்றினார்.

காதின் மேற்பகுதி தனியாகப் பிய்ந்து விழ, ப்ளாஸ்டிக் சர்ஜரி மூலம் அதை ஒட்ட வேண்டிய நிலை.

"முதல் இரண்டு ரவுண்டுகளில் என் தலையைத் தேவையில்லாமல் முட்டிக் கொண்டிருந்தார் ஹோலிபீல்ட் (அவை தற்செயலானவை என்று கூறிவிட்டார் நடுவர்). நான் பதிலுக்கு என் பலத்தைக் காட்ட வேண்டாமா?" என்று சிறுபிள்ளைத் தனமான விளக்கத்தையும் அளித்திருக்கிறார். இதனால் டைசனின் மூளை பாதிக்கப் பட்டிருக்கிறதோ என்கிற சந்தேகமும் எழுந்துள்ளது.

— ஜி.எஸ்.எஸ்.

"ஹீரோ ஏன் அவர் படத்தில் நடிக்க தனக்கு பணம் கிடைக்குமோ இல்லையோன்னு பயப்பட்டார்?"

"தயாரிப்பாளர் அவரைப் பார்த்து கைமாத்தா பத்து ரூபாய் கேட்டாராம்!"

— வெ. ராஜாராமன்





"கதையைக் கேட்டபோது, ஜன்னல் வழியே அடுத்த வீட்டில் அன்றாடம் நடக்கிற நிகழ்ச்சிகளைப் பார்க்கிற உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது. அப்பட்டமான மிடில் கிளாஸ் சூழலில், தவிர்க்க இயலாமல் எழுந்து விடும் பிரச்னைகளுக்கு என்ன தீர்வு என்பதை நகைச்சுவை என்ற தேனில் குழைத்துத் தந்திருப்பது பாராட்டுக்குரியது!" என்கிறார் எழுத்தாளர் சிவசங்கரி.

"இந்த டி.வி. சீரியலில் நடிப்பது குறித்து எனக்கு சந்தோஷம்! இருந்தாலும், கடைசியாக எனக்காக, ஒருதடவை, சரவணன் சாரிடம், இதை சினிமாவா எடுக்கலாமேன்னு கேட்டுப் பாருங்க சார்! என்று டைரக்டர் எஸ்.பி. முத்துராமனிடம் கேட்டவர், தொடரின் முக்கிய வேடத்தில் நடிக்கிற சரத்பாபு.

இவர்கள் எல்லோரும் இப்படிப் பாராட்டுவது ஏவி.எம். நிறுவனம், முதல் தடவையாகத் தனியார் டி.வி. சானலில் ஒளிபரப்புவதற்காகத் தயாரிக்கிற 'நிம்மதி உங்கள் சாய்ஸ்' தொடரைத்தான். இந்த வாரம் முதல் நிம்மதி உங்கள் சாய்ஸ் சன் டி.வி.யில் ஒளிபரப்பப் படவுள்ளது.

'நிம்மதி உங்கள் சாய்ஸ்'



"சினிமாவுக்கு ஏற்ற சப்ஜெக்ட் என்றால், சினிமாவாக எடுக்காதது ஏன்?"

"சம்சாரம் அது மின்சாரம் படத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் எல்லோரும் இப்படிச் சொல்கிறார்கள். ச.அ.மின்சாரம் படத்தையே இப்போது எடுக்க வேண்டியிருந்தால் நான் டி.வி. தொடராகத்தான் எடுத்திருப்பேன். சினிமாவாக எடுத்திருக்க மாட்டேன். காரணம், அன்று அதை ரசித்த மிடில் கிளாஸ். இன்று சினிமா பார்ப்பதைக் குறைத்துக் கொண்டு, டி.விக்கு குறிப்பாக சாடிலைட் டி.வி.க்கு வந்து விட்டது!" என்கிறார் ஏவி.எம். சரவணன்.

'நிம்மதி உங்கள் சாய்ஸ்' கதை என்ன?

வேலைக்குப் போகிற பெண்தான் வேணும் என நினைக்கிறான் ஒருவன். பெண் பார்க்கப் போகிற இடத்தில் சிக்கல். பெண், வேறு ஒருவரைக் காதலிப்பதாகச் சொல்கிறாள். அவளுடைய தங்கையைப் பார்க்கலாமே என்கிறார் பையனின் அப்பா. ஆனால் தங்கையோ வேலைக்குப் போகாதவள். வேலைக்குப் போகிறவள் என்று சொல்லி - கல்யாணம் பண்ணி வைத்து விடலாம். பின்னால் பிரச்னைகளைச் சமாளித்துக் கொள்ளலாம் என வழி சொல்கிறவர் பையனின் அப்பாவேதான்.

தம் மனைவி வேலைக்குப் போகாதவள் என்று கணவன் அறியும்போது பிரச்னை. வேலைக்குப் போக ஆரம்பிக்கிறாள் மனைவி. ஆபீஸ் வேலைகளில் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று அறிவுரை சொல்கிறான். அவளுக்கும் வேலையில் ஆர்வம் ஏற்பட்டு, சின்சியராய் உழைக்கிறாள்.

ஆபீசில் சம்பள உயர்வு, அதிக பொறுப்புகள், பிரமோஷன் என்று அவள் முன்னேறிக் கொண்டிருக்க, கணவனுக்கோ தாழ்வு மனப்பான்மை வந்து விடுகிறது.

இன்னொரு பக்கம் ஹீரோவின் அண்ணிக்கு வேலைக்குப் போக வேண்டும் என்று ஆசை. அண்ணனோ வேண்டாம் என்கிறான். வீட்டிலிருந்தபடியே அவள் செய்யும் புடவை வியாபாரம், குழந்தைகளின் காப்பகம் இவற்றால் அடுக்கடுக்காகப் பிரச்னைகள்.

இது ஒருபுறம் என்றால், சினிமாவில் கல்யாணக் காட்சிகளில் நடிக்கும் ஒரு புரோகிதர் குடும்ப சம்பவங்கள் ஒரு கிளைக் கதை. புரோகிதரின் மகன், டெல்லியிலிருந்து ஓர் இந்திப் பெண்ணை திடீர்த் திருமணம் செய்து கொண்டு வந்து நிற்க, நம் பாரம்பரியம், கலாசாரத்தைக் கெடுத்து விட்டாயே என்று கொதிக்கிறார் புரோகிதர். 'எவ்வளவு தெய்வீகமான திருமண மந்திரங்களை, சினிமாவுக்கான பொய்த் திருமணங்களின்போது சொல்லிவிட்டு, காட்சி முடிந்தவுடன், கையோடு தாலியையும் கழற்றி வாங்கிக் கொண்டு வந்து விடும் உனக்கு, என் கல்யாணம் பற்றிப் பேச என்ன தார்மீக உரிமை இருக்கிறது?' என்று கேள்வி கேட்கிறான் மகன். அவனுக்குப் பதில் சொல்லமுடியாமல் திக்கு முக்காடிப் போகிறார் புரோகிதர். அத்தோடு சினிமா புரோகித நடிப்புக்குத் தலை முழுகுகிறார். அதன் பின் பல திருப்பங்களுடன் போகிறது அந்தக் கிளைக் கதை.

மனைவியின் உயர்வு கண்டு தாழ்வு மனப்பான்மை கொள்ளும் ஹீரோவுக்கு நேரெதிராய், தனது பாட்டி மனைவியை உற்சாகப்







— ஏவி.எம்மின்
கலக்கல் தொடர்!



"ஆழமான கதையம்சம் உள்ள திரைப் படம் எடுக்க ஆசைப்படறதா நான் சொன்னதை கதாசிரியர் தப்பா புரிஞ்சுக்கிட் டாரு..."

"ஏன் என்ன செய்தாரு?"

"கதை முழுவதும் சுரங்கத்திலேயே நடக்கிற மாதிரி திரைக்கதை எழுதியிருக்காரு!"

— வெ. ராஜாராமன்



"நாம்தானே மானேஜர்ன்ற தைரியத்துல 'உண்மையிலேயே பாட்டி செத்ததுக்குதான் லீவு போட்டியா'ன்னு நம்ம ரகுவ கேட்டுட் டேன்!"

"அதுனால என்ன சார்...?"

"பாவி மனுசன்... மறுநாள் பாட்டியோட அஸ்தி கலசத்தை ஆபீலில் ரூமுக்குத் தூக்கி பாந்துட்டான்!"

— அம்பை தேவா



"கட்சி நிதிக்கு உண்டியல்ல பணம் போட்டதற்கா உன்னைக் கட்சியை விட்டு நீக்கிட்டாங்க?"

"பணத்தை உண்டியல்ல போட்டதும் உணர்ச்சிவசப்பட்டு கோவிந்தா, கோவிந் தான்னு கத்திட்டேன்!"

— பர்வதவர்த்தினி

படுத்தி, பல உதவிகளையும் செய்கிற இன்னொரு கேரக்டர் வீட்டுச் சம்பவங்கள் இன்னும் ஒரு கிளைக்கதை...

கொடைக்கானல் மலைப்பாதைபோல 'நிம்மதி உங்கள் சாய்ஸ்' தொடரிலும் ஏகப்பட்ட திருப்பங்கள்.

பழங்கால ரங்காராவ் ஸ்டைலில், ஹீரோவின் அப்பாவாய் நடிப்பவர் சரத்பாபு. அவருக்கு ஜோடி ஜெயபாரதி. புரோகிதராய் நாகேஷ். தவிர ஜெய்கணேஷ். மேலும் பல பழைய, புதிய முகங்கள்.

"இந்தக் கதையின் கருவுக்கு இன்ஸ்பிரேஷன் எது?"

"நான் சில ஆண்டுகளுக்கு முன் எழுதி மேடையில் நடிக்கப்பட்ட 'காசேதான் கணவனடா' என்ற நாடகம்தான். அந்த ஒன்னரை மணி நேர நாடகத்தின் பொறிதான் இந்த நாற்பது வார டி.வி. தொடரின் கதைக்கு இன்ஸ்பிரேஷன்" என்கிறார் வெங்கட்.

டைரக்ஷன் எஸ்.பி. முத்துராமன். "சின்னத் திரையானால் என்ன? வண்ணத்திரையானால் என்ன? கதை முக்கியம். சின்சியரான, கடும் உழைப்பு அவசியம். இவை இருந்துவிட்டால் மக்களின் ஆதரவு கிடைத்து விடும்!" என்று நம்பிக்கையுடன் சொல்கிறார் எஸ்.பி. முத்துராமன்.

டெயில் பீஸ்:

- "சமையல் மோசம்னா, ஒருநாள் நஷ்டம். அறுவடை மோசம்னா ஒரு வருஷம் நஷ்டம். கல்யாணம் மோசம் ஆயுள் பூரா நஷ்டம்." இது தொடரின் ஒரு காட்சியில் இடம் பெறும் பளிச் வசனம்.
- சனிப் பெயர்ச்சிக்கு இத்தொடரில் நாகேஷ் தரும் விளக்கம்: கல்யாணமான புதிதில், மனைவி காலில் முள் குத்தினால், சனியனே என்று முள்ளைத் திட்டுவோம். பத்து வருஷம் கழிச்சு, மனைவி காலில் முள் குத்தினால் சனியனே! பார்த்து வரக் கூடாதா? என்று மனைவியைத் திட்டுவோம். சனி இப்படி இடம் பெயருவதுதான் சனிப் பெயர்ச்சி.

— எஸ். சந்திரமௌலி

ஸ்ரீ மீனாக்ஷி டிராவல்ஸ் (REGD)

Sri Meenakshi Travels (REGD) 4/2A, W.E.A. KAROL BAGH, NEW DELHI - 110 005. PHONE : 572 6891

சுற்றுலாத் துறையில் அனுபவமிக்கவர்களால் நடத்தப்படும் வட இந்திய புனித யாத்திரைகள்

தேவி தரிசனம் :

நைனாதேவி, சிந்தபூரணி, காங்கரா, ஜ்வாமுகி, சாமுண்டி, வைஷ்ணாவி தேவி, அமிர்தசரஸ் பொற்கோவில், அட்டாரி (இந்தியா பார்டர்) ராம்தீர்த், ஜம்மு ரகுநாத் மந்தீர், குருக்ஷேத்திரம் (கீதோபதேசம்).

6 நாட்கள் : புறப்படும் தேதி : 23.08.97 கட்டணம் ரூ. 1550/-

பத்ரிநாத் யாத்திரை :

ஹரித்துவார், ரிஷிகேஷ், தேவப்ரயாக், ஜோஷிமட், TRAVEL BY 2X2 SEATER BUS கட்டணம் ரூ. 1600/-

புறப்படும் தேதி : 05/09/97, 12/09/97, 19/07/97, 26/09/97

பத்ரிநாத் கேதார்நாத் :

ஹரித்துவார், ரிஷிகேஷ், தேவப்ரயாக், ஜோஷிமட் கட்டணம் ரூ. 2300/-

புறப்படும் ஏதி : 05/09/97, 12/09/97, 19/09/97, 26/09/97

தீபாவளி அன்று காசியில் லட்டு தரிசனம்/தங்க அன்னபூரண தரிசனம் :

நைமி சாரண்யம், அயோத்யா, கோரக்பூர், முக்திநாத், காட்மண்டு, பசுபதிநாத், வாரணாசி (காசி) ஆக்ரா, மதுரா, டில்லி 15 நாட்கள் TRAVEL By 2X2 Seat கட்டணம் ரூ. 6000/- (விமானக் கட்டணம் தனி) புறப்படும் தேதி : 18.10.97

சிம்லா, குப்ரீ, மணாலி, ரோதாங்பாஸ், சண்டிகர், பிஞ்சூர் கார்டன், சுற்றிப் பார்க்க நபர் ஒன்றுக்கு ரூ. 2200/- 6 DAYS (குழுக்கள்).

மேற்படி யாத்திரைகள் டில்லியில் இருந்து வசதியான பஸ், தென்னிந்திய பிராமணர்களால் சமைக்கப்பட்ட காலை காபி, சுவையான சிற்றுண்டி, மதியம் சாப்பாடு மாலையில் காப்பி, இரவு சாப்பாடு மற்றும் தங்கும் வசதியும் உண்டு. குறைந்த சீட்டுகளே உள்ளன. முன்னதாகவே பதிவுசெய்து கொள்ளவும். மற்றும் எங்களது தினசரி வார சுற்றுலாக்களான ஆக்ரா, ஜெய்ப்பூர், ஹரித்துவார், ரிஷிகேஷ், சிம்லா, குலு மணாலி சுற்றுலாக்களுக்கும் எங்களை தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி (AT SOUTH INDIA)

1. R. KESAVAN IYENGAR, SRI MEENAKSHI TELECOM CENTRE, THANJAVUR. PH.NO :31306, 60426

2. VEDAVALLI SRINIVASAN, 19/2, KESAVA PERUMAL EAST STREET, MYLAPORE, MADRAS - 600 004. PH : 4950530.

கல்கி- பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

'தலையணை மந்திரம்' ஜோக்

போட்டி - 11; முடிவு

பிரசுரமாகியுள்ள ஒவ்வொரு ஜோக்கும் ரூ. 100 பரிசு பெறுகிறது...

"பொண்டாட்டி பேச்சைக் கேட்டு எம் பையன் இப்படி மாறுவான்னு நான் கனவுல கூட நினைக்கலை...!"

"அப்படி என்ன செஞ்சிட்டான் ஓம் பையன்?"

"வருஷா வருஷம் குற்றாலம் கூட்டிப் போற என் மகன், இந்த வருஷம் மொட்ட மாடில இருந்து நான் தண்ணி ஊத்தறேன், நீ கீழே நின்னு குளிச்சிக்கோ, அப்படிங்கறான்!"

— எல். முருகன்



◆◆

"நம்ம பையன்கிட்ட நம்ம மருமகள் ஓவரா தலையணை மந்திரம் ஓதிட்டாங்க!"

"எப்படிக் கண்டுபிடிச்சே?"

"லெட்டர் எழுதும்போது கூட 'லதா துணை'ன்னு போட்டு எழுதறான்!"

— வே. செந்தில் குமார்

◆◆

"சும்மா தலையணை மந்திரம் போடறாப்பல நடிக்கத் தாம்மா சொன்னேன்! உண்மையிலேயே போட்டு, எனக்கும் ஷீரோவுக்கும் தகராறு மூட்டி விட்டுட்டியே?"

— தே. ராஜாசிங் ஜெயக்குமார்

◆◆



"மந்திரம் ஏதோ ஜெபிக்கிறீங்களே, என்ன அது?"

"உன்னோட தலையணை மந்திரத்திலேருந்து என்னைக் காப்பாத்திக்க எங்கம்மா

சொல்லித் தந்த மந்திரந்தான் அது...!"

– டி. ராஜாராம்

◆◆

"ஏங்க... நான் பட்டுச் சேலையில ரொம்ப அழகா இருக்கேன்னு இன்னைக்கு அத்தையே சொன்னாங்க, தெரியுமா?"

"எங்கம்மாவைப் பத்தித்தான் உனக்குத் தெரியுமே... ஏதாவது இல்லாதது பொல்லாதது சொல்லிக்கிட்டே இருப்பாங்க... அதெல்லாம் மன சில வச்சுக்காதே!"

– வீ. முத்தையா

◆◆

"என்ன தலையணை மந்திரம் போட்டே என் பிள்ளைக்கு? தனிக் குடித்தனம் போகப் போறதா தைரியமா என்கிட்டே சொல்றான்..?"

"முப்பது வருஷத்துக்கு முன்னே மாமாவுக்கு நீங்க போட்ட அதே மந்திரம்தான் அத்தை."

– சத்யகிரிராஜன்

◆◆

"மாப்பிள்ளை ஏன் இப்படி கிறங்கி மயங்கி இருக்கார்?"

"எல்லோரும் தலையணை மந்திரம் போட்டா, எம் பொண்ணு 'மெத்தை மந்திரமே' போட்டுட்டா."

– சி. ஆர். நாகராஜன்

◆◆

"டார்லிங்! டார்லிங்! அடுத்த பிறவியிலும் நீதான் எனக்கு மனைவியாக வர வேண்டும்."

"அப்போதாவது சம்பளக் கவரை அம்மாகிட்ட கொடுக்காம என் கையில கொடுப்பீங்களா அத்தான்?"

– நெல்லை. குரலோன்



ஒருவழியாக இந்த வருஷம் தாதா சாகேப் பால்கே விருது பெற்றுவிட்ட நடிகர் திலகம் பற்றி, அவரோடு நீண்ட நாள் தொடர்புள்ளவரும் சிவாஜியின் பல படங்களுக்குக் கதை, வசனம் எழுதியவருமான வியட்நாம் வீடு சுந்தரம் கூறுகிறார்...

"இது ஆறுதல் பரிசுதான்!"

அது, நடிகர்களும் அவர்கள் நடிக்கும் கதா பாத்திரங்களும் தனித் தனியாக அடையாளம் காணப்பட்ட காலகட்டம். பாத்திரங்கள் ஏற்கிற வேடங்கள் சிறப்பாக இருந்தாலன்றி, நடிகர்கள் பெயர் பெறுவது கஷ்டம்.

அப்போதுதான் ஒரு புயல் மாதிரி தமிழ் சினிமா உலகத்தைத் தம் வரவால் தாக்கினார் சிவாஜி. கதாபாத்திரங்களுக்கு கௌரவம் தந்தது. அவரது நடிப்பு. நடிகன் வேறு, பாத்திரம் வேறு அல்ல; ஒன்றில் ஒன்று கரைந்து போனாலன்றி மக்களைக் கவர முடியாது என்பதை நிரூபித்தவர் அவர்!

நாம் நடிக்கிற பாத்திரங்களாகவே அவர் மாறிப் போகத் தொடங்கிய போதுதான், ஒரு ரசிகனாக அவரை தூர நின்று பார்த்துக் கொண்டிருந்த நான், படைப்பாளியாக அவருடன் இணைந்து, அவருக்காக எழுத ஆரம்பித்தேன்.

தமிழ் சினிமாவில் வசனங்கள் கோலோச்சிக் கொண்டிருந்த காலம் அது. எத்தனையோ நடிகர்கள் நீளநீளமான அடுக்கு மொழி வசனங்கள் பேசினார்கள்தாம்! ஆனால் 'இது வசனங்களின் காலம்' என்று அழுத்தமாக உணரச் செய்தவர் சிவாஜி.

அன்றைய வசனகர்த்தாக்களுள் கலைஞர் கருணாநிதி மிக முக்கியமானவர். எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர் இன்னும் பலரும் அவரது வசனங்களைப் பேசி நடித்திருக்கிறார்கள்.

ஆனால் சிவாஜி - கலைஞர் காம்பினேஷன்தான் இன்று வரை பேசப்படுகிற விஷயமாக இருக்கிறது! காரணம்; மொழியை, அதன் இயல்பு கெடாமல் எப்படியெல்லாம் மெருகேற்றி உச்சரிப்பது என்பதற்காக அவர் தம்மை வருத்திக் கொண்டு பயிற்சி மேற்கொள்வதைப் பல சமயங்களில் கூட நின்று பார்த்து பிரமித்தவன் நான்.

மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி என்று எல்லாத் திரையுலகிலும் அவருக்கு ரசிகர்கள் இருந்தார்கள். அவரை வைத்துப் படமெடுக்க எல்லா மொழி இயக்குநர்களும் வாய்ப்புக் கேட்டு அவரை நாடி வந்தார்கள்.

ஆனால் என்ன சொல்லுவார் தெரியுமா?

"என்னை விட்டு விடுங்கள். என் மொழிதான் என் பலம்."

இன்றைக்கு அவ்வளவாகக் கடைப்பிடிக்கப்படாமல் போனாலும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை என்பது தமிழர் நாகரிகத்தின் ஒரு சின்னமாக இருந்த காலகட்டம் ஒன்று உண்டு. அவரது படங்கள் பெரும்பாலும் கூட்டுக் குடும்பக் கதையாகவே இருக்கும். அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், மாமன், அத்தை உறவுகளுக்கு முக்கியத்துவம் தருகிறவையாக இருக்கும்.

இத்தகைய படங்களைப் பார்த்தே தமிழர்கள் கூட்டுக் குடும்ப வாழ்வின் சிறப்பை உணரத் தொடங்கினார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இயல்பிலேயே அவர் ஒரு குடும்பப் பறவை. இன்று வரையிலும் அவருடையது கூட்டுக் குடும்பம்தான்! தம் படங்களுக்கு அடிநாதமான குடும்ப சென்டிமென்ட்களுக்காக, அவர் தலையைப் பிய்த்துக் கொண்டதில்லை. தம் வீட்டிலிருந்தே எடுத்துக் கொண்டார்!

எத்தனை புதுமைகள்! எத்தனை விதமான வேடங்கள்!



மக்களின் கனவு நாயகனாக இருக்கிற ஹீரோ, ஒரு நெகடிவ் கேரக்டரில் நடிப்பதென்றால் நிச்சயம் பின்வாங்குவார்!

ஆனால், வீணை பாலசந்தரின் 'அந்த நாள்' படத்தில் சிவாஜி துணிந்து ஏற்ற அந்த நெகடிவ் ஹீரோ பாத்திரம் அன்று அனைவராலும் வியப்போடு நோக்கப்பட்டது!

அவரவர் யூனிஃபார்மில் தத்தம் கடமைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு டாக்டரையோ, இன்ஸ்பெக்டரையோ பார்த்தால் பெரிதாக ஒன்றும் நம்மைக் கவர மாட்டார்கள்.

ஆனால் அதே டாக்டர் அல்லது இன்ஸ்பெக்டராக சிவாஜி வேடம் ஏற்றால்?

சொக்கிப் போய் விடுவோம்! காரணம் - ஒரு பாத்திரம் ஏற்றால் - நிஜவாழ்வில் அத்தகையவர்களாக இருக்கும் சுமார் நூறு பேரையாவது அவர் கூர்ந்து கவனிப்பார்! ஒவ்வொரு அசைவும் அவருக்கு முக்கியம். ஒவ்வொரு மேனரிஸமும் அவருக்குப் பாடம்!

'ராமன் எத்தனை ராமனடி' என்றொரு படம். அந்தப் படத்தில் ஆரம்பக் காட்சிகளில் சிவாஜி, ஒரு கோவில் வாசலில் தேங்காய் பொறுக்குபவராக வருவார். படத்தில் இரண்டாம் பகுதியில் அவரது நடை, உடை பாவனைகள் எல்லாம் அப்படியே மாறிப் போகும். அந்தப் படத்தை இன்று பார்த்தால் ஒரு விஷயம் சாமானிய ரசிகனுக்குக் கூட சுலபமாகப் பிடிபடும்.

அந்தப் படத்தின் முதல் பாதியில் வருகிற சிவாஜிதான் இன்றைய கமலஹாஸனின் நடிப்புக்கு இன்ஸ்பிரேஷன்! இரண்டாம் பாதியில் அவர் காட்டும் ஸ்டைல்கள் - இன்று ரஜினிக்குச் சொந்தம்!

இந்திப் படங்கள் கோலோச்சிக் கொண்டிருந்த காலம். விருதுப் படங்களென்றால் மலையாளமும் வங்காளமும்தான்! 'தமிழ் என்றொரு மொழியில் படங்கள் வருகின்றனவா என்ன?' என்று பிற மொழியினர் சந்தேகப்பட்டுக் கேட்டுக் கொண்டிருந்த காலத்தில், நம் தமிழ்ப் படங்களுக்கும் பிற மொழித் திரையுலகுக்கும் தம் நடிப்பு ஒன்றால் மட்டும் பாலம் போட்டவர் சிவாஜி!

சிவாஜியை வைத்துத்தான் தமிழ்ப் படங்களைப் பிறர் அடையாளம் கண்டனர்! 'சிவாஜி மொழிப் படம்' என்று பிற மாநிலத்தவர் குறிப்பிடுவதை நானே கேட்டிருக்கிறேன்!

மொழி அவரது பலம். ஆனால் பல படங்களில் முக்கியமான காட்சிகளில் மொழியே இல்லாமல் விழியாலேயே நடித்துக் காட்டியவர் அவர்!

சிவாஜிக்கு விருது, தேசிய அங்கீகாரம் என்பதெல்லாம் வருஷக்கணக்காகப் பேசப்பட்டு வருகிறது. என்னைக் கேட்டால் அவர் விருதுகளுக்கு அப்பாற்பட்ட கலைஞர். சினிமா உலகமோ, அரசாங்கமோ நிர்ணயிக்கும் எந்தவொரு வட்டத்துக்குள்ளும் அடங்காதவர்.

அறுபதுகளிலேயே அவருக்கு 'பாரத்' விருது தந்திருக்க வேண்டும் என்று பேசினார்கள். பிறகு அவர் நடிக்கிற ஒவ்வொரு படத்தின் போதும் 'இதற்கு தேசிய விருது நிச்சயம்' என்றார்கள். அதன் பிறகு எழுந்ததுதான் இந்த பால்கே விருது விஷயம்.

இந்தியத் திரையுலகின் மிக உயர்ந்த விருதான இந்த தாதா சாகேப் பால்கே விருது, என்றோ அவருக்குத் தரப்பட்டிருக்க வேண்டும். இத்தனை காலம் கடந்து தரப்படுவதால் இது உற்சாகமூட்டும் விருதாக எனக்குப்படவில்லை. என்னளவில் இதை அரசு அவருக்கு ஆறுதல் பரிசாகத் தருவதாகத்தான் எண்ணி வேதனைப்படுகிறேன்.

ஆனால் சிவாஜிக்கு இந்த வேதனை இருக்காது. ஒரு நல்ல கலைஞனுக்கு விருதுகளும் பரிசுகளும் ஒரு பொருட்டல்ல. மக்களின் வரவேற்பும் பாராட்டும்தான் அவருக்கு முக்கியம்!

அந்த வகையில் சிவாஜிக்குக் கிடைத்த மக்கள் அங்கீகாரம் என்பது பிற எந்தக் கலைஞரும் இன்றளவும் எட்டிப் பிடிக்க முடியாத உயரம் கொண்டது!

பேட்டி : கிச்சா

- வியட்நாம் வீடு சுந்தரம் கூறுகிறார்...

"எப்படி இருக்கிறீர்கள் ராஜஸ்ரீ?"

"ஓ! ஃபைன்!"

"படங்களில்தான் உங்களைப் பார்க்க முடியவில்லை!"

"அதனால்தான் நேரில் வந்தீர்களா?" என்றார் சிரித்தபடி.

அந்தச் சிரிப்பில் இலேசானதொரு சோகம் இழையோடவே, என்ன பேசுவதென்று தெரியாமல் மௌனம் சாதிக்க வேண்டியிருந்தது.

"தமிழில் இல்லாவிட்டால் என்ன! கன்னடத்தில், மலையாளத்தில், தெலுங்கில் என்று நான் பிஸியாகத்தான் இருக்கிறேன்!" என்று அவரே தொடர்ந்தார்.

"தமிழில் வாய்ப்பில்லாத நடிகைகளெல்லாம் கீறல் விழுந்த ரெகார்டு மாதிரி இதையேதான் சொல்லுகிறார்கள்..."

"நான் அப்படிச் சொல்லவில்லை. இப்போது கூட நான் நடித்த 'போலீஸ் பேட்டே' என்கிற கன்னடப்படம் சக்கைப்போடு போடுகிறது. அதனால் அதைத் தெலுங்கில் ரீமேக் செய்கிறார்கள். அதிலும் நான்தான் ஹீரோயின்."

"கருத்தம்மாவுக்குப் பிறகு தமிழில் ஒன்று கூட இல்லையா?"

"இல்லை. இப்போதுதான் 'மார்கழிப் பூவே' என்கிற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறேன். தீபாவளி ரிலீஸ்."

"மற்ற மொழிகளில் இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறீர்கள்?"

"ஒட்டுமொத்தமாகச் சொன்னால் நீங்கள் நம்புவீர்களோ என்னவோ... அதனால் புள்ளி விவரமாகவே சொல்கிறேன். கன்னடத்தில் எட்டு. மலையாளத்தில் ஐந்து. தெலுங்கில் மூன்று. மாதத்தில் இருபது நாட்கள் ஷூட்டிங். பத்து நாட்கள் ஓய்வு!"

"அந்தப் பத்து நாட்களில் என்ன செய்வீர்கள்?"

"மியூசிக் சிஸ்டத்தை ஆன் செய்துவிட்டு ஆசை தீர டான்ஸ் ஆடுவேன்... படிப்பேன்."

"நீங்கள் டான்ஸ் ஆடினால் கீழ் ஃப்ளாட்டுக்காரர்களுக்குத் தொந்தரவாக இருக்குமே!"

"இல்லை. அதனாலேயே இங்குள்ள அனைவரும் எனக்கு நண்பர்களாகி விட்டார்கள். அவர்களுக்கும் பொழுதுபோகவில்லை என்றால் எங்கள் ஃப்ளாட்டுக்கு வந்து, 'ராஜி டான்ஸ் ஆடு, பார்க்கிறோம்!' என்று உட்கார்ந்து விடுவார்கள்!" என்று ராஜஸ்ரீ சொல்லிக் கொண்டிருந்தபோதே பக்கத்து ஃப்ளாட் பெண்மணி வந்தார்.



"ராஜிம்மா. முப்பது ரூபாய் கொடு. என்னிடம் நூறு ரூபாயாக இருக்கிறது. சில்லறை இல்லை. ஆட்டோக்காரருக்குக் கொடுக்க வேண்டும்!" என்று அந்தப் பெண்மணி கேட்க, ராஜஸ்ரீ கொடுத்தார்.

— 'கருத்தம்மா' ராஜஸ்ரீ குமுறுகிறார்...

"எது மாதிரியான புத்தகங்கள் படிப்பீர்கள்?"

"ஹாரர், டெரர். இரண்டுமே ரொம்பப் பிடிக்கும். படித்து விட்டு இரவில் பயந்து கொண்டே தூங்குவேன். ஆனாலும் மறு நாள் அதுபோலவே தான் படிப்பேன்."

"காதல்?"

''படிப்ப

இல்லை. சோகமும் எனக்குப் பிடிக்காது."

"உங்களுக்குத் திருமணம் என்றெல்லாம் கூட செய்திகள் வந்ததே?"

"செய்தி வந்தது உண்மை. செய்திதான் உண்மையில்லை!"


"இப்படியொரு செய்தியைப் படித்தபோது என்ன நினைத்தீர்கள்?"

"பத்திரிகைக்காரர்களை நான் தப்பாகவே நினைப்பதில்லை. என் மேல் பத்திரிகைக் காரர்கள் மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள். அறிமுகமான முதல் படத்திலேயே அவார்டு வாங்கின இந்தப் பெண்ணைப் பற்றி அடிக்கடி செய்திகள் வெளியிட வேண்டுமென்று விரும்புகிறார்கள். மற்ற மொழிப் படங்களில் நான் நடிப்பது பற்றித் தமிழ் வாசகர்களுக்கு என்ன இன்ட்ரஸ்ட் இருக்க முடியும்? எனவேதான் - நான் தமிழ்ப் படங்களில் நடிக்கிற செய்திகளைப் போட முடியாமல் போவதால்தான் - குறைந்த பட்சம் இவளுக்குக் கல்யாணம் என்றாவது போடலாம் என்று போடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதனால் நான் அது போன்ற செய்திகளைப் பற்றித் தவறாகவே நினைப்பதில்லை!'' என்றார் சிரித்தபடி.

"கருத்தம்மாதான் உங்கள் முதல் படமா?"



என்னிடம் என்ன குறை? நான் அழகாக இல்லையா?



''நான் எந்தக் கட்சி சொல்லுங்க... பார்ப்போம்...''

''தெரியாதா... திட்டினாலும் அடிச்சாலும் அவமானம் பண்ணினாலும் நீங்க எப்பவுமே அம்மா கட்சிதான்...''

— ராஜி ராதா

"தமிழில் அதுதான் என்றாலும் கன்னடத்தில் அதற்கு முன் ஒரு படம் பண்ணியிருந்தேன். 'சந்தனகுடி' (சந்தனக் கோயில்) என்று பெயர்."

"அதைப் பார்த்துத்தான் பாரதிராஜா, உங்களைக் கருத்தம்மாவில் நடிக்க வாய்ப்புக் கொடுத்தாரா?"

"இல்லை. பாரதிராஜா சார் எனக்கு வாய்ப்புக் கொடுத்தது ஒரு பெரிய கதை. சொல்லட்டுமா?'' என்று தமது வலது கையால் முகத்தை முட்டுக் கொடுத்தபடி தலை சாய்த்துக் கேட்டார்.

"அதென்ன, மணிக்கட்டுக்குக் கீழே கன்றிப் போயிருக்கிறது?"

"பசி. அதனால் அடுப்பிலிருந்து குக்கரை அவசரப்பட்டுத் திறந்தேன். அப்போது குக்கரில் சுட்டுக் கொண்டு விட்டேன்."

"அடடா! சமையலில் பழக்கம் கிடையாதா?"

"நீங்கள் ரொம்பவும் தைரியமாக என் சமையலைச் சாப்பிடுவீர்கள் என்றால் இப்போதே நான் சமைத்துத் தரத் தயார்!'' என்றார் சிரித்தபடி..

"டயடிங்?"

''ஊகூம்... நான் சாப்பிடாமல் இருந்தால்தான் குண்டாகத் தெரிவேன். அதனால் சாப்பாட்டில் ஏதும் கட்டுப்பாடு வைத்துக் கொள்வதில்லை. இருந்தாலும் எனது எடை எப்போதுமே சராசரியாக 52 கிலோதான். சமயங்களில் ஒரு கிலோ கூடும் அல்லது குறையும். அதோடு சரி."

"சரி, கருததம்மாவுக்கு வருவோம்..."

"அப்பாவின் நண்பர் ஒருவர் பாரதிராஜா சார் புதுமுகத்தைத் தேடிக் கொண்டிருப்பதாகவும் எனது ஸ்டில்களைக் கொண்டு போய் அவரிடம் காட்டும்படியும் சொன்னார். என் அப்பாவும் மறுநாளே எனது ஸ்டில்களை எடுத்துக் கொண்டு பாரதிராஜா சார் ஆபீஸுக்குச் சென்றார்.

"சென்றவர் யாரிடமும் எதுவும் கேட்காமல் அங்கிருந்த நாற்காலியில் பேசாமல் உட்கார்ந்து விட்டார். ஒன்பது மணிக்குப் போனவர் மதியம் ஒரு மணி வரை அங்கேயே உட்கார்ந்திருந்திருக்கிறார். யாரும் இவரிடம் எதுவும் விசாரிக்கவில்லை. இவரும் எதுவும் பேசவில்லை.

"மதியம் ஒரு மணியானதும் வெளியில் போய் சாப்பிட்டு விட்டு மறுபடியும் பழைய படியே போய் உட்கார்ந்து கொண்டு விட்டார். அவரைப் பார்த்தவர்கள் பாரதிராஜா சாருக்கு வேண்டப்பட்டவர் போல் இருக்கிறது என்று பேசாமலேயே இருந்து விட்டார்கள்.

"மாலை ஆறு மணிக்கு மேல் ஆகிவிட்டது. மாடியிலிருந்து இறங்கி வந்த ஒருவர் என் அப்பாவைப் பார்த்து, 'நானும் காலையிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இங்கேயே உட்கார்ந்திருக்கிறீர்களே... என்ன விஷயம்? யாரைப் பார்க்க வேண்டும்?' என்று கேட்கவே என் அப்பா, 'நான் பாரதிராஜா சாரைப் பார்க்க வேண்டும்!' என்றிருக்கிறார்.

"அட, நான்தாய்யா பாரதிராஜா. என்ன விஷயம்?'' என்று அவர் கேட்க, எனது ஸ்டில்களைக் காட்ட, 'சரி சரி நாளைக்கு இந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு வாருங்கள்!' என்று சொல்லவே, மறுநாள் என் அப்பாவோடு நானும் போனேன். மேக்-அப் டெஸ்டெல்லாம் நடந்தது. அப்புறம் ஓ.கே! எனக்கும் அவார்டு கிடைத்தது. நல்ல பெயரையும் கௌரவத்தையும் கொடுத்தது."

"அப்படியிருந்தும் ஏன் தமிழில் உங்களுக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை?"

''அதுதான் ஏனென்று எனக்கும் தெரியவில்லை. என்னிடம் அழகில்லையா? என்னிடம் என்னதான் குறை? பார்க்கிற அனைவரும் 'கருத்தம்மா ராஜஸ்ரீயா? ரொம்ப நல்லா பண்ணியிருந்தம்மா' என்று சொல்கிறார்களே தவிர, வாய்ப்புத் தரமாட்டேன் என்கிறார்கள். இன்னும் சிலர் 'கருத்தம்மாவில் கறுப்பாக இருந்ததால் நேரிலும் அப்படி இருப்பாயோ என்று நினைத்தோம். ஆனால் பளிச்சென்று இருக்கிறாயே!' என்கிறார்கள். ஆனாலும் வாய்ப்புத்தான் தரமாட்டேன் என்கிறார்கள். என்ன காரணமாக இருக்கும்? நான் மாடர்ன் டிரஸ்களுக்குப் பொருந்த மாட்டேனா என்ன! நீங்களே சொல்லுங்கள்!' என்றார் ஆதங்கத்துடன் ராஜஸ்ரீ.

— **இளங்கோவன்**

அட்டை வண்ணப்படம் : **பிரவீண்குமார்**







1997 ஜூலை 13
ஈசுவர ஆனி 29
மலர் : 55
இதழ் : 50

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



சேலத்தில் எழுந்த சலசலப்புகள்!

'அன்று புதிய பொருளாதாரக் கொள்கையைக் கைவிடும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொண்ட தி.மு.க., இன்று அக்கொள்கையை வரவேற்றிருக்கிறது. மத்திய தொழில்துறை அமைச்சர் மாறன் சேலம் தி.மு.க. மாநாட்டில், அதை ஆதரித்துப் பேசியிருக்கிறார்.


அதே மாநாட்டில், தனித் தமிழ் ஈழம் என்கிற தீவிர நிலைக்கு ஆதரவு தருவதைக் கைவிட்டு, ஈழத் தமிழர் பிரச்னை குறித்துப் போராளிகளும் இலங்கை அரசும் பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தக் கொள்கை மாற்றங்கள் ஆரோக்கியமான, வரவேற்கத்தக்க அறிகுறிகளாகவே இருக்கின்றன.

"இருபத்தோராம் நூற்றாண்டில் ஜாதிகளற்ற தமிழ்ச் சமுதாயத்தைக் காண பாடுபடுவோம்..." என்று அன்பழகன் பேசியிருக்கிறார். பேராசிரியர் வெளியிட்ட இக் குறிக்கோளை முதல்வர் கருணாநிதியும் அழுத்தம் கொடுத்து ஆமோதித்திருக்கிறார்.

மாநாடு முடிந்த கையோடு, மாவட்ட, போக்குவரத்துக் கழகங்களுக்கு வைக்கப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்கள் எடுக்கப்பட்டு விட்டன. இதனால் ஜாதிக் கலவரங்கள் குறையும் என பல தரப்புத் தலைவர்கள் சொன்னதன் விளைவாக அரசு இம் முடிவை எடுத்திருக்கிறது.

மாநாட்டுத் தீர்மானத்தையும் இந்த நடவடிக்கையையும் வரவேற்கும் அதே நேரத்தில், இன்று




ஜாதியுணர்வும் வேறுபாடும் அபாயகரமான எல்லைகளைத் தொடுவதற்கான காரணங்கள் என்ன என்பதையும் ஆராய வேண்டியிருக்கிறது.

சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருந்தவர்கள் மேம்பட வேண்டும் என்ற உயர்நோக்கத்துடன் சலுகைகளும் ஒதுக்கீடுகளும் வழங்கப்படுவதை ஆதரித்த திராவிட பாரம்பரிய கட்சிகள், கூடவே உயர்ஜாதியினர் என்று கருதப்பட்டவர்களுக்கு எதிராக வெறுப்பையும் தூண்டி வளர்த்தன என்பது சரித்திர உண்மை. நாளடைவில், பார்ப்பன எதிர்ப்பு என்பது தேய்ந்து, அடங்கிப் போய்விட்டது. ஆனால் அரசியல்வாதிகளின் அந்தத் தவறான முன்னுதாரணம், இதர ஜாதியினரிடையே ஏற்றத்தாழ்வுகளும் வெறித்தனமான வெறுப்பும் நிரந்தரம் பெறக் காரணமாயிருக்கிறது. இன்று தென் மாவட்டங்களில் தேவர்களுக்கும் தேவேந்திரகுல வேளாளர்களுக்கும் இடையே மிருகத்தனமான பகையுணர்வு நிலவுகிறது என்றால் அதற்குக் காரணம் அரசியல்வாதிகள் ஆதியிலே ஊன்றிய பார்ப்பன ஜாதி வெறுப்பு என்ற விதைதான்!

வினை விதைத்ததால் வினை அறுத்துக் கொண்டிருக்கிற இந்தச் சோதனையான காலகட்டத்தில், மிகவும் விவேகத்துடன் அரசாங்கம் செயல்பட வேண்டும்.

ஆனால், முதல்வர் இது விஷயத்தில் சறுக்கியிருப்பதுதான் வேதனை ஏற்படுத்துகிறது. திருப்பத்தூர் எம்.எல்.ஏ. தொடர்பாக ஒரு சந்தேகத்தைக் கிளப்பிச் செய்தி வெளியிட்ட ஹிந்து நாளிதழை, ஜாதியுணர்வுடன் செயல்படுவதாகத் தாக்கியிருக்கிறார் முதல்வர். "ஜெயலலிதா - சு. சுவாமி சந்திப்புக்கு முதல் பக்க முக்கியத்துவம் தரும் 'பார்ப்பனப் பத்திரிகை' " என்று அவருக்கு மிகவும் பிடித்த பழைய பல்லவியை எடுத்துப் பாடியிருக்கிறார்.

இன்றைய பத்திரிகைகள், எப்போதும் சரியான செய்திகளை மட்டுமே நடுநிலையாகத் தருகின்றன என்று சொல்ல முடியாது. பல சமயங்களில் அவசரத்தினாலும் அஜாக்கிரதையினாலும் அவற்றில் தவறுகள் நடக்கின்றன. வேறு சில சமயங்களில் வேண்டுமென்றே கூட - பரபரப்புக்



கருதி - செய்திகள் திரிக்கப்பட்டும் ஒருதலைபட்சமாகவும் வெளியாகின்றன.

அத்தகைய தவறான செய்திகளை மறுத்து, உண்மை நிலையை மிகச் சுலபமாக அரசுத் தரப்பில் விளக்க முடியும். மாறாக, பத்திரிகைகளின் போக்கை ஜாதியுணர்வுடன் இணைத்துப் பேசுவதும் சுயபச்சாதாபம் தேடுவதும் ரசனைக் குறைவான விஷயங்கள். இதனால், 'முதல்வர், பத்திரிகைகளின் குரல்வளையை நெறிக்கப் பார்க்கிறார்' என்ற அவப்பெயர்தான் மிஞ்சும்!


ஜாதிகளற்ற சமுதாயம் என்ற கனவை மெய்ப்படுத்த ஆட்சியை அமைத்த முதல்வரே இப்படிப்பட்ட பேச்சுகளில் ஈடுபடுவது இரட்டிப்பு வருத்தம் அளிக்கிறது.

ஸ்டாலினை தமது வாரிசாக அறிவிப்பதற்காக மாநாடு கூட்டப்படவில்லை என்றும் கருணாநிதி அழுத்தம் கொடுத்துப் பேசியிருக்கிறார். அதே சமயம் ஸ்டாலின் தமது தகுதிக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப வளர்ச்சியுறுவதையும் தடுக்க முடியாது என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்திலும் பத்திரிகைகள் நடுநிலையோடு விளங்காமல், 'வாரிசு அரசியல்' என கிண்டல் பேசியிருப்பதை முதல்வர் கண்டித்திருக்கிறார்.

உட்கட்சி ஜனநாயகமும் கட்டுக்கோப்பும் உடைய ஒரு கட்சி தி.மு.க. என்பதை நாம் ஒப்புக் கொள்ளவே வேண்டும். அந்தக் கட்சியாளர்களின் இயல்பான தேர்வாக மு.க. ஸ்டாலின் அமைந்தால் நாம் குற்றம் காண முடியாது.

ஆனால் உலக இயல்புப்படி அது குறித்த விமர்சனங்கள் எழவே செய்யும். அவற்றை முதல்வரும் கட்சியின் பிற தலைவர்களும் எதிர்பார்க்கவும் பக்குவத்துடன் மறுக்கவும் பழகிக் கொள்வதே நல்லது.

உண்மை நிலையை ஆதாரபூர்வமாக விளக்குவதுதான் வெறும் பரபரப்பு நாடும் பத்திரிகைகளுக்குச் சரியான பதிலாக அமையும். உணர்ச்சிவசப்பட்ட வார்த்தைச் சிதறல்கள் அவற்றின் வெறும் வாய்க்கு மெல்லக் கொடுத்த அவலாக விளங்கும்.



• விருது வழங்கும் விழாவில்...

ஒரு சிவராத்திரி. காஞ்சி பரமாச்சார்யாள் பூஜை செய்து கொண்டிருக்கிறார். ஒரு பக்கமாக பக்தர்களுடன் பக்தையாக அமர்ந்து எம்.எஸ். பாடுகிறார்.

பூஜை முடிந்த பிறகு பெரியவாளிடமிருந்து ஆக்ஞை வருகிறது. சற்று முன் எம்.எஸ். பாடிய ஒரு பாடலைக் குறிப்பிட்டு, அதைத் திரும்பவும் பாடுமாறு சொல்லி அனுப்புகிறார்!

அந்தப் பாடல் 'ஸ்ரீ சண்முக ஜனக' என்று தொடங்கும், சங்கராபரண ராகத்தில் அமைந்த, மைசூர் சதாசிவராவ் இயற்றிய கீர்த்தனை. 'ஷண்மத ஸ்தாபகரான ஆதிசங்கரரால் பூஜிக்கப்பட்ட பாதங்களை உடையவனே' என்று சந்திரமௌலீசுவரரைத் துதிக்கும் பாடல்.


காஞ்சிப் பெரியவர் கடைசி வரை நின்றபடியே இமை மூடி, இசையிலும் பாடலின் பொருளிலும் லயிக்கிறார். சிவ பூஜைக்குப் பிறகு குரு பூஜையாக அந்த லயிப்பையே சமர்ப்பணமாக்குகிறார்.

எம்.எஸ். அவர்களோ தாம் ஜென்மமெடுத்ததே இந்தச் சில நிமிஷங்களுக்காகத்தான் என்ற எண்ணத்துடன், பாடும் போதே கரைந்துருகிப் போகிறார்.

இப்படி ஒன்றிரண்டல்ல, பெரியவாள் சந்நிதியில் எம்.எஸ். அவர்களுக்கு எத்தனையோ மெய்சிலிர்க்கும் அனுபவங்கள்.

எனவே, எண்ணற்ற பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றிருந்தபோதிலும் அண்மையில் வந்து சேர்ந்த, 'சுவர லய புரஸ்கார்' என்ற அமைப்பு வழங்கிய விருதையும் பரிசுத் தொகையையும் பெரியவாளின் நினைவுக்கே எம்.எஸ். காணிக்கையாக்கிய போது, அவருக்கு ஏற்பட்ட மனநெகிழ்ச்சியும் நிறைவும் விவரிக்க முடியாத ஒன்றாகத்தான் இருந்திருக்கும்.

அதற்கேற்ப அன்று தலைமைவகித்த கரன்சிங் அவர்களும், "இந்தப் பரிசுத் தொகையான ரூபாய் ஒரு லட்சமும் பெரியவாள் நினைவாக உருவாகிற மணி மண்டபத்துக்கே அளிக்கப்படுவதால் இந்த விருது வழங்கு விழா புனிதமடைகிறது" என்றார்.



• உருவாகும் மணிமண்டபம்

"சுவர லய புரஸ்கார் என்ற அமைப்பை புது தில்லியில் நிர்வகிப்பவர் கேரளத்து எம்.பி.யான எம்.ஏ. பேபி; விழாவுக்குத் தலைமை தாங்க வந்திருக்கும் நானோ காஷ்மீரைச் சேர்ந்தவன். ஆக, அகில இந்தியாவும் ஒன்றுபட்டு இந்த விருதை எம்.எஸ். ஸுக்கு வழங்குகிறது... வட இந்தியா பெரும் படையெடுப்புகளைச் சந்தித்துக் கொண்டிருந்த போது தென்னகம்தான் நமது கலைப் பொக்கிஷங்களைக் காப்பாற்றித் தந்தது. அதனால்

பாரதமே தென்னகத்துக்குக் 'கடமைப் பட்டிருக்கிறது...


"தேசியப் பறவை, தேசியக் கொடி, தேசிய கீதம் போல தேசிய பொக்கிஷம் ஒன்று உண்டென்றால் அது எம்.எஸ்.தான்..."

என்றெல்லாம் கூறி அவையோரின் கரவொலியுடன் கூடிய ஆமோதிப்பைப் பெற்ற டாக்டர் கரண்சிங், காஷ்மீர ராஜ பரம்பரையைச் சேர்ந்தவர். பேச்சிலும் சரி, தோற்றத்திலும் சரி ராஜ கம்பீரம் உடையவர். சிறந்த கலைஞர். அற்புதமாகப் பாடக்கூடியவர்.

"அவர் பாட்டை நான் கேட்டிருக்கேன். அந்தப் பாட்டு எப்படி இருக்கும்னா, அவர் எவ்வளவு அழகோ அத்தனை அழகாயிருக்கும்!" என்றார் செம்மங்குடி.

பெரியவாள் கேட்ட 'ஒன்ஸ் மோர்'!

"எம்.எஸ்ஸுக்கு பாரத ரத்னா மட்டும்தான் பாக்கி" என்று நினைவூட்டினார் ஃபிரண்ட்லைன் ஆசிரியர் ராம். "இன்றிலிருந்து ஐம்பது அல்லது நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் பல நாட்டினராலும் பேசப்படப் போகிற இந்தியர்கள் ஒருசிலர்தான் இருக்க முடியும். அவர்களில் ஒருவராக எம்.எஸ். நிச்சயம் இருப்பார்" என்றார்.



எம்.எஸ். சார்பில் நன்றி தெரிவிக்க வந்த சதாசிவம், தமக்கு வயது 95. எம்.எஸ்ஸுக்கு 81 என்பதை நினைவூட்டி விட்டு, கவர லய புரஸ்கார் அமைப்பின் எம்.ஏ. பேபியை நோக்கித் திரும்பி, "இந்த வயதில் எங்களுக்கு ஒரு பேபி கிடைத்திருக்கிறார்" என்ற போது அரங்கமே சிரிப்பில் அதிர்ந்தது!

விருதை ஏற்றுக் கொண்ட எம்.எஸ். ஒரு மணி நேரமாவது பாட மாட்டாரா என்று இசை அன்பர்கள் ஆர்வமுடன் எதிர்பார்த்தார்கள். ஆனால் இரண்டே கால் மணி நேரம் தெய்வபக்தியும் குருபக்தியும் தேசபக்தியும் இழைந்த கச்சேரி நிகழ்த்தி ரசிகர்களை மெய் மறக்கச் செய்தார்.

அகாதமி அரங்கில் உள்ள இருக்கைகளுக்கு ஏற்ப அழைப்பிதழ்களை ரசிகர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்ற அறிவிப்பு, காலை நாளிதழில் அச்சான மை காய்வதற்குள் அத்தனை அழைப்பிதழ்களும் 'பறந்து' போயின என்றால் அது எம்.எஸ்.ஸின் கச்சேரிக்காகத்தான் இருக்க முடியும்.

நிரம்பி வழிந்த அரங்கத்தில் ரசிகப் பெருமக்கள், கவனம் சிதறாமல் எம்.எஸ்.ஸின் குரலில் வெளிப்பட்ட ஒவ்வொரு அசைவையும் அனுபவித்து மகிழ்ந்தார்கள். அப்படி உன்னிப்பாகக் கவனித்தபோது 'க்ஷீரசாகர' இறுதியில் (மாயாமாளவ கௌளை) "காஞ்சிபுர வாஸினி கஞ்ச தளாயதாட்சி காமாட்சி" என்ற இடத்தில் நிரவல் செய்யும்போது எம்.எஸ். உணர்ச்சிவசப்பட, சில கணங்களுக்கு அவருக்குத் தொண்டை அடைத்துக் கொண்டதை கவனித்திருப்பார்கள். எம்.எஸ்.ஸோடு சேர்ந்து உருகாத உள்ளமும் இருந்திருக்காது; காஞ்சிப் பெரியவாளையும் அவரால் நாளும் பூஜிக்கப்பட்ட காஞ்சி காமாட்சியையும் நினைக்காத நெஞ்சமும் இருந்திருக்காது.

அத்தகைய மாமுனிவரின் நினைவாக உருவாகப் போகும் மணிமண்டபத்துக்கு எம்.எஸ். வழங்கிய ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையோடு நமது காணிக்கையும் சேர வேண்டாமா? காஞ்சி அருகே ஓரிக்கை கிராமத்தில் எழவிருக்கும் அந்த மணிமண்டபத்துக்கு இயன்ற அளவில் அவரவரும் நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி : S.S.S. M.M. Trust, 11, முதல் மெயின் ரோடு, கோட்டூர்புரம், சென்னை - 600 085. வருமானவரி விலக்கு உண்டு.

நானா மோசடி செய்தேன்?

சினிமா உலகில் பெயர், புகழ் பெருமையைப் போலவே பிரச்னை, சங்கடம், ஆபத்து இவையும் எப்போது, எப்படி வரும் என்று சொல்ல முடியாது.

"நாம் பாட்டுக்கு யாருக்கும் ஒரு தீங்கும் செய்யாமல் நம் வழியில் போய்க் கொண்டிருக்கிறோம். நமக்கு என்ன கெடுதல் வந்துவிடும்' என்று நினைக்க முடியாது! விதி விளையாட ஆரம்பித்தால் லேசில் நிறுத்தாது! ஒரு வழி பண்ணிவிட்டுத்தான் ஓயும்! இது என் அனுபவம்.

நான், ஏ.பி. என்னுடன் இணைந்து ஸ்ரீலட்சுமி பிக்சர்ஸ் என்ற கம்பெனி தொடங்கி, படம் எடுத்தது பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். அந்த பேனரில், மக்களைப் பெற்ற மகராசி படம் எடுத்து, அது சரித்திரம் காணாத வெற்றி கண்டதும் திரையுலகமே வியந்து என்னைத் திரும்பிப் பார்த்த சமயம் அது.

'வி.கே.ஆர், திறமையான நடிகர்; ஏ.பி.என். அற்புதமான டெக்னீஷியன். இவர்கள் தொடங்கியுள்ள லட்சுமி பிக்சர்ஸ் பேனர் நல்ல ராசி உள்ளதாயிருக்கிறது. இந்த பேனரில் வருகிற படங்கள் எதுவாயினும் நிச்சயம் வெற்றி காணும்' என்று விநியோகஸ்தர்கள் எத்தனை பணம் தரவும் அப்போது தயாராக இருந்தார்கள்.

இதை உபயோகப்படுத்திக் கொண்டே, சில நலிவுற்ற கலைஞர்களுக்கும் நண்பர்களுக்கும் உதவலாமே என்று நினைத்தேன்.

எப்படி உதவுவது?

திரையுலகில் எனது நண்பர்களாக உள்ள சிலருக்கும் நலிவுற்ற சிறு கலைஞர்களுக்கும் என் யூனிட் மூலம் படம் செய்து தருவது என்று முடிவு செய்தேன்.

அதாவது, கம்பெனியின் பெயர் வேறு வேறாக இருக்கும். தயாரிப்பாளர்கள் வேறு வேறு நபர்கள். ஆனால் டெக்னீஷியன்கள் அத்தனை பேரும் எங்கள் யூனிட்காரர்கள்.



• ஏ.பி.நாகராஜன்

விஜயரங்கம் என்றொரு கேமராமேன். கோபால் என்றொரு எடிட்டர். இவர்கள் இருவரும் கூட்டாகத் தொடங்கிய கம்பெனி விஜய கோபால் பிக்சர்ஸ். இவர்களுக்கு அகிலனின் பாவைவிளக்கைப் படமாக எடுத்துத் தருவது என்று தீர்மானித்தோம்.

இதேபோல் ஸ்ரீராம் என்கிற தயாரிப்பாளருக்காக சிவாஜி - சரோஜாதேவி நடிக்க ஜீவ பூமி என்றொரு படம்!

ஏழுமலை செட்டியார், யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை கூட்டாகத் தயாரிக்க, மாதா பிதா குரு தெய்வம் என்கிற படம்;

முத்துராமலிங்கம், கே.வி. மகாதேவன், வயலின் மகாதேவன், பாடலாசிரியர் மருதகாசி இவர்களுக்காக எம்.எம். பிக்சர்ஸ் என்ற பேனரில் அல்லி பெற்ற பிள்ளை என்றொரு படம்....

இப்படி சுமார் பத்துப் படங்கள், வெவ்வேறு கம்பெனி பெயர்களில் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் தொடங்கப்பட்டு, படப்பிடிப்பு ஆரம்பமானது.

'அத்தனை படங்களுக்கும் ஏ.பி. நாகராஜனின் கதை, கே. சோமுவின் டைரக்ஷன், மருதகாசியின் பாடல், கே.வி. மகாதேவனின் இசைதான்!

இதில் கவனிக்க வேண்டிய விஷயம், இப்படங்களின் தயாரிப்பாளர்களோ, நானோ, ஏ.பி.என்னோ - ஒரு பைசாகூட முதல் போடவில்லை. வி.கே. ஆர் - ஏ.பி.என்னின் லட்சுமி பிக்சர்ஸ் யூனிட் பணியாற்றுகிறது; அதனால் வெற்றி நிச்சயம்' என்று கருதி விநியோகஸ்தர்கள் போட்டி போட்டுக் கொண்டு கொடுத்த அட்வான்ஸ் பணத்திலேயே இப்படங்கள் வளர்ந்தன.

சொன்னால் நம்பமாட்டார்கள். ஒரு வெற்றிகரமான நகைச்சுவை நடிகனாக அந்நாளில் என் மேல் விழுந்த முத்திரை எனக்கு

எக்கச்சக்கப் பட வாய்ப்புகளைக் கொண்டு குவித்த வண்ணம் இருந்தது. நான் நினைத்திருந்தால், அத்தனை வாய்ப்புகளையும் ஏற்றுக் கொண்டு, கோடிக்கணக்கில் சம்பாதித்திருக்க முடியும்.



●●●

“நீங்கள் மைசூரில் ஒருவரை ஏமாற்றி நிறையப் பணம் வாங்கி மோசடி செய்திருக்கிறீர்கள்! புகார் வந்திருக்கிறது. உங்களை விசாரிக்க வேண்டும்!” என்றனர் போலீஸார்.

●●●

ஆனால் நண்பர்களுக்கு உதவுவது என்று முடிவெடுத்து விட்டதால், வந்த அத்தனை வாய்ப்புக்களையும் மறுத்து, ஆரம்பித்த அந்த சுமார் பத்துப் படங்களில் மட்டும் இரண்டு வருட காலம் தீவிரமாக மூழ்கிப் போனேன். அன்று சினிமாவில் யாருமே போகாத லொக்கேஷன்களுக்குச் சென்று படப்பிடிப்பு நடத்த வேண்டும் என்று முடிவு செய்தோம்.

நாலைந்து படங்களுக்கான பணிகளை மொத்தமாக எடுத்துக் கொண்டு டெல்லி, ஆக்ரா, பதேஃபூர், சிக்ரி போன்ற முகலாய மன்னர்கள் கோட்டை கட்டி ஆண்ட பிரதேசங்களுக்கு முதல்முறையாகச் சென்று படப்பிடிப்பு நடத்தினோம்!

ஒரே சமயத்தில் நாலைந்து படங்கள்! ஒரே டெக்னீஷியன்கள்! எனில் வேலைச்சுமை எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

ஆனால், நம்மால் சிலருக்குப் பயன் விளையப் போகிறது என்கிற உற்சாகம் காரணமாக அந்தச் சுமை அப்போது பெரிதாகத் தெரியவில்லை!

ஆரம்பித்த படங்களில் ஒருசில நின்று போயின - தவிர்க்க முடியாத சில காரணங்களால். (அவற்றின் தயாரிப்பாளர்கள் 'உற்சாக மிதப்பில்' போதிய கவனம் செலுத்தாதது முக்கியக் காரணம்) சில படங்கள் தயாராகி, வெளியாகி வெற்றி கண்டன.

இந்தக் கால கட்டத்தில்தான் ஏ.பி. நாகராஜன் என்னை விட்டுப் பிரிந்து போனதும் லட்சுமி பிக்சர்ஸ் நிறுவனத்தை நானே நடத்த வேண்டி வந்ததும் நடந்தது. (இது குறித்து விரிவாக முன்பே சொல்லியிருக்கிறேன்.)

நாகராஜன் இல்லாத நிலையில், நானே ஆரம்பித்த ஒரு படம் 'பம்பாய் பாபு'!

சிவாஜி - வாணிஸ்ரீ நடிக்க, ஏ.சி. திருலோகசந்தர் டைரக்ஷனில் தொடங்கப்பட்ட அந்தப் படம், சுமார் ஏழாயிரம் அடி வரை வளர்ந்த பின் பல காரணங்களால் நின்று போனது.

என் தம்பிதான் அப்போது கம்பெனியின் நிர்வாக விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். எனக்கு அதெல்லாம் கட்டுப் போட்டாலும் வராது. கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்கிற மிகத் திறமைசாலியான மானேஜரின் உதவியோடு நடந்து கொண்டிருந்தது என் லட்சுமி பிக்சர்ஸ்.

பம்பாய் பாபு நின்று போன அதிர்ச்சியிலும் துக்கத்திலும் நான் பிரமை பிடித்தவன் போல இருந்து கொண்டிருந்த காலம். ஒருநாள் என் அலுவலகத்துக்கு ஒரு போன் வந்தது.

மானேஜர் எடுத்தார். "யார் பேசறதுங்க?"

"வி.கே.ஆர் இருக்காரா? ஒரு படத்துக்கு அவரை புக் பண்ணணும்!" என்றது எதிர்முனை.

"நேரில் வாங்க" என்றார் கிருஷ்ணமூர்த்தி ஐயர்.

ஆனால் அவர்கள் வரவில்லை.

மறுநாள் மறுபடி போன்.

"வி.கே.ஆர். இருக்கிறாரா?"

"என்ன விஷயம்?"

"ஒரு படத்துக்கு புக் பண்ணணும்."

"நேர்ல வரச் சொன்னோமே?"

வருவதாகச் சொன்ன அவர்கள் இம்முறையும் வரவில்லை.

மூன்றாவது நாள்.. மறுபடி போன். மறுபடி வி.கே.ஆர் இருக்காரா?

வி.கே. ராமசாமி



''நேத்து மீட்டிங்கில் பேசினப்போ தலைவர் ரொம்பவே உளறித் தொலைச்சுட்டாராமே...''

''ஆமாம்... ஊழல் பெருச்சாளிகளை ஒழிக்க இலவசமாக எலிப்பொறி வழங்கும் திட்டம் விரைவில் அமுலாக்கப்படும்...னு்னு அறிவிச்சார்...!''

- ஜெயா ப்ரியன்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

இது என்ன புதுசா இருக்கே என்று நான் கொஞ்சம் ஆச்சர்யப்பட்டேன். மனசில் ஏதோ ஒரு குரல், எங்கோ சரியில்லை; பிரச்னை வரப் போகிறது என்று காரணமில்லாமல் அலறிக் கொண்டிருந்தது.

''இதோ பாருங்கள். வி.கே.ஆரை புக் பண்ண வேண்டுமென்றால் நேரில் வாருங்கள். இப்படி தினமும் போனில் கூப்பிட்டுக் கூப்பிட்டு 'வி.கே.ஆர் இருக்காரா?' என்று மட்டும் கேட்டால் என்ன அர்த்தம்?'' என்றார் என் மானேஜர்.

''சரி, வருகிறோம்'' என்று போன் வைக்கப்பட்டது.

மறுநாள் மாலை நாலு மணிக்கு மூன்று பேர் என் அலுவலகத்துக்கு வந்து, தாங்கள் புதிய தயாரிப்பாளர்கள், எடுக்கப் போகிற படத்துக்கு வி.கே.ஆரை புக் பண்ண வேண்டும்; அவர் இருக்கிறாரா என்று கிருஷ்ணமூர்த்தி ஐயரிடம் கேட்டார்கள்.

அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு, உள்ளே வந்து என்னிடம் தகவல் சொன்னார் ஐயர்.

நான் வந்தேன். வந்தவர்களை வரவேற்று, உபசரித்துவிட்டு, ''என்ன விஷயம்?'' என்று கேட்டேன்.

''ஒரு படம் தொடங்குகிறோம். அதில் நீங்கள் நடிக்க வேண்டும். அது குறித்துப் பேச வேண்டும்'' என்றனர்.

''சரி, பேசுங்கள்''

''நாம் தனியாகப் பேச வேண்டும். உங்கள் மானேஜரைச் சற்று உள்ளே போகச் சொல்லுங்கள்.''

எனக்கு வியப்பு. ''படம் குறித்துப் பேசுவதென்றால் மானேஜரிடம்தான் முதலில் பேச வேண்டும். பண விஷயத்திலிருந்து, கால்ஷீட் விஷயம் வரை அவர்தான் முடிவு செய்து சொல்வார். ஆகவே அவர் இருப்பதில் தப்பில்லை'' என்றேன்.

''இல்லை இல்லை. இது நாம் மட்டும் பேச வேண்டிய விஷயம். தயவு செய்து உங்கள் மானேஜரை உள்ளே போகச் சொல்லுங்கள்''

எனக்குள் கேட்டுக் கொண்டிருந்த அந்த அபாயக்குரல் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தது.

'இவர்கள் சரியில்லை. ஏதோ சிக்கல் வரப் போகிறது'

சரி, அதையும் பார்த்து விடுவோம் என்று என் மானேஜருக்குக் கண்ணைக் காட்டினேன். அவர் உள்ளே போய்விட்டார்.

''இப்போது சொல்லுங்கள். என்ன விஷயம்?'' என்றேன் நேரடியாக.

வந்திருந்த மூவரும் தமக்குள் ஒருவரை ஒருவர் ஒருதரம் பார்த்துக் கொண்டார்கள். பின் ஒருவர் தொண்டையைச் செருமிக் கொண்டு சொன்னார். ''மிஸ்டர் வி.கே.ஆர், நாங்கள் தயாரிப்பாளர்கள் இல்லை. படத்தில் புக் பண்ணவும் வரவில்லை!''

''பின் நீங்கள் யார்?'' என்றேன் வியப்பு மாறாத குரலில்.

''போலீஸ்!'' என்றார்கள்.

அதிர்ச்சியடைந்தேன். போலீஸ் என்னைத் தேடி ஏன் வர வேண்டும்? 'கொலை, கொள்ளை, ஏமாற்று வேலை எதன் பக்கமும் நான் தலை வைத்துப் படுத்தவன் இல்லையே!

''இல்லை! நீங்கள் மைசூரில் ஒருவரை ஏமாற்றி நிறையப் பணம் வாங்கி மோசடி செய்திருக்கிறீர்கள்! புகார் வந்திருக்கிறது. உங்களை விசாரிக்க வேண்டும்!''

நான் மேலும் அதிர்ந்தேன். மைசூரில் ஒருவரை ஏமாற்றினேனா? நான் எங்கே மைசூர் போனேன்?

''அதெல்லாம் தெரியாது! அஸிஸ்டெண்ட் கமிஷனர் உங்களை விசாரிக்க விரும்புகிறார். உடனே வர வேண்டும்'' என்றனர் கறாராக.

''நான் யாரையும் மோசடி செய்யவில்லை. நம்புங்கள்...'' என்று பேச ஆரம்பித்ததும், ''அதெல்லாம் கமிஷனர் ஆபீஸுக்கு வந்து சொல்லிக் கொள்ளுங்கள்'' என்றார்.

'பாம்பைக் கண்டால் படை நடுங்கும்' என்பார்கள். அதேபோல் போலீஸைக் கண்டால் எத்தனை உலக விஷயம் அறிந்தவனும் நடுங்கியே தீருவான் என்பதற்கு நானொரு உதாரணம்.

எனக்கே தெரியவில்லை. யாரை எப்போது ஏமாற்றினேன் என்று.

மோசடி வழக்கில் விசாரிக்க திடீரென்று கூட்டிப் போகிறார்கள் என்றால்?

உதறலும் குழப்பமும் பற்றிக் கொள்ள, பதைக்கும் நெஞ்சுடன் உதவி கமிஷனரைச் சந்திக்கப் போனேன் என் மானேஜருடன்.


அங்கு அவர்கள் சொன்ன தகவல்...

அப்பப்பா! நான் மூர்ச்சை அடைந்து விழாத குறை!

(தொடரும்)

மும்பை மசாலா :

ஒளிமயமான எதிர்காலம்...



கையூட்டுப் பெறும்போது கையும் களவுமாகப் பிடிபட்டும் கூட, கையை வீசிக் கொண்டு ராஜநடை பயிலுகிறார்கள் அரசாங்க "லீகல் மெட்ராலஜி" துறையைச் சார்ந்த இன்ஸ்பெக்டர் டேக்லேவும், ப்யூன் பாட்டீலும். கடைகளிலுள்ள 'எடை', டாக்ஸிகளின் 'மீட்டர்', பெட்ரோல் பம்ப்களின் 'டாங்க்' முதலியவற்றை அவ்வப்போது 'செக்' பண்ணும் வேலையில், செக்காக இல்லாமல் கேஷாகவே சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கறப்பதென்பது இவர்களுக்கெல்லாம் கைவந்த கலைதான்' ஆனால் இதற்கென்று ஓர் இடைத்தரகரை நியமித்து லஞ்சக் கலைக்கு ஒரு லாவண்யம் சேர்க்கப் பார்த்த போதுதான் பிடிபட்டு விட்டார்கள். அந்தேரி பகுதி வியாபாரிகளிடையே இது சந்தோஷ அலைகளைப் பரப்பியும் கூட இன்று வரை ஒரு டிஸ்மிஸல், ஒரு சஸ்பென்ஷன், குறைந்தபட்சம் ஒரு ட்ரான்ஸ்ஃபர் கூட இல்லை! இத்தனைக்கும் இவர்கள் வேலையில் இன்னும் நிரந்தரமாகக் கூட இல்லை. இந்த நிலையிலேயே இவ்வளவு கில்லாடிகளாயிருப்பவர்கள், பிற்காலத்தில் எப்படிப் "பிரகாசிப்பார்கள்" என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

பணம் கொழிக்கும் போலீஸ் துறை!

மாமூல் விஷயங்கள்

குடிசைப் பகுதிகளில் போஸ்டிங் என்பது மும்பை போலீஸ்காரர்களுக்குப் பொன் முட்டையிடும் வாத்து சமாசாரம். குடியிருப்புகள், கடைகள், ஓட்டல்கள், வீடியோ பார்லர்கள் என்பதிலிருந்து, நைட் ஷிப்ட் முடிந்து லேட்டாக வீட்டுக்கு வரும் அப்பாவிகள் வரை, எல்லாவற்றிலும் [illegible] விரோதமாக ஏதாவது இவர்களுக்கு 'மாட்டும்'. சில்லறை [illegible]றுகள் செய்பவர்களிடமிருந்து வரும் "சில்லறை" வகையில், இவர்களுக்கு ஒரு மாதத்திய உபரி வருமானம் - கான்ஸ்டபிள்களுக்கு 1.5 - 3 ஆயிரங்கள்; சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு 3-5 ஆயிரங்கள், இன்ஸ்பெக்டர்களுக்கு 20-26 ஆயிரங்கள், ஸீனியர் இன்ஸ்பெக்டருக்கோ ஒரு லட்சம்! வருவாயைப் பெருக்கும் முயற்சியில், போலீஸ்காரர்கள் அதீத கற்பனை வளத்துடன் செயல்படுகிறார்கள். மழைக் காலத்தில் தங்கள் கூரைகளுக்கு "வாட்டர் ப்ரூஃபிங்" செய்து கொள்வதையும் சட்டவிரோதமான செயலாக்கி அண்மையில் கலீனாப் பகுதியில் வசிப்பவர்களிடம் எக்கச்சக்கமாக வசூலித்திருக்கிறார்கள்! முன்பெல்லாம் வாரம் ஒருமுறைதான்; இப்போது தினந்தோறும் வசூல்! மும்பை போலீஸ் ஸ்டேஷன்களின் ஒரு மாதத்திய வசூல் கிட்டத்தட்ட ஆறிலிருந்து ஏழு லட்சங்களாம்! இதை மாமூலான விஷயம் என்று ஒதுக்க முடியுமா?

பழைய டப்பா புதிய பெயிண்ட்

கிழவியை இளம்பெண்ணாக்கி மணவறைக்கு அழைத்துச் சென்ற கதையாக, டப்பாவுக்குள் படுத்துவிட்ட பழைய பாடாவதிப் படங்களை எல்லாம் புதிய நாமகரணமிட்டு, புதுசு போல் ரிலீசாக்குவது பாலிவுட்டின் லேட்டஸ்ட் தில்லுமுல்லு. கடந்த ஆறு மாதங்களில் இப்படி எட்டுப் படங்கள் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளன! உதாரணமாக, ஷாருக்கான் ஊர்மிளா நடித்து, முதலில் ரிலீசான போது எந்த சமத்காரத்தையும் காட்டாத "சமத்கார்", 'மைஹூ"ன்பாஜிகர்' என்ற பூதாகரத் தலைப்பில் (கீழே மைக்ரோஸ்கோபிக் எழுத்துக்களில் "இன் சமத்கார்") தியேட்டர்களில் ரிலீசாகும்! 'நமக்குத் தெரியாமல் புதுப்படமா' என்ற வெறியுடன் டிக்கெட் வாங்கும் கும்பலுக்கா பஞ்சம்? உள்ளே சென்று நாலு ஸீன் முடிந்தவுடன் விழித்துக் கொள்பவர்களில், முகத்தில் வழிவதைத் துடைத்துக் கொள்பவர்கள் பலர்; ஆனால் சிலிர்த்தெழுந்து, MRTP (Monopolies & Restrictive Trade Practises) Act யின் கீழ் இது மஹா பெரிய ஏமாற்று வேலை என விஷயத்தை கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குச் சிலர் இழுத்திருக்கிறார்கள்!

மும்பையிலிருந்து :

ஜெயஸ்ரீ ராஜ்

‘படத்தைப் போடுங்க...’ ‘அட, முடிஞ்சி போச்சுங்க...’



ஜெர்மனியில் ஒபர்ஹாசன் என்று ஒரு நகரம். சென்ற ஏப்ரல் மாதம் 24-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை அங்கே சர்வதேச குறும்பட விழா நடைபெற்றது. (ஷார்ட் ஃபிலிம்ஸ் என்பதைக் குறும்படம் என்றுதான் இப்போது எல்லா இடங்களிலும் குறிப்பிடுகிறார்கள்.)

இருபத்தைந்து நாடுகளிலிருந்து எழுபது படங்கள் போட்டியிட்டன. ஐந்து பேர் அடங்கிய நீதிபதிகள் குழு. செக், ஜெர்மனி, பிரிட்டன், ஃபிரான்ஸ், இந்தியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அக்குழுவில் இடம் பெற்றார்கள். இந்தியாவின் ஒரே பிரதிநிதியாக அந்த விழாவில் கலந்து கொண்டு நீதிபதியாகவும் இருந்த பெருமையைப் பெற்றவர் ஏ.வி. ராஜகோபால். சென்னையில் முன்னணி ஆடிட்டராக இருக்கும் இவர் திரைப்படச் சங்கங்களோடு தம்மை இணைத்துக் கொண்டவர் என்பதை விட பிணைத்துக் கொண்டவர் என்பதுதான் சரி. தற்போது சர்வதேச திரைப்படச் சங்கங்களின் சம்மேளனத்தில் மத்திய குழு உறுப்பினர்.

• ஏ.வி. ராஜகோபாலும் குறும்பட விழா நடைபெற்ற அரங்கும்..

'சினிமா பார்ப்பது கூட ஒரு கலைதான்' என்று தமது அனுபவங்களைச் சொன்னார் :

முதல்நாள் நான் ஒபர்ஹாசன் சென்று சேர தாமதமாகி விட்டது. என்வே நான் முதல்நாள் பார்க்க முடியாமல் போன படங்களை எனக்காக ஓர் அதிகாரி பிரத்யேகமாக வீடியோவில் போட்டுக் காட்டினார். குறும்படம் என்பது அதிக அளவு 35 நிமிடங்கள் வரை போகலாம் என்பது விதி. எவ்வளவு குறைவாகவும் இருக்கலாம். ஒரு நிமிடம் கூட இருக்கலாம். ஆனால் 35 நிமிடங்களுக்கு அதிகமாக நீளம் இருக்கக் கூடாது.

ஒரு படம் ஸ்விட்சர்லாந்து நாட்டு தயாரிப்பு. படத்தின் பெயர் 'பாஸ்டு ஆன் இன்ஃபர்மேஷன்.' (Passed on information) அதை அந்த அதிகாரி போட்டு வீடியோவை ஆன் செய்ததும் டைட்டிலில் காணப்பட்ட தயாரிப்பு, இயக்கம் போன்ற விவரங்களைப் பார்த்து விட்டுச் சில வினாடிகள் குனிந்து அவற்றை என் குறிப்பேட்டில் எழுதிக் கொண்டு விட்டு நிமிர்ந்து பார்த்தேன். வீடியோவில் ஒரே கறுப்பு வெள்ளைக் கோடுகளாக இருந்தது. 'சரிப்படுத்துங்கள். டேப்பில் ஏதோ கோளாறோ?' என்று சொன்னேன். அதிகாரி சிரித்துக் கொண்டே, 'படம் எப்போதோ முடிந்து விட்டது' என்றார். நான் டைட்டில் விவரங்கள் குறித்துக் கொண்டிருந்த சில வினாடிகளில் படம் முடிந்து விட்டது. மொத்தம் நாற்பது வினாடிகள் மட்டுமே. இவ்வளவு சிறிய குறும் படத்தை நான் அதுவரையில் பார்த்ததே இல்லை. ஆச்சரியப்பட்டு படத்தை மீண்டும் போடச் சொன்னேன். நல்ல நகைச்சுவைப் படம்.


ஒரு பெரிய சோதனைச் சாலையில், ஆங்காங்கே 'ரகசியம்', 'பாதுகாப்பான இடம், உள்ளே வர அனுமதி இல்லை' என்பது போன்று நிறைய போர்டுகள். ஒரு விஞ்ஞானி இவற்றைத் தாண்டி உள்ளே போகிறார். நிறைய முட்டைகள் அடுக்கப்பட்ட ஒரு ட்ரேயை எடுத்துப் பார்க்கிறார். எல்லா முட்டைகளும் விரிசல் விட்டிருக்கின்றன. திரும்பிப் பார்க்கிறார். முட்டைகளிலிருந்து வெளிவந்த குஞ்சுகள் அணிவகுத்து அங்கே போய்க் கொண்டிருக்கின்றன. இவ்வளவுதான் படம்.

'ஸ்பெஷல் மென்ஷன்' என்று சிறப்புப் பாராட்டுக்கு இப்படத்தை நாங்கள் தேர்ந்தெடுத்தோம்.

முதல் பரிசு ஸ்பாரோ (sparrow) என்ற இர்கிஸ்தான் நாட்டு படத்துக்கு கிடைத்தது.

நமது கேரளாவிலிருந்து ஒரு படம் வந்திருந்தது. அதன் இயக்குநர் ராஜன் என்பவரும் வந்திருந்தார். அழகாகச் செய்திருந்தார். ஒரு பெண் மருத்துவ சிகிச்சையின் பின் ஆணாக மாறுகிறாள். இந்த மாற்றம் 'அவன்' குடும்ப உறுப்பினர்களிடையே என்னென்ன மன உளைச்சலை, ரியாக்‌ஷனை ஏற்படுத்துகிறது என்பதுதான் மையக் கருத்து. ஒரு துளி ஆபாசமில்லை. சிகிச்சையைக் காட்டுகிறோம் என்ற போர்வையில் ஆண் பெண் அங்கங்களின் மேல் காமிரா கண் சிமிட்டக் கூட இல்லை. அதற்கும் 'ஸ்பெஷல் மென்ஷன்' கிடைத்தது.

— ராணிமைந்தன்



''ஆடு மாடெல்லாம் நின்னு ரேடியோ நியூஸ் கேட்க ஆரம்பிச்சிடுச்சே... ஏன்?''

''கால்நடை தீவன வழக்கில், லேட்டஸ்ட் என்னென்னு தெரிஞ்சுக்கிற ஆர்வம்தான்...!''

— ராஜிராதா

நம்பினோர் கெடுவதில்லை

வலம்புரி ஜான்

பாபிலோனியா நாட்டை நெபுகாத் நெசார் என்கிற மன்னர் ஆண்டு வந்தான். இவன்தான் உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு பூந்தோட்டத்தை உருவாக்கியவர். யூதேயா நாட்டிற்கு எதிராக நெபுகாத் நெசார் நடத்திய போரில் பல கைதிகள் பிடிபட்டார்கள். அவர்களில் தானியேல், அனனியா, மிசாவேல், அசரியா என்பவர்களும் இருந்தார்கள். இவர்கள் நான்கு பேரும் நண்பர்கள். எல்லோருமே அறிவில் சிறந்தவர்கள். இவர்களில் தானியேல் ஞானியாகவே இருந்தார். புறத்திலிருந்து வருவது அறிவு; தன்னிலிருந்து தானே விளைவது ஞானம் என்ற பொன்மொழிக்கு ஏற்ப தானியேலின் வாழ்க்கை அமைந்திருந்தது. கனவுகளுக்குப் பலன் சொல்லுவதில் தமக்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த யோசேப்பை விஞ்சியிருந்தார் தானியேல்.

நெபுகாத் நெசார் தனது ஆட்சியின் இரண்டாவது ஆண்டில் கனவுகள் சில கண்டு உறக்கமின்றித் தவித்தான். ஆகவே தனது ஆட்சிக்கு உட்பட்ட ஞானிகள், மந்திரவாதிகள், சூன்யக்காரர்கள் எல்லோரையும் அழைத்தான். அவர்களிடம் தான் கண்ட கனவையும் அதன் அர்த்தத்தையும் சொல்லுமாறு கேட்டான், அவர்களோ 'கனவைச் சொல்லுங்கள் அரசே!' என்று மீண்டும் மீண்டும் கேட்டார்கள். ஆகவே ஆத்திரமடைந்த மன்னன் தேசம் முழுவதிலும் உள்ள ஞானிகள், மந்திரக்காரர்கள் ஆகியோரின் தலைகளை வெட்டும்படி ஆணையிட்டான். தானியேலும் அவரது நண்பர்களும் அரச கட்டளைக்கு அஞ்சி, தங்களுக்கு மறைபொருளை அறிகிற ஞானத்தைத் தருமாறு கர்த்தரிடம் கையேந்தினார்கள். காரணம் முன்பெல்லாம் அரசர்கள் தாங்கள் கண்ட கனவுகளைச் சொல்லுவார்கள்; அதற்கு ஞானிகள் பொருள் விளக்குவார்கள். நெபுகாத் நெசார் வித்தியாசமான ஆள். தான் கண்ட கனவையும் சொல்லி அதற்குப் பொருளும் சொல்ல வேண்டும் என்று கேட்டான். ஆகவேதான் தானியேலும் அவரது நண்பர்களும் பயந்து நடுங்கினார்கள்.

தானியேல் அரசவைக்குக் கொண்டு வரப்பட்டார். "அரசே! கனவைச் சொன்னால் பொருள் சொல்லலாம்; கனவையே சொல்லச் சொன்னால்,



வெளிச்சத்தின் விலாசம் - 14

வல்லாதி வல்லவரான இறைவனின் அருள் இறங்காவிட்டால் இது சாத்தியமில்லை'' என்று சொல்லிவிட்டுத் தமது கைகளை உயர்த்தி வேண்டுதல் நடத்தினார். பிறகு நெபுகாத்நெசாரின் அரசாட்சிக்கு நிகழப் போவதையும், அதற்குப் பிறகு வருகிற அரசகளுக்கு நேரப் போவதையும் தானியேல் விளக்கினார். தான் கண்ட கனவைக் காட்சி மாறாமல் அப்படியே சொன்னது மாத்திரமல்லாமல், அதன் உட்பொருளையும் ஒரே நிமிடத்தில் சொல்லிவிட்ட தானியேலின் பாதங்களில் நெபுகாத் நெசார் வீழ்ந்தான்; வணங்கினான். அவருக்குக் காணிக்கைப் பொருட்களைப் படைத்துத் தூபமிடுமாறு ஆணையிட்டான். மேலும் அரசன் தானியேலை நோக்கி, "நீர் வணங்கும் கடவுளே தெய்வங்களுக்கெல்லாம் கடவுள்; அரசர்களுக்கெல்லாம் ஆண்டவர்; அவர் ஒருவரே மறைபொருட்களை வெளிப்படுத்துகிறவர்'' என்று உரக்கக் கூவினான். நெபுகாத் நெசார், தானியேலை பாபிலோனியாவின் ஆளுனராக நியமித்தான். அவரது நண்பர்களுக்கும் பல பதவிகள் கிடைத்தன.

பிறகு நெபுகாத் நெசார் அறுபது முழ உயரமும், ஆறு முழ அகலமுமான பொற்சிலை ஒன்றைச் செய்வித்து தூரா என்கிற பள்ளத்




தாக்கில் நிறுத்தினான். சிற்றரசர்கள், ஞானிகள், மக்கள் எல்லோரும் வாத்தியக் கருவிகள் இசைக்கப் பெறும்போது அந்தப் பொற் சிலையை அடிபணிந்து வணங்க வேண்டு மென்று ஆணையிட்டான். எல்லோரும் வணங்கினார்கள். ஆனால் தானியேலின் மூன்று நண்பர்களும் அரசனுடைய கட்ட ளைக்கு அடிபணியவில்லை. ஆகவே அந்த மூன்று நண்பர்களையும் குண்டுக்கட்டாகக் கட்டி நெருப்பில் போடுமாறு அரசன் ஆணை யிட்டான். நெருப்பை ஏழு மடங்கு அதிகமாக வைக்கும்படியாகவும் அரசன் உத்தரவிட் டான். தீச்சூளையில் இறக்கப்பட்டவர்கள் மூன்று பேராக இருக்க, அரசனின் பார்வைக்கு அவர்கள் நான்கு பேராகத் தெரிந்தார்கள். ஆச்சரியப்பட்ட அரசன் அவர்களைத் தீச் சூளையிலிருந்து வெளியேறும்படி ஆணையிட் டான். அவர்களோ அருவியில் குளித்த ஆனந்தத்தோடு வெளியில் வந்தார்கள். அந்த நாலாவது ஆள் தேவதூதன் என்று நெபுகாத் நெசார் அறிந்து கொண்டு தானியேலின் நண்பர்களை நோக்கி, "உங்கள் இறைவனே உண்மையான கடவுள். ஆகவே அந்த இறைவனுக்கு எதிராகப் பேசும் எவரும் கண்டதுண்டமாக வெட்டப்படுவார்கள். அவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்த அவரது ஊழியர்களை அவரது தேவ தூதனை அனுப்பி அவர் காப்பாற்றினார்" என்றான்.

இரண்டாவது முறையாக நெபுகாத் நெசார் ஒரு கனவினைக் கண்டு கலங்கினான். அப்போதும் தானியேல் "அரசரே! நீர் ஏழு ஆண்டுகள் காட்டு விலங்குகளோடு வாழ்ந் திருக்க நேரிடும்; அப்போது மாடுகளைப் போல புல்லே உமது உணவாக இருக்கும்; தீய வழிகளிலிருந்து நீர் விலகி நடந்தால் இந்த தண்டனை தள்ளிப் போகலாம்" என்றார். பிறகு ஒருநாள் நெபுகாத் நெசார் தனது மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் பெருமிதத்தோடு பார்த்து, 'இதோ எனது பாபிலோன்!' என்று பெருமை பொங்கக் கூவி னான். அப்போது வானத்திலிருந்து ஒரு குர லொலி கேட்டது. "அரசனே! உன் ஆட்சி உன்னிடமிருந்து இன்றே அகன்றது; நீ மனித சமுதாயத்திலிருந்து இன்றே விரட்டப்படுவாய்! இறைவன் விரும்பியவர்க்கே ஆட்சியை அளிக்கிறான் என்பதை நீ அறிந்து கொள்ள ஏழு ஆண்டுகள் ஆகும்" என்றது அக்குரல்.

தொங்கு பூந்தோட்டத்தை உருவாக்கி உலக நாடுகளை வியக்க வைத்த நெபுகாத் நெசார் அக்கணமே எல்லோராலும் புறக்கணிக்கப் பட்டான். அவனது தலைமயிர்கள் கழுகின் இறகுகளைப் போல ஆனது; நகங்களோ பற வைகளின் கூரிய அலகுகளைப் போல ஆனது; அவன் உடல் முழுவதும் பாலைவனப் பனியில் நனைந்தது.

பிறகு நெபுகாத்நெசாரின் மகன் பெல் விட்சர் ஆட்சிக்கு வந்தான். ஒருநாள் விருந்தின் போது அவன் தனது மனைவி மார்களோடும், வைப்பாட்டிகளோடும் குடித் துக் கும்மாளமிட்டான். அப்போது ஒருவரும் எதிர்பாராதவிதமாக ஒரு மனிதனின் கைவிரல் கள் தோன்றி, அரண்மனை உட்சுவரில் விளக்குத்தூணுக்கு எதிரே எழுதத் தொடங் கின. பெல்விட்சர் மிகவே கலக்கமுற்றான். ஞானிகள், மந்திரக்காரர்கள் ஒருவராலும் அந்த எழுத்துக்களுக்குப் பொருள் சொல்ல இயலவில்லை. அப்போதும் தானியேலுடைய உதவியையே அந்த மன்னன் நாடினான். அவர் அந்த எழுத்துக்களைப் படித்துவிட்டு இறை வனை வேண்டினார். பிறகு அரசனை நோக்கி, "அரசே! காணவோ, கேட்கவோ, உணரவோ முடியாத சிலைகளின் கால்படிகளில் நீரும், உமது காமக்கிழத்திகளும் விழுந்து கிடக்கிறீர் கள்; ஆனால் உமது உயிரையும், உம் வழி களையும் தமது கைக்குள் வைத்திருக்கும் கடவுளை நீர் பெருமைப்படுத்தவில்லை. "மேனே, மேனே தேகேல் பார்சின்" என்ற இந்த எழுத்துக்களின் உட்பொருள் இதுவே - உமது அரசை ஆண்டவர் முடிவிற்குக் கொண்டுவந்து விட்டார்; நீர் தராசில் நிறுத்தப் பட்டபோது உமது எடை மிகவே குறைவாகக் காணப்பட்டது; உமது அரசு பிரிக்கப்பட்டு மேதியருக்கும், பாரசீகருக்கும் கொடுக்கப்பட்டு விட்டது" என்றார். அன்றிரவே பெல்விட்சர் கொல்லப்பட்டான்.

மேதியா என்கிற பகுதியைச் சார்ந்த தாரியு என்கிற அரசன் தனது அறுபத்தி இரண்டாம் வயதில் அரசை ஏற்றுக் கொண் டான். அவன் வரி வசூலிப்பதே வாழ்க்கை என்று இருந்தான். வரி வசூலிக்க நாடு முழு வதும் அவன் தண்டல்காரர்களையும், மணியக் காரர்களையும் நியமித்தான். இவ்வாறு நியமிக் கப்பட்ட ஆயிரக்கணக்கான அதிகாரிகள் மேலதிகாரிகளுக்குக் கணக்குக் காட்ட வேண் டும். இந்த மேலதிகாரிகளில் ஒருவராகத் தானி யேல் இருந்தார். தானியேல் ஏதேனும் தவறு செய்வாரா என்று மற்ற அதிகாரிகள் பார்த் தார்கள். அவரோ ஊழலின் நிழலுக்கும், ஊதாரித்தனத்தின் விளிம்பிற்கும் அப்பாற் பட்டவராக இருந்தார். ஆகவே அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்தார்கள். ஓர் உபாயத் தோடு அரசனை அணுகினார்கள். "முப்பது நாட்களுக்கு அரசன் ஒருவனிடம் தவிர



"எதற்கு நூற்றுக் கணக்கான வக்கீல்கள் கோர்ட்டுக்கு ஊர்வலமாகப் போகிறார்கள்?"

"அவர்களில் முக்கால்வாசிப் பேர் இதுவரை கோர்ட்டுக்கே போனதில்லையாம். இன்று அவர்கள் கட்சித் தலைவர் வழக்கை முன்னிட்டாவது கோர்ட்டுக்குப் போய்ப் பார்க்கலாமே என்றுதான் போகிறார்கள்!"

– ஆர். ராமசுப்ரமணியன்

வழிபடும் கடவுளாக இருந்தாலும் அவனது ஆட்சிக்கு உட்பட்ட குடிமக்கள் எவரிடமும் மன்றாடக் கூடாது. எவரேனும் இச்சட்டத்தை மீறினால் சிங்கங்கள் அடைக்கப்பட்ட குகையில் விடப்படுவார்கள்" என்று சட்டம் போட வைத்தார்கள். மக்களை அடக்கி ஆளவும், தனது அரசாட்சியை நிலைநாட்டவும் இது ஒன்றுதான் மகோன்னதமான வழி என்று அரசன் நினைத்துக் கொண்டான். ஆனால் இம்மாதிரியான கட்டளை தானியேலின் கழுத்துக்குக் குறிவைக்கிற கட்டாரி என்பதை அவன் உணர்ந்து கொள்ளவில்லை.

தானியேல் இந்த அவசரப் பிரகடனத்தில் தள்ளாடினார். அவரது வீட்டின் மேல் மாடி சன்னல்கள் ஜெருசலேமை நோக்கி இருந்தன. அந்த மேல் மாடியில் அவர் ஒருநாளைக்கு மூன்று முறை ஜெருசலேமை நோக்கித் தொழுவார். இவ்வாறு அன்று அவர் தொழுது கொண்டிருந்தபோது அவரது எதிராளிகள் அவர் கடவுளிடம் விண்ணப்பித்ததைக் கண்டு கொண்டார்கள். ஆகவே தலைவிரிகோலமாய் அவர்கள் அனைவரும் அரசனிடம் ஓடிவந்து தாங்கள் கண்டதை அரசனிடம் குறிப்பிட்டார்கள். "அரசே! தானியேல் தங்களது சட்டத்தை மீறிவிட்டார். தங்களிடம் மாத்திரமே இறைஞ்சி மன்றாடவேண்டிய தானியேல், அவரது கடவுளிடம் அதிலும் ஜெருசலேமை நோக்கி வேண்டுகிறார்; ஆகவே அவர் சிங்கங்களுக்கு உணவாகிப் போவதுதான் அரச கட்டளைக்கு மரியாதை" என்றனர். அரசனோ தானியேலைச் சிங்கங்களுக்கு மத்தியில் அனுப்பி வைத்து, நடப்பதைப் பார்க்கச் சகிக்காமல் குகையின் வாயிலை முன்பு இருந்ததைப் போலவே பெரிய கல்லால் அடைத்தான்.

அப்போது அரசன், "தானியேலே! நீர் வழிபடும் உண்மையான கடவுள் உம்மைக் காப்பாராக" என்று தழுதழுத்த குரலில் அவரை வாழ்த்தினான். தானியேல் சிங்கங்களுக்கு உணவாகி விட்டார் என்று அவரது எதிரிகள் நாடு, நகரங்களை அமர்க்களப்படுத்தினார்கள். மேதியர், பாரசீகர் ஆகியோரின் சட்டப்படி அரசரின் ஆணையை, அரசரே ஆனாலும் மாற்ற முடியாது என்று தாங்கள் விரித்த வஞ்சக வலைக்கு அவர்கள் வலிமை சேர்த்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் அரசன், பொதுமக்களோடும் குகையின் வாசலுக்கு வந்தான். பாதுகாப்பான வேலிக்கப்பால் நின்று கொண்டு குகையின் வாசலை அடைத்துக் கொண்டிருந்த பாறாங்கல்லை அகற்றச் செய்தான். தானியேலின் எதிரிகள் முண்டியடித்துக் கொண்டு அரசனைத் தாண்டி குகைக்குள், ஆனால் பத்திரமான இடத்திலிருந்து எட்டிப் பார்த்தார்கள். அவர்கள் கண்ட காட்சி அவர்களைக் கதிகலங்க வைத்தது.

தானியேல் பிரார்த்தனையில் மூழ்கி இருந்தார். அவரைச் சுற்றிலுமாகச் சிங்கங்கள் ஆடு மாடுகளைப் போல சாதுக்களாகப் படுத்திருந்தன.

"உமது ஆண்டவர் உம்மைக் காப்பாற்றி விட்டாரா?" என்று அரசன் கேட்டான். அதற்கு தானியேல் "ஆண்டவருடைய நாமம் வாழ்த்தப்படக்கடவது; சிங்கங்கள் சிலிர்த்து எழுந்து சீறுகிற தருவாயில் என் ஆண்டவரின் தூதர் வந்து சிங்கங்களின் வாய்களைக் கட்டினார்" என்றார். படித்துறையிலிருந்து வெளிப்படும் பகலவனைப் போல தானியேல் விளங்கினார்.

உடனே அரசன், "தீர்க்கதரிசியும், அரச ஞானியுமான தானியேலுக்கு எதிராகச் சதி செய்தவர்களைக் கொண்டு வாருங்கள்; சிங்கங்கள் பசியாயிருக்கின்றன" என்று குரல் கொடுத்தான். அவ்வாறே அந்த எதிரிகளும், அவர்களது மனைவி மக்களும் சிங்கங்களின் குகைக்குள்ளே எறியப்பட்டார்கள். சிங்கங்கள் அவர்களைக் கவ்விப் பிடித்துக் கடித்துக் குதறின. அங்கே அழுகையின் ஓலம் அரியணை ஏறியது.

தானியேல், நெபுகாத் நெசாரின் காலம் தொடங்கி, பாரசீக மன்னனான சைரசின் ஆட்சிக் காலத்திலும் கடவுள் ஒருவரையே நம்பியதால், கடவுள் எல்லாத் தீமைகளிலிருந்தும் அவரை விலக்கிக் காப்பாற்றினார்.

(தொடரும்)

பார்வையற்றவர்கள் என்றாலே நமக்கு டெலிபோன் பூத், கூடை, சேர் பின்னும் தொழில்கள்தான் நினைவுக்கு வரும். ஆனால் அதையெல்லாம் தாண்டி ஒருவர் - அதிலும் ஒரு பெண் - டாக்டர் பணி செய்கிறார் என்றால் ஆச்சர்யப்படத்தானே வேண்டும்!

மதுரை கெனட் ஆஸ்பத்திரியில் அப்படி டாக்டராகப் பணியாற்றி வருகிறார் பார்வையற்ற உஷா.

படித்து முடிக்கும் தருவாயில் டயாபடீஸ் நோயினால் பார்வையை படிப்படியாக இழக்க ஆரம்பித்த உஷா, அரைகுறைப் பார்வையுடனேயே எம்.பி.பி.எஸ் முடித்துத் தேறினார். பிறகு பல கிறிஸ்தவ மிஷன்களின் உதவியோடு பலவித பயிற்சிகள் பெற்று, தற்போது டாக்டராக பணியாற்றி வருகிறார்.



• டாக்டர் உஷா

திருமணமாகி இவர் நோயாளிகளுக்கு வைத்தியம் பார்ப்பதையும், வீட்டில் தாமே சமைப்பதையும் நம்ப கஷ்டமாக இருந்தாலும் நம்பியே ஆக வேண்டும். அவ்வளவு நிஜம்.

இந்தத் தன்னம்பிக்கைப் பெண்மணிக்கு இரண்டு ஆசைகள்! ஒன்று - எம்.டி. படிக்க வேண்டும். மற்றொன்று - அரசு மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்ற வேண்டும்.

இந்த இரண்டு ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்ள இவர் தரப்பில் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு விட்டார். ஆனால், அரசாங்கம்தான் கண்டு கொள்வதாய் இல்லை.

எம்.டி படிப்பதற்காக இரண்டு முறை விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார் உஷா. தாம் பார்வையற்றவர் என்று குறிப்பிட்டு விண்ணப்பித்தும் நுழைவுத் தேர்வுக்கான ஹால் டிக்கெட் வந்ததில் மகிழ்ந்து போனார். எல்லாம் படித்து விட்டு நுழைவுத் தேர்வுக்கான ஹாலில் நுழைந்தவருக்கு ஷாக்! "ஆள் வைத்து எழுத அனுமதியில்லை. எங்களால் ஆள் ஒதுக்க முடியாது" என்று திருப்பி அனுப்பி விட்டார்கள்.

அடுத்த ஆண்டும் அதேபோல் பார்வையற்றவர் என்பதைக் குறிப்பிட்டு, சென்ற ஆண்டு நடந்ததையும் குறிப்பிட்டு



நோயாளியைப் பரிசோதிக்கும் டாக்டர் உஷா.

நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பித்தார். ஹால் டிக்கெட் வந்தது. இந்தமுறை எப்படியும் அனுமதித்து விடுவார்கள் என்ற நம்பிக்கையோடு போனார். அந்த முறையும் ''ஆள் வைத்து எழுத அனுமதி யில்லை'' என்று மறுத்து விட்டார்கள்! பிறகு ஏன் ஹால் டிக்கெட் அனுப்புகிறீர்கள்?'' என்ற கேள்விக்குப் பதில் இல்லை.

முதல் ஆசை இப்படி நொறுங்கிப் போகிறது என்றால் அடுத்த ஆசையின் கதி வேறு மாதிரி...!

தன்னம்பிக்கைக்கு வேட்டு வைக்கும் அரசாங்கம்!

விரிவுரையாளர் பதவிக்காக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்திய தேர்வை எழுதினார் உஷா. அதில் தேர்வு பெற்று விட்டதாகத் தகவலும் வந்தது. தேர்வான எல்லோரும் பதவியில் நியமிக்கப்பட்டு விட்டார்கள். ஆனால், உஷா மட்டும் நியமிக்கப்படவில்லை. பலமுறை விளக்கம் கேட்டும் பதிலில்லாமல் நொந்து போயிருக்கிறார். இத்தனைக்கும் இத் தேர்வில் பார்வையற்றவருக்கான இட ஒதுக்கீடும் உண்டாம். இந்தியாவிலேயே பார்வையற்ற டாக்டர் உஷாவைத் தவிர வேறு யாரும் இருப்பதாக நமக்கும் தெரியவில்லை; உஷாவுக்கும் தெரியவில்லை. அப்படியிருக்க அந்த இட ஒதுக்கீடு எவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டது என்பதும் விளங்கவில்லை!

மீண்டும் தேர்வெழுதுவதா, வேண்டாமா என்ற குழப்பத்தில் இருக்கிறார் உஷா. பெண்களுக்கென்று ஏதேதோ திட்டங்களை அறிவிக்கும் அரசு, இந்தப் பார்வையற்ற டாக்டரின் ஆசைகளைப் பூர்த்தி செய்து வைக்குமா?



— எஸ்.ஜே. இதயா

இதோ ஒரு மந்திரம்!

குமரேசன். சென்னையிலுள்ள மிகப் பெரிய கம்பெனியில் ஆலோசகர். அவரது ஆலோசனைகளால்தான் அந்தக் கம்பெனி இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

ஒரு புதுப் பொருளை அந்தக் கம்பெனி உற்பத்தி செய்கிறபோது, ''தைரியமாகச் செய்ய லாம். நிச்சயம் இதை மக்கள் விரும்பி வாங்கு வார்கள். அதற்கு நான் பொறுப்பு!'' என்று அடித்துச் சொல்லுவார்.


''இதுபோன்ற பொருள்களை பல கம் பெனிகளும் உற்பத்தி செய்து கொண்டிருக் கின்றனவே! அவையெல்லாம் ஏற்கெனவே மக்கள் மத்தியில் பிரபலமாகியிருக்கின்றனவே! இதற்கிடையில் நமது பொருளை மக்கள் விரும்பி வாங்குவார்களா? இது சாத்தியம் தானா?'' என்று கம்பெனி டைரக்டர்களெல் லாம் சந்தேகம் எழுப்புவார்கள்.

''அதனாலென்ன! இதுபோன்ற பொருள்களைத்தானே மற்ற கம் பெனிகள் உற்பத்தி செய்கின் றன! இந்தப் பொருளை அல்லவே! எத்தனை பொருள்கள் இருந்தால் என்ன? அவை அத்தனை யும் நமது பொருளைப் போல் இருக்கலாமே தவிர, நமது பொருளாக இருக்க முடியாது. நமது பொருளுக்கு எதுவுமே ஈடாக முடியாது! விற்றுக் காட்டுவது என் வேலை!'' என்பார்.

சொல்லி வைத்தமாதிரி இவருடைய கம்பெனியின் புதிய பொருள் மக்கள் மத்தி யில் பரபரப்பாக விற்பனையாகும். டைரக்டர் களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள். பாராட்டு மழையால் குமரேசனைக் குளிப்பாட்டுவார் கள்.

ஆனாலும் குமரேசனின் மனத்துக்குள் ஒரு சோகம் அழுத்திக் கொண்டேயிருந்தது! இது யாருக்குமே தெரியாது.





குமரேசன் தினமும் காஞ்சீபுரத்திலிருந்துதான் சென்னைக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார். மாலையில் அவர் காஞ்சீபுரத்துக்கு ரயில் ஏறியதுமே புதுப்புது வியாபார உத்திகளைக் கூறும் அவரது மூளை சோர்ந்து போகும். இதயத்தைச் சோகம் பிசைய ஆரம்பித்துவிடும்!

ஆம்; காஞ்சீபுரத்தில் அவரது அம்மா இருக்கிறார். புற்று நோயாளி. இன்னும் சில ஆண்டுகளே உயிர் வாழப் போகும் அம்மா. அம்மாவுக்கு அவர்தான் பணிவிடைகள் செய்தாக வேண்டும். மனைவி காலமாகி ஐந்தாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இரண்டு குழந்தைகளும் ஏற்காட்டில் படிக்கிறார்கள்.

தமது சொந்த சோகங்கள் எதுவுமே யாருக்கும் தெரிந்துவிடக் கூடாது என்பதால்தான் காஞ்சீபுரத்தில் வசிக்கிறார். தமது சோகங்களைக் கேட்க யார் விரும்புவார்கள் என்கிற எண்ணம் அவருக்கு. அதனால்தான் அவருக்காக மிகப் பெரிய பங்களாவைச் சென்னையில் கம்பெனி ஒதுக்கி யிருந்தபோதும் கூட அவர் காஞ்சீபுரத்திலேயே வசிக்கிறார்.

ஒருநாள் திடீரென்று கம்பெனியின் எம்.டி. அவரை அழைத்தார். முக்கியமான விஷயம் ஒன்றைப் பேச வேண்டும் என்றார். எம்.டி.யின் அறைக்குள் நுழைந்தார் குமரேசன். உட்காரச் சொன்னார் எம்.டி.

"என்ன விஷயம் சார்?" என்றார் குமரேசன்.

எம்.டி. சில வினாடிகள் குமரேசனையே பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு தமது இருக்கையை விட்டு எழுந்து,

எஸ்.ஐ.ஆர்.

குமரேசன் பக்கத்தில் வந்து நின்றார். தமது இரண்டு கரங்களாலும் குமரேசனின் இரண்டு தோள்களையும் இலேசாகத் தொட்டு அழுத்தினார்.

குமரேசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவரும் எழுந்திருக்க முயன்றார். எழுந்திருக்க வேண்டாம் என்பது போல் அவரது தோள்களை மீண்டும் அழுத்தினார் எம்.டி.

"தெரியும். எல்லாம் எனக்குத் தெரியும் குமரேசன். உங்களுடைய சொந்த வாழ்க்கை பற்றி எல்லாமே தெரியும். இந்தக் கம்பெனி உங்களிடமிருந்து ஆலோசனைகளை மட்டும்தான் பெற விரும்புகிறது என்று நீங்கள் எப்படி நினைத்தீர்கள்? சோகங்களைப் பகிர்ந்து கொள்ளவும் இதோ, நாங்கள் இருக்கிறோம்!" என்றார் மென்மையான குரலில்.

குமரேசன் நெகிழ்ந்து போனார். "இதோ, நாங்கள் இருக்கிறோம்!" என்ற எம்.டி.யின் வார்த்தைகள் மந்திரம் போல் அவருடைய காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

'குமரேசன் எந்த நேரத்தில் என்ன உத்தியைக் கையாளப் போகிறாரோ' என்று மற்ற கம்பெனிகளெல்லாம் பயந்து கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருந்த அந்த வியாபார ஜாம்பவானுக்கு 'இதோ, நாங்கள் இருக்கிறோம்!' என்கிற வார்த்தைகள் எத்தனை ஆறுதலைத் தந்தன தெரியுமா!


எளிமையான சில வார்த்தைகள் கூட மந்திரம் போல் செயல்படும். அலங்கார வார்த்தைகளை விட ஆறுதலான வார்த்தைகளே மிகச் சிறந்த பலனைக் கொடுக்கும் என்பதற்கு குமரேசனிடம் எம்.டி.கூறிய வார்த்தைகளே உதாரணம்.

“

'CHICKEN SOUP FOR THE SOUL AT WORK' என்ற நூலில் ஏராளமான வெளிநாட்டினர் தம் தொழிலில் எப்படியெல்லாம் சாதனைகள் புரிந்து வெற்றி கண்டார்கள் என்று காட்டும் பல சுவையான நிஜக்கதைகள் உள்ளன. நம் வாசகர்களுக்கும் அது போன்ற நிஜக்கதைகள் தந்து உற்சாக ஊசி ஏற்றும் எண்ணத்தில் தான் இந்த வாரம் இந்த இரண்டாவது நிஜக்கதை...

”

காப்பிக் குவளையை டீபாயில் வைத்துவிட்டு மீண்டும் சாய்ந்து, இமைகளை வெற்றாக மூடினான். காலையில் விசேஷத்திற்கு வராத அப்பாவை நினைத்து மனம் கனத்தது. இன்று அவன் பிள்ளைக்கு நாமகரணம். பிள்ளையின் பெயர் சூட்டு விழாவுக்கு மாமனார் வீட்டு ஜனங்கள் அலுவலக நண்பர்கள் என்று நிறைய வந்திருந்தார்கள். 'அப்பா எங்க ரகு?' என்று கேட்டவர்களிடம்



சாமர்த்தியமாய் பதில் சொல்லி சமாளித்தான். லக்னம் வந்ததும் அய்யர்முன் அமர்ந்து கணேச பூஜை செய்தான். சாஸ்திரிகள் கணீரென்று மந்திரம் சொன்னார். முடியும் நேரத்தில் –

'அங்காது அங்காது சம்பவசி...'

என்கிற வரிகளைக் கேட்டதும் யாரோ நினைவுப் பின்னலை கண்டியிழுக்கிறமாதிரி...

உணர்வுகள் சரிய, உள்ளுக்குள் உடைந்தான் ரகுவரன்.

ரகுவரன் பிறந்து வளர்ந்த கிராமம் மங்கைநல்லூர். அப்பா ஆசிரியர். மகனை நல்லமுறையில் ஆளாக்க வேண்டும் என்கிற உத்வேகம் அவருக்கு. ஆண்பிள்ளை குடும்பம் சுமப்பான் என்று நினைத்தார். மகனை உத்தேசித்து மூத்தவள் சகுந்தலாவை கொஞ்ச படிப்போடு நிறுத்தினார். இருந்த சொற்ப நிலத்தை விற்று அவளின் கல்யாணத்தை முடித்தார். வருமானம் கருதி கடைசி பெண் நீலாவையும் பத்தாவதோடு நிறுத்தினார். அவருடைய உழைப்பும் கவனமும் மகனை நோக்கியே இருந்தது. ரகுவரன் ஊக்கமாய்ப் படித்தான். படிப்பு முடிந்த கையோடு மயிலாடுதுறை வங்கி ஒன்றில் அதிகாரியாகப் பணியில் சேர்ந்தான். அப்பா காட்டிய நெறியில் நின்றான்; கனகா வரும் வரை. கல்யாணம் முடிந்து கனகா வந்தாள். மாறத் தொடங்கினான் ரகுவரன்.

"ஸ்கூட்டர் எப்போ வாங்கின ரகு!"

"ஒரு வாரமாறது."

"என்னிடத்திலே சொல்லலையே!"

"அம்மாவுக்குத் தெரியுமே. உனக்குத் தனியா சொல்லணுமாக்கும்."

அப்பா அதிர்ந்தார். கூனிக்குறுகினார்.

அடியார்க்கு நல்லான்

ஒரு மகன் அப்பாவாகிறான்



"இப்படி தினம் அவளோடட சுத்திட்டு ராத்திரிக்கு வர்றானே! நீங்க சொல்லப்படாதா?" - அம்மா.

"அப்பா! மன்னி என்னை ஜாடை பேசறாப்பா!" - நீலா.

அப்பா மௌனத்தில் ஒடுங்கினார்.

"எனக்கு மாற்றலாயிடுத்து. அடுத்த வாரம் கனகாவோட புறப்படறேன்."

"எங்க?"

"மெட்ராஸ்."

"நீதான் முயற்சி பண்ணி மாத்திண்டேன்னு உன் சிநேகிதன் சொன்னான். ஏம்பா ரகு! இப்ப என்ன அப்படி ஒரு அவசரம்?"

"மேல படிக்கணும்ப்பா."

"உன் தங்கைக்கு ஒரு வரன் தெகையற வரைக்கும் நீ இருந்தா சித்த உதவியா இருக்குமேன்னு நினைச்சேன்."

ஒன்றும் சொல்லாமல் நகர்ந்தான். மறு வாரம் புறப்பட்டுப் போனான்.

தேதிகள் தேய...

'அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. ஒரு தடவை வந்து பார்த்துட்டுப் போ' என்று கடிதம் எழுதினார்.

ரகுவரன் வரவில்லை. மாறாகக் கடிதம் வந்தது. சமாதானம் சொல்லி, வாசமிழந்து, வாஞ்சை வற்றிய வார்த்தைகளோடு கடிதங்கள் வந்தன.

மனசு விட்டுப் போக அவனுக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்திக் கொண்டார். மகளின் கல்யாணத்தை உத்தேசித்து வீட்டை விலை பேசினார். வரன் தேடி அலைந்தார். ஒருநாள் கனகா மாதமாய் இருக்கிறாள் என்று தகவல் வந்தது. பார்த்து வரலாம் என்று அரை மனதோடு புறப்பட்டார்.

"வாங்கப்பா... வாங்கோ! லெட்டர் போட்டிருந்தா ஸ்டேசனுக்கு வந்திருப்பேன்."

"வாங்க மாமா!"

"அம்மா எப்படி இருக்கா?"

"இருக்காப்பா."

"நீலா என்ன சொன்னா? ரெண்டு வாரமா கிளம்பறோம்! தட்டி தட்டிப் போறது. ஆபீஸ்ல ஒரே டென்ஷன்!"

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அப்பாவோடு சாப்பிட உட்கார்ந்தான். கனகா பரிமாறினாள். வீடு விலை பேசுகிற விஷயத்தை அப்பா சொன்னார். அவருக்குப் பிறகு தனக்குச் சேரும் என்றிருந்த ரகுவரனுக்குப் பெரிதும்

ஏமாற்றமாயிருந்தது. கனகாவின் முகம் இருண்டு போவதை கவனித்தான்.

"இப்ப என்னத்துக்கு வீட்டை கொடுக்க ணும்?"

"பென்ஷன் போறல, உன் அம்மா வைத்தி யத்துக்கே எல்லாம் சரியாயிருக்கு. உன் தங் கைக்கு வரன் பார்த்திண்டிருக்கேன். பணம் இல்லாம எப்படி... எனக்கு உடம்பு முன்ன மாதிரி இல்லடா ரகு!"

எழுந்து கை கழுவினார்.

"மாமா! இவருக்குன்னு வீட்ல பாகம் ஏதும் கிடையாதா?"

"அதாவதுப்பா... நிறைய செலவாறது! எவ்வளவு வந்தாலும் போறல. இவ தங் கைக்கு வேற கல் யாணம் வர்றது! அதான்... ஒரு இருப தாயிரம் இருந்தா..."

பதில் எதுவும் சொல்லாமல் அமைதி யாக படுக்கச் சென் றார்.



"உங்க பேர்ல இவ்வளவு ஊழல் குற்றச்சாட்டு இருக்கே, நீங்க ஏன் பதவியை ராஜினாமா பண்ணக் கூடாது?"
"பதவியை ராஜினாமா பண்ணினாத் தான் ஊழல் குற்றச்சாட்டு நிருபணம் ஆயிடுமே!"

– சீர்காழி வி. ரேவதி

மறுநாள் பிளாட் பாரத்தில் சந்தடி இல்லாத ஒதுக்குப் புறமாய் பெஞ்சில் உட்கார்ந்திருந்த அப்பாவின் கையில் ஸ்வீட் பாக்கெட் ஒன்றைக் கொடுத் தான் ரகுவரன்.

"வீடு முடிஞ்சதும் ஏதாவது பணம் கொடுங்கப்பா. அவ கேட்டதைத் தப்பா எடுத்துக்க வேணாம். கனகா நல்லவப்பா."

"ரகு... சொல்றேன் கேட்டுக்கோ. உன்னை வளர்த்துப் படிக்க வைக்க எவ்வளவோ பாடு பட்டேன். உன்னை விட பெரியவ நல்லா படிப்பா. ஆனா அவளை நான் படிக்க வைக் கலை. ஆண்பிள்ளை குடும்பம் சுமப்பான்னு நினைச்சேன்! ஆனா நீ அப்படியில்லே! முடி யாம கிடக்கறா உன் அம்மா! அவளை நீ வந்து கூட பார்க்கல! உனக்குப் படிப்பு மட்டுமா... எவ்வளவோ கதைகளும் சுலோகங்களும் சொல்லி வச்சேன். எல்லாம் விழலுக்கு இறைச்ச நீராப் போயிடுத்து! டேய் ரகு... எதை மறந்தாலும் இதை மறக்காதேன்னு சொல்லிக் கொடுத்தேனே! எங்க, அதைச் சொல்லு பார்க்கலாம்."

மூச்சுவிடாமல் பேசுகிற அப்பாவைப் பார்த்துத் திகைத்து நின்றான். அப்பா - களைத்துத் தளர்ந்து விழ நிற்கும் விருட்சமாய்த் தெரிந்தார்.

"என்னடா அப்படிப் பார்க்கறே! குழந் தைக்குப் பேர் வைக்கறச்சே சொல்ற மந்திர சுலோகம் ஞாபகமில்லையா?"

"இருக்குப்பா."

ரயில் பெட்டியில் ஏறி அமர்ந்தார். வண்டி நகர்ந்தது.

சிமிண்ட் பெஞ் சில் வந்து உட் கார்ந்து சிகரெட் ஒன்றைப் பற்றவைத் தான்.

அப்பா சொல் லிக் கொடுத்த சுலோகம் நினை வுக்கு வந்தது.

'அங்காது அங்காது சம்பவசி
ஹ்ருதயாது
அபிஜாயஸே
ஆத்மாவை
புத்ரநாமசி
ஸ ஜீவா
ஸரதஸ் ஸதம்...'

"இதுக்கு என்ன அர்த்தம் தெரியுமா ரகு?"

"சொல்லுப்பா."

"அங்கமும் அங் கமும் சேர்ந்து நீ உண்டானாய். என்னிலிருந்து வேறானவன் அல்ல நீ. எனது ஆன்மாவின் ஒரு பகுதியே நீ. உன்னை ரட்சிக்கிறேன். நீ வளர்ந்து விருட்ச மான பிறகு உனது நிழலில் என்னை ஆதரிப் பாய். புத்திரனே! நீ நூறு வயது வாழ்வாயாக."

இன்று விசேஷத்தில் அந்த சுலோகத்தை அய்யர் சொல்லவும் பட்டுப் போன பழைய நினைவுகள் வடுக்களாய் வலிக்கத் தொடங் கின.

அப்பா...

இமைகளில் ஈரம் பாய்ந்தது.

அவனுக்குள் ஓர் உந்துதல்.

இப்போதே கிராமத்துக்குச் சென்று அப் பாவை பார்க்க வேண்டும்.





மந்த்ரங்களுக்குள்ளேயிருந்து நம்மை ரக்ஷிக்கிறவன் பரமாத்மா. அதனால் மந்த்ரத்தினிடத்தில் நமக்கு பக்தி இருக்க வேண்டும். வேதம் என்ன சொல்கிறது...? 'எனக்கு நல்ல புத்திக் கூர்மையை அளித்தருள வேண்டும்' என்று கேட்கிறது. 'ஹே அக்னி! நீ எனக்கு நல்ல அறிவுக் கூர்மையை, தெளிவான புத்தியைக் கொடு...' என்று பிரார்த்திக்கிறது. பிரும்மசாரிகள் தினமும் சமிதாதானம் (அக்னி வளர்த்து) செய்து பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். 'எப்படி நீ தேவதைகளுக்குள்ளே தேஜஸ்வியாக இருக்கிறாயோ, அப்படி என்னை மனிதர்க்குள்ளே தேஜஸ்வியாக ஆக்க வேண்டும்...' என்று பிரார்த்திக்கிறான் பிரும்மசாரி. நித்யம் இந்த மந்த்ரத்தைச்

விஷ்ணு

ஸ்ரீ பத்மவாசன்..

14

சொல்லி பிரார்த்திக்கிறான்.

பாப தேவதையானது பிரும்மாவிடத்[illegible]போய்க் கேட்டதாம் – "[illegible] பிடித்துக் [illegible]கொள்ள வேண்டிய பாத்திரம் எது...?" என்று கேட்டதாம்.

"எந்த பிரும்மசாரி சமிதாதானம் பண்ணாமல் இருக்கிறானோ, அவனைப் போய்ப் பிடித்துக் கொள்" என்றானாம் பிரும்மா! ஆகவே சமித்தினாலே (மரச் சுள்ளி) அக்னியை உபாசிப்பது அவ்வளவு முக்கியம்; விசேஷம்.

'ஹே சூர்யா நீ எனக்கு தேஜஸைக் கொடு; இந்திரனே, இந்த்ரிய பலத்தைக் கொடு, அக்னே! நீ எனக்கு உயர்ந்ததாய் இருக்கும்படியான புத்தியைக் கொடு...' என்று தொடர்ச்சியாகப் பிரார்த்தனை.

வித்யாரண்ய சுவாமிகள் உபந்யாஸம் செய்யும் போது விளக்கம் சொன்னார் – அக்னியை நோக்கி எந்த பிரார்த்தனை அமைந்தாலும் அந்த ப்ரார்த்தனை யாரிடத்தில் போய்ச் சேர்கிறது என்றால்... அக்னிக்கு அந்தர்யாமியாய் இருக்கக்கூடிய பெருமானிடத்திலே – பகவானிடத்திலே போய்ச் சேர்கிறது.

அக்னிக்கும் அந்தர்யாமி!... அக்னி என்று சொன்னாலே பகவான்தான். நம்மை

பிரார்த்தனை இப்படி அமைந்திருக்கிறது :

'விஷ்ணு!' என்று அவனைக் கூப்பிட்டுச் சொல்கிறது. அப்படிக் கூப்பிடுவதில் வேதத்துக்கே ரொம்ப சந்தோஷமாம்! "நான் கர்ம காண்டத்தில் நிறைய விஷயங்கள் சொல்லியிருக்கிறேன். ஆனால் அதிலெல்லாம் எனக்கு அவ்வளவாக திருப்தி ஏற்படவில்லை. 'விஷ்ணு!' என்று உன்னைக் கூப்பிடுவதில் இருக்கக்கூடிய ஆனந்தம் வேறெதிலும் இல்லை!" என்று சொல்லிவிட்டது வேதம்!

கர்மாவை விளக்க வந்த வேதமே விஷ்ணு என்று அவன் பெயரைச் சொல்வதில் இருக்கக்கூடிய ஆனந்தம் வேறில்லை என்கிறது!

முதல் நாளே கிரஹத்தில் பால் வாங்கி, காய்ச்சி, தோய்த்து வைக்கிறார்கள். மறுநாள் அது கட்டித் தயிராகிறது. அந்தத் தயிரைக் கொண்டு ஹோமம் நடக்கிறது. அப்போது பிரார்த்தனை என்ன...? 'எங்கும் பரவியிருக்கும் படியான ஹே, நாராயணா! இந்த ஹவிஸை கெட்டுப் போகாவண்ணம் நீதான் ரக்ஷிக்க வேண்டும். ராத்திரி முழுதும் ரக்ஷிக்க வேண்டும். யக்ஞத்தில் அது வினியோகம் ஆகவேண்டும். அந்த அக்னியில் போய் அது சேர வேண்டும். அக்னியில் சேர்த்த ஹவிஸ்,

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

முன்னுக்கு அழைத்துச் செல்லக்கூடியவன். இப்போது இருக்கிற நிலையிலிருந்து உயர்த்தக்கூடியவன் என்று அர்த்தம். ஆகவே அக்னி சப்தமே பகவான் விஷ்ணுவைத்தான் குறிக்கிறது.

அந்தர்யாமி ப்ராம்மணம் என்கிற வேத பாகத்தில் நாம் பார்த்தோமானால் ஒவ்வொரு தேவதையினுடைய பெயரையும் சொல்லி, அந்த தேவதைக்கு அந்தர்யாமியாக பரமாத்மா இருக்கிறான். அந்த தேவதைக்கு சக்தியைக் கொடுக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் எத்தனை தேவதைக்கு நமஸ்காரம் செய்தாலும் அந்த எம்பெருமான் காலடிக்கே அது போய்ச் சேருகிறது. சமஸ்த தேவதைகளுக்கும் அவனே அந்தர்யாமியாக இருப்பதால் வேதத்தின் கர்ம காண்டத்திலே

அந்த தேவதைகளுக்கு சந்துஷ்டியை உண்டு பண்ண வேண்டும்... அதனால், ஹே நாராயணா! நீ வந்து இந்த ஹவிஸைக் கெட்டுப் போகாமல் ரக்ஷிப்பாயாக. உனக்கு வினியோகமாகும் படியாக ரக்ஷிப்பாயாக' என்பது பிரார்த்தனை.

– இதற்கு விசேஷமான அர்த்தத்தை சுவாமி தேசிகன் அருளிச் செய்திருக்கிறார்.

கர்ம காண்டத்தில் ஹவிஸை எடுத்து அக்னியில் சேர்க்கிறோம்.

பிரும்ம காண்டம் என்கிற உபநிஷத் பாகத்திலே அக்னியென்றாலே பகவான்தான் என்பதைப் பார்த்தோம்.


உண்மையிலே ஹவிஸ் என்றால் நமது ஆத்மா. ஆத்மாவை பகவத் அர்ப்பணம் பண்ண வேண்டும். அப்படிப் பண்ண வேண்

டும் என்றால் அதற்கும் அவன் அனுக்கிரஹம் வேண்டும்!

ஹே விஷ்ணு! ஹவிஸ் ஆகிற ஆத்மா கெட்டுப் போகாமல் நீ காக்க வேண்டும் - வெவ்வேறு பிறவிகள் நான் எடுக்கா வண்ணம் காப்பாய். சாச்வதமான நித்யானந்தத்தை அடைவதற்கு, உன் திருவடியில் நித்ய கைங்கர்யம் செய்வதற்கு, இந்த ஆத்மாவை நீ தயாராக்கு. இதை நீ ரக்ஷி!' என்பது பிரார்த்தனை. விஷ்ணுவிடத்திலே பிரார்த்தனை.

ஆகவே விஷ்ணுவே நம : என்று நாம் பிரார்த்திக்கிறபோது என்ன கேட்டுக் கொள்ள வேண்டுமென்றால், ஹே ரக்ஷகனே! இந்த ஆத்மா கெட்டுப் போகாமல் ரக்ஷிப்பாய் - உனக்கே இது சமர்ப்பணம்.

ஓம்காரத்தில் - பிரணவத்தில் சொல்



"அங்கே.. என்ன கலாட்டா?"

"பையன் எழுதின விடைத்தாளை மறு கூட்டல் பண்ணணுமாம். ஏழே மார்க் வாங்குற அளவுக்கு அப்படி என்னதான் எழுதிருக்கான்னு பார்க்கணும்னு பெத்தவங்க வந்திருக்காங்க ஸார்."

— எஸ். மாலதி

லப்படுவதும் இதுதான். அகார வாச்யனான, லக்ஷ்மீ வசிஷ்டனான - லக்ஷ்மியுடன் கூடியிருக்கும்படியான நாராயணனுக்கே இந்த ஜீவன் என்றதனாலே, அவன் பொருட்டே என்று இதை சமர்ப்பணம் பண்ண வேண்டும். அதையே இந்த விஷ்ணு சப்தத்தினால் ஆசார்யர்கள் அழகாகக் காட்டிக் கொடுக்கிறார்கள். வேதமும் சொல்கிறது.

விஷ்ணு புராணத்திலே ஒரு சுலோகம். 'விசேர்தாதோ ப்ரவேசனாது' என்று விஷ்ணு ப்ரபாவத்தைச் சொல்கிறது - இதைப் போல் ஆயிரத்துக்கும் மேல் சுலோகங்கள் அமைந்திருக்கின்றன. ஆக, விஷ்ணுவினுடைய பிரபாவத்தைச் சொல்லும்படியான இந்த புராணத்திலே,

'ஹே விஷ்ணு! நாராயணா! நீ எப்போதும் எங்கும் பரவியிருக்கிறாய். அது தர்ம சூக்ஷ்மமான விஷயம். ஆனால், அப்படி நீ பரவியிருப்பதை எல்லோரும் உணர வேண்டும் என்பதால் அல்லவோ நரசிம்ஹ அவதாரம் பண்ணினாய்..' என்று வருகிறது.

பகவான் எதற்காக நரசிம்ஹ அவதாரம் பண்ணினான் என்று கேட்டால், சர்வ வஸ்துக்களினுள்ளேயும் அவன் வியாபித்திருப்பதை நாம் உணரச் செய்யவே பண்ணினானாம்!

எங்கும் நிறைந்திருக்கிறான் என்று வேதம் சொல்கிறது. உபநிஷத் சொல்கிறது. ஆனால், அவதார காலத்தில் அதை எல்லோரும் உணரும்படியாகச் செய்தானல்லவா.

அதனால்தான் நம்மாழ்வார் 'என் சிங்கப் பிரான் பெருமை' என்று சொந்தம் கொண்டாடி அவனை வியக்கிறார்.

அவருக்கு மட்டுமா அவன் சிங்கப் பிரான்...? அவரவர் தம்முடையவனாகக் கொண்டாடும்படியானவன் என்பதாலே அப்படிச் சொன்னார்.

எங்கும் உளன் கண்ணன். ஹிரண்யகசிபு கேள்வி கேட்டபோது அங்கே, அப்பொழுதே, அதே இடத்திலேயே, அந்த ஸ்தம்பத்திலேயே தோன்றினானே... ஸ்தம்பத்தை ஒரு குத்து குத்தினான் ஹிரண்ய கசிபு. அவன் உடனே வராமல் ஐந்து நிமிடம் கழித்து வந்திருந்தால்..? 'நான் குத்தும்போது இல்லையே; அப்புறமாகத்தானே வந்தான்' என்பானாம் ஹிரண்யன்! ஸ்தம்பத்தைக் குத்த, சுவரிலிருந்து அவன் வரான் என்று வைத்துக் கொள்ளுங்கள், 'நான் ஸ்தம்பத்தையல்லவா சொன்னேன் - அதிலிருந்து அவன் வரவில்லையே...' என்பானாம். அதற்கெல்லாம் இடம்கொடுக்கவில்லை பரமாத்மா. குத்திய இடத்தில், அதே கணத்தில் அப்போதே தோன்றிவிட்டான்.

ஆகையினால், சர்வ பதார்த்தங்களிலும் நிறைந்திருக்கக்கூடியவன் பரமாத்மா. சுவாமி தேசிகன் வரதராஜ பஞ்சாஷட் என்கிற ஸ்தோத்திரத்தில் சொல்கிறார்; 'இப்போது கூட இந்த உலகமெல்லாம் கர்ப்பமாக இருக்கிறது' என்று. உலகமெல்லாம் பிரசவிக்காமல் இருக்கிறதாம். அசேதன பொருளாய் இருக்கட்டும், சேதனமாய் இருக்கட்டும்... எல்லாமே கர்ப்பமாய் இருக்கிறதாம். யாரை கர்ப்பத்திலே கொண்டிருக்கிறது என்றால், நரசிம்ஹனைத் தான்! அவனே எல்லாவற்றிலும் உட்கார்ந்திருக்கிறான்.

எப்போது அது பிரசவிக்கும்? என்பது கேள்வி. அதற்கு ஹிரண்ய கசிபு மாதிரி ஒருத்தன் வரவேண்டும்! அவனை மாதிரி ஒருத்தன்

வந்து விட்டால் மட்டும் போதாது. பரம பாகவதோத்தமனான இன்னொருவனை அவன் ஹிம்சிக்கணும்! ஹிரண்ய கசிபுவைக் கொல்ல வேண்டும் என்று பகவானுக்கு அபிப்பிராயம் கிடையாது. அவன் பாகவத அபசாரம் பண்ணியதால்தான் பகவான் சீற்றம் கொண்டான். அப்படியொரு அபசாரம் நிகழ்ந்தால் உடனே அவன் ஆவிர்பவித்து விடுகிறான்.

ஆக, எங்கும் நிறைந்திருக்கிறான். பரமாத்மா - நரசிம்ஹ ரூபியாய். விஷ்ணு விளிடத்திலிருந்துதான் அனைத்தும் தோன்றின. எல்லாவற்றுக்கும் தோற்றுவாய் அவன்தான். படைத்தல், காத்தல், அழித்தல் சகலத்தையும் அவனே செய்கிறான்.

பரமாத்மாவை இரண்டுவிதமாகப் பிரித்து நாம் பார்க்க வேண்டும். பிரளய காலத்தில் என்ன பண்ணுகிறான்... எல்லா வஸ்துக்களையும் தன்னுள் அடக்கிக் காக்கிறான்.

ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு
பாலகனாய்
ஞால மேழும் உண்டான் அரங்கத்
தரவினணையான்
கோலமா மணியாரமும் முத்துத் தாமமும்
முடிவில்லதோர் எழில்
நீலமேனி ஐயோ! நிறைகொண்டது என்
நெஞ்சினையே.

என்கிறார் திருப்பாணாழ்வார்.


'ஐயோ!' என்கிறார். அடியேன் அந்த வார்த்தையைச் சொன்னால் அடிக்க வரமாட்டார்களா! என்ன இப்படி அமங்கலமாகப் பேசுகிறீர்களே... என்று கேட்க மாட்டார்களா!

ஆனால் ஆழ்வாருடைய திவ்ய பிரபந்தத்திலே இந்தப் பத்து பாகரங்களிலே இரண்டு இடத்தில் 'ஐயோ' என்று வருகிறது.

'செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே...' என்கிறார் இன்னொரு இடத்தில்.

'நீலமேனி ஐயோ!' என்றதுக்கு மேலாக எதுவுமே தோன்றவில்லை அவருக்கு... அப்படி இழுக்கிறான் பரமாத்மா! அந்த ரசானுபவம் இருக்கிறதே, எம் பெருமானை அணு அணுவாக அனுபவிக்கும்போது ஏற்படக்கூடிய ஆனந்த அனுபவ ப்ரவாகம், ஆழ்வாரின் உயர்ந்த உள்ளம் அந்த அனுபவ வர்ணனையில் தெரிகிறது - 'அந்த ரூபம் அப்படியே நிறைந்து நிற்கிறதே நெஞ்சில்...' என்கிறார்.

அப்படிப்பட்டது எம்பெருமானுடைய வடிவழகு! சமஸ்தத்தையும் தன்னுள்ளே அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட



"தலைவர் பலே கில்லாடிப்பா!"
"எப்படி சொல்றே?"
"குறை தீர்க்க மக்கள் கொடுக்கற மனுக்களை எடைக்குப் போட்டே மாடி வீடு கட்டிட்டாருன்னா பாத்துக் கோங்களேன்..."

— ஆர். லோகநாதன்

உயர்ந்த பரமாத்மா, பிரளய காலத்தில் சூக்ஷ்மமாக இருக்கிறான். சூக்ஷ்ம சித்து அசித்து வசிஷ்டன் - (சித் - அறிவுடையது; அசித் - அறிவில்லாதவை.) எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கிக் காக்கிறான்.

மறுபடி சிருஷ்டி கிரமத்திலே என்ன செய்கிறான்... தன்னுள்ளே அடக்கி வைத்தது முழுவதையும் வெளியிலே விடுகிறான். விட்டுவிட்டு அவன் ஸ்தூலமாகப் பிரகாசிக்கிறான்! அதாவது ஸ்தூல சித்சித் வசிஷ்டனாக இருக்கிறான்.

விசிஷ்டாத்வைத ரீதியாக தத் த்வம் அஸி என்பதை ஆராய்ந்தால், 'தத்' என்றால் சூக்ஷ்மமாய் இருக்கிற பரமாத்மா. த்வம் என்றால் ஸ்தூலமாயிருக்கிற பரமாத்மா என்று பொருள். ஸ்தூலமாயும் சூக்ஷ்மமாயும் அவனே இருக்கிறான் என்பது அர்த்தம். பிரளய காலத்திலே சூக்ஷ்மம். சிருஷ்டி காலத்திலே ஸ்தூலம்.

தான் எப்படி சத்யமாகவும் நித்யமாகவும் அனந்தமாகவும் அளவிலா ஆராமுதமாகவும் பரமாத்மா இருக்கிறானோ— அதே மாதிரிதான் எல்லா சராசரங்களையும் அழியாமல் காத்து, தன்னுள்ளே அடக்கி வெளியே விடுகிறான். ஆகையினால்தான் நம் சம்பிரதாயத்தில் 'அழிவு என்பதே கிடையாது' என்கிறார்கள். அப்படியானால் 'அழிவு' என்கிற சொல் எதைக் குறிக்கிறது...? அதை விசாரணை செய்ய வேண்டும் நாம். அடுத்த வாரம் வரை கொஞ்சம் யோசனை பண்ணுங்கள்.

(தொடரும்)

தேவதை

ஒரு குதிரை வீரன். அவனுக்குக் கொஞ்சம் படை, பட்டாளம். தேசம் தேசமாகச் சென்று போரிட்டு வென்று தன் பிரதிநிதியை ஆட்சியில் உட்காரவைத்துப் போகிறவன். அப்படிப் போரிட வருகிற ஒரு தேசத்தில், ஓர் அழகான ராஜகுமாரி. கண்டதும் காதல் கொள்கிறான். காதலை அவள் ஏற்க மறுப்பதால் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டு இறக்கிறான்.

சில நூறு வருஷங்களுக்குப் பிறகு அதே பெண், துபாயில் ஒரு மில்லியனருக்கு மகளாகப் பிறந்து, வினீத்தைக் காதலிக்கிறாள். தாய்த்திரு நாட்டுக்கு வந்து, திருமணம் செய்து கொள்ள ஆயத்தம் பண்ணுகிற வேளையில், அந்த குதிரை வீரனின் ஆவியோ, பேயோ, பூதமோ சிற்சில மேக்-அப் மாறுதல்களுடன் குறுக்கிடுகிறது. அதே பழைய உருவில்.

இவளுக்கும் முன் ஜென்ம ஞாபகம் வந்து விடுகிறதோ, என்னவோ, அடிக்கடி அவனது ('அத'னது என்று சொல்ல வேண்டுமோ?) இருப்பிடமான ஓர் அசாத்திய குகைப் பக்கம் போய் விடுகிறாள்.

திருமண தினத்தன்று அவளை அந்த குதிரை வீரன் – சே, அவனது ஆவி – கடத்திப் போய்விட, ஹீரோ வினீத் தேடிப் போய் சண்டை போட்டு, நிறைய உதை சாப்பிட்ட பின் ஆவியைக் கொன்று(?) காதலியை மீட்டு வருகிறான்.

சாமி சத்தியமாக இதுதான் கதை.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி நாட்களில் இப்படியொரு அம்புலிமாமா கதையைப் படமாக எடுப்பதற்கு அபாரமான துணிச்சல் வேண்டும்.

கார நெடி தாக்கும் மசாலா, கவர்ச்சிக் ககமால்ங்கள் பக்கமெல்லாம் எட்டிப் பார்க்காமல் மிருதியான அழகுணர்ச்சியுடன் இப்படியொரு fantasy படம் தமிழில் இதற்கு முன் வந்திருக்கிறதா, தெரியவில்லை.

ஒரு சட்டம் போட்டுக் கொண்டு 'இதுதான் சினிமாவுக்குக் கதையாக இருக்க வேண்டும்' என்று பிடிவாதமாகப் போகாமல், திறந்த ரசனையுடன் தியேட்டருக்குப் போனால் நாலைந்து வித விருந்துகள் கிடைக்கின்றன இப்படத்தில்.

விருந்து 1 : சில நூறு வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் ஒரு குட்டி ராஜ்ஜியத்தின் கோட்டை கொத்தளங்கள் எப்படி இருந்திருக்கும்? வண்ணங்களற்ற முரட்டுச் சுவர்களும் தூண்களும் சல்லாத்துணித் திரைச் சீலைகளும் நூதனமான ஆயுதங்களும் புராதனக் கோப்பைகளும் ஆபரணங்களும் குதிரை லாயங்களும் கிலோ கணக்கில் பித்தளை நகை சுமக்காத, சமஸ்தானத்து மன்னனின் இறந்த மார்புடனான இயல்பான கெட்அப்பும் நம்மை எங்கோ கடத்திப் போய்விடுகின்றன.

இத்தனை நுணுக்கமான ஆர்ட் டைரக்ஷன் இதுவரை தமிழ்ச் சினிமா காணாத ஒன்று. மருதுவுக்கு தேசிய விருதுக்கு மேலே ஏதாவது உண்டானால் அது தரப்பட வேண்டும்.

விருந்து 2 : நாசர் கையாளுகிற மொழி. முதல் அரை மணி நேரப் படத்தில் மகா துணிச்சலுடன் அக்காலத் தமிழை உபயோகித்திருக்கிறார். சாமானிய ரசிகன் சலிப்படையக் கூடும் என்பது பற்றிக் கவலை கொள்ளாமல், படத்தின் இயல்பு கெடக் கூடாது என்பதில் மிகத் தீவிரம் காட்டியிருக்கிறார். அரச சபைக் காட்சி ஆரம்பம் என்றாலே – கச்சை கட்டிய பெண்களின் குலுக்கல் நடனம் வைப்பதுதான் ராஜா கதைகள் படமாக வந்து கொண்டிருந்த காலத்திலேயே இருந்து வந்த நடைமுறை. இதில், படம் ஆரம்பித்த இரண்டாவது காட்சியிலேயே சுமார் ஏழு நிமிஷத்துக்கு ஒரு தெருக் கூத்துப் பாணிக் கேளிக்கை!

கதை, சமகாலத்துக்குத் தாவியவுடன் மொழியும் கலபமாக வழுக்கிக் கொண்டு வந்து விடுகிறது. (அந்த குதிரை வீரனின் ஆவிக்கு மட்டும் ஏன் லேட்டஸ்ட் தமிழ் தெரியவில்லை?)

விருந்து 3 : இளையராஜாவின் பின்னணி இசை. இப்படிக் கூட உயிரை உருக்கி இசையாக வார்க்க முடியுமா என்று ரொம்ப உணர்ச்சிவசப்பட்டு எழுதினால் ரகுமான் ரசிகர்கள் ஜால்ரா என்பார்கள். ஆனால், பாடல்களில் எத்தனை தூரம் கீழே இறங்கி இருக்கிறாரோ, அத்தனை தூரம் பின்னணியில் காற்றில் ஏறி விண்ணைச் சாடி இருக்கிறார். அப்படியே தொகுத்து ஆல்பமாகப் போடலாம்.

விருந்து 4 : யார் அந்த தேவதை கீர்த்தி ரெட்டி? கான்வென்ட்டுக்குப் போய்க் கொண்டு, லாலிபாப் சாப்பிட்டுக் கொண்டிருந்தவரைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து


ஸ்கிரீனில் நிற்க வைத்தாற்போல முகத்தில் மழலை வழிகிறது! வசனங்களே அதிகம் இல்லாமல் அந்தக் கண்களால் மட்டும் எப்படியெல்லாம் ஜாலம் காட்டுகிறார்?

நாசரின் இரண்டாவது (விஷப்) பரீட்சார்த்த முயற்சியான இது, கலைப் படம் அல்ல; கமர்ஷியல் படம் என்று சொல்வதற்கும் ஏராளமாக யோசிக்க வேண்டி இருக்கிறது.

துபாயில் போய்ப் படமெடுத்திருப்பது, தேவையில்லாமல் சில பாடல்களைச் சேர்த்திருப்பது, படத்தின் தன்மைக்குச் சற்றுக் கூடுதலான வேகத்தில் எடிட் பண்ணியிருப்பது எல்லாம் அவருக்கு ஏதாவது ஒரு வகையில் உதவுமானால் சந்தோஷம்தான்.

- ஆர்.பி.ஆர்.





ஷாராஜ்

"இந்த வீட்ல நீ வெச்சதுதான் சட்டமா? இல்ல, கேக்கறேன், என்னமோ பெருசா அதிகாரம் பண்றயே...?"

சம்பூர்ணத்தம்மாள் கையை அம்மாவின் முகத்துக்கு நேரே நீட்டி, சுட்டை விரலை உயர்த்திக் கேட்டாள்.

"நீ உன்ற பொறந்த வீட்டுக்குப் போகும்போதெல்லாம் பருப்பு டப்பாவுலயும் கடுகு டப்பாவுலயும் வெச்சிருக்கற சில்லறக் காசு மொதக் கொண்டு, பூட்டி வெச்சிருக்கற பீரோவுல பொடவைக்குள்ள அம்பது நூறுன்னு மறச்சு வெச்சிருக்கற பணமும் கூடவே போகுதே. அதெல்லாம் எனக்குத் தெரியாதா?"

இப்போது இரண்டு கைகளுமே பாவனைகள் காட்டின. தோல் சுருங்கின, நரம்புப் புடைப்புக் கைகள். விரல்களில் முடிச்சுகளாக வளைவும் காணப்படுகிறது. கைகள் இரண்டிலும் முழங்கையிலிருந்து பச்சை குத்தியிருக்கிறது. இடதுகை உட்புறத்தில் வடிவப் பிசகுடன் சம்பூர்ணம் என்ற எழுத்துக்களும் இங்கிருந்தே தெரிந்தது தன்யாவுக்கு.

"என்ன தைரியம் இருந்தா எங்கிட்டயே கேப்பே. இங்க என்ன கொட்டியா வெச்சிருக்குது? உங்க அப்பன் வீட்டு மொதலாடி போச்சு? எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு வாயில நல்லா வந்துரும் ஆ...ம்மா..."

இத்தனை நேரம் பேசினதில் மூச்சு வாங்கியது சம்பூர்ணத்தம்மாளுக்கு. சாய்ந்து உட்கார்ந்து மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கினாள்.

அம்மா இத்தனைக்கும் குறுக்கிடாமல் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். புதிதாகப் பார்க்கிறவர்களாக இருந்தால் இவள்தான் சம்பூர்ணத்தம்மாளின் மருமகள் என நினைத்துக் கொள்வார்கள். அப்படி ஒரு தொனியும் ஆவேசமும் அவளது பேச்சில்.

சம்பூர்ணத்தம்மாளுக்கு அப்படி ஒரு குணம். பேசும்போது யாரைப் பற்றிய புகாரானாலும் கேட்பவர்களையே முன்னிலைப் படுத்தி, அவர்தான் புகாருக்குரியவர் என்கிற தோற்றத்தை உண்டுபண்ணியே பேசுவாள். அந்த விதத்தில் இப்போது சிவகாமியக்காவாக ஆகிவிட்டிருக்கிறாள் அம்மா. இந்தப் புகார் சொல்லல்கள் பெரும்பாலும் சிவகாமியக்காவைப் பற்றியதாகவே இருக்கும். பக்கத்து வீடு என்பதால் சம்பூர்ணத்தம்மாள் முதலில் வருவது இங்கேதான்.

இங்கேயோடு நிற்காமல் அண்டையில் லீலாவதியக்கா, தேவகியம்மாள், எலக்ட்ரீஷியன் பாலுநாய்க்கர் மனைவி, ரீத்தாக்கா என ஒவ்வொருவரிடமும் போய்ச் சொன்னால்தான் அவளுக்குத் திருப்தி.

தன்யாவுக்கு இந்த மாதிரி ஆட்களைக் கண்டால் அறவே பிடிக்காது. அடுத்தவர்களைப் பற்றிப் புறம் பேசுகிறவர்களையும், தேவையற்ற வம்புகளைப் பேசுகிறவர்களையும். அம்மாவைக் கூட, "நீ ஏம்மா அந்தக் கெழவிகிட்டப் பேசிட்டிருக்கற? அவங்க குடும்ப விவகாரமெல்லாம் நமக்கெதுக்கு?" என்பாள்.

"நானா பேசப் போறேன். அதுவா வந்து சொல்லுது. வேண்டாங்க முடியுமா?"

"ஏன் முடியாது? ஒரு தடவை சொல்லிட்டா மறுபடி இங்க வருமா அந்தக் கெழவி?"

"போடி இவளே. பெரிய மனுஷியாட்டம்..." என்பாளேயல்லாமல் இவளது கருத்தைக் காது கொடுக்க மாட்டாள்.

சிவகாமியக்காள் பாவம், மாமியாரிடமும் புருசனிடமுமாக சிக்கிச் சீரழிகிறாள்



மாமியார் பேச்சிலேயே அரித்து விடுவாள். அவரோ திட்டுவதோடு கோபம் அதிகரித்தால் கை நீட்டி விடவும் செய்வார். இன்னதுதான் என்றில்லாமல் சரமாரியாக வார்த்தைகள் தெறிக்கும். தேவயம்மாள் சொல்வார். 'தொட்டாத் தொண்ணூறுக்கும் குத்தம் கண்டுபுடிக்கற ஆளு.' நின்னால் குற்றம். உட்கார்ந்தால் குற்றம்.

''சீப்பு எங்கடீ காணோம்? ஒண்ணு வெச்சா வெச்சபடி இருக்காதே இந்த வீட்ல. மனுசன் அவசரமாக் கௌம்பணுங்கற போதுதான் சனியனைக் காணாது. சீக்கிரம் தேடி எடுத்துட்டு வாடி. இத எடுத்துட்டு வர இவ்ளோ நேரமா? மூதேவி, மூதேவி. எங்க போற? நில்லு. அப்பவே கேக்கணும்னு நெனச்சேன். சட்டையத் தேச்சு வெச்சிருக்கற லட்சணமாடி இது? பாரு, நீயே பாரு. அங்கொரு மடிப்பு, இங்கொரு மடிப்பு. குறுக்கால மடிச்ச பெறகு பெட்டிய வெச்சுத் தேய்க்காதன்னு எத்தன வாட்டி சொல்லியிருக்கறேன். மர மண்டை. ஜடம். தலைல என்ன களிமண்ணா வெச்சிருக்கறான் ஆண்டவன். கொஞ்சம் கூட மூளையே கெடையாதா? போடீ. கண்ணு முன்னாலே நிக்காத. மொகறையப் பாத்தாலே எரிச்சல்தான் வருது.''

இது மட்டுமல்லாமல் வீட்டில் மளிகைச் சாமான்கள் தீர்ந்துவிட்டது என்று சொன்னாலும் சரி. பையன்கள் ஏடாகூடமாக எதை யாவது செய்துவிட்டாலும் சரி. அவரிடம் வாங்கிக் கட்ட வேண்டியிருக்கும்.

போதாததற்கு சம்பூர்ணத்தம்மாளும் இருந்துவிட்டால் அவ்வளவுதான். மகனுக்கு ஒத்து ஊதி நெருப்பைப் பற்ற வைப்பாள். அது அணைந்தாலும் புகைத்து மற்ற வீடுகளுக்குப் பரப்புவாள்.

''எம் பையனுக்கு நீ, நான்னு போட்டி போட்டுட்டுப் பொண்ணுக் குடுக்க வந்தாங்க. இருவது பவுனு நகைக்கும் வேலைக்கும் ஆசப்பட்டு இவளக் கட்டி வெச்சேன். பாக்கறதுக்கே நல்லால்ல, இவளக் கட்டிக்கிட்டா எப்படி வெளிய கூட்டிட்டுப் போவான்னுட்டு அவரே வேண்டாம்னு தான் சொன்னாரு. நான்தான் பேசி சமாளிச்சு சம்மதிக்க வெச்சேன். அவ ஜாதகத்துல தோஷம் வேற இருந்துது. பரிகாரம் பண்ணினா சரியாயிரும்னு ஜோசியர் சொன்னாரு. எங்க சரியாகுது? அவ காலெடுத்து வெச்சப்பப் புடிச்சது சனி. இன்னும் விட்ட பாடில்ல.''

என்பதாக விரியும் கதையில் கணவன் மாரடைப்பில் இறந்தது, சொந்த வீட்டை விற்க நேர்ந்தது, மகளுக்கு மூன்றாவது குழந்தை ஊன

கண்ணுக்குத் தெரியாதவை

மாகப் பிறந்தது என்றெல்லாவற்றையும் சொல்வாள். அவற்றிற்குக் காரணமாக சிவகாமியக்காவின் முகராசியே குறிப்பிடப்படும்.

பார்க்க சுமார் என்பதற்கும் குறைவாகவே இருப்பாள் சிவகாமியக்கா. கறுப்பு நிறம். குள்ளம், அதை மிகைப்படுத்துகிறதாக பருமன் உடம்பு. மேற்பற்கள் நீண்டு வெளித் தெரியும். அதை மறைக்க அவள் உதடு மூடியிருக்கிற கல்யாணப் போட்டோ கூடுதலாக முகத்தை விகாரப்படுத்திக் கொண்டிருக்கிறது.

தண்டபாணி அண்ணன் அவளை வெளியில் அழைத்துப் போய்ப் பார்த்த தில்லை. அரிதாக சிவகாமியக்காவின் வீட்டுக்கு மட்டும் குழந்தைகள் சகிதம் தம்பதி சமேதராகப் போவார்கள். மற்றபடி அந்த

வீடேதான் கதி அவளுக்கு. அவளை நினைத்தாலே கண்ணுக்குத் தெரியாத ஏதேதோ சங்கிலிகளில் பிணைக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது. அக்கம் பக்கத்து வீடுகளுக்குக் கூட அதிகமாகப் போக்குவரத்து வைத்துக் கொள்ள மாட்டாள். துணி துவைக்க கொல்லைப்புறத்துக்கு வரும்போது காம்பௌண்ட் சுவரில் கையூன்றியபடி தன்யாவிடமோ அம்மாவிடமோ பேசுவாள். இங்கிருக்கும் கறிவேப்பிலைச் செடியிலிருந்து ஓரிரு இலைகளை எட்டிப் பறித்து விரல்களில் கசக்கி முகர்ந்தவாறே.

அப்படி ஒருமுறை, "இத்தனையும் சகிச்சிட்டு இருக்கறது கஷ்டமா இல்லையாக்கா உங்களுக்கு?" என்று கேட்டாள் தன்யா.

"என்ன செய்யறது? இத விட்டா வேற வழியுமில்ல."

"எதுத்துப் பேச வேண்டியதுதான்."

"பேசியும் என்ன ஆயிடப் போகுது. அதிகமாத்தான் திட்டு விழும். எங்க அப்பாவும் அம்மாவும் என்னை கடைசி வரைக்கும் ஒரு வார்த்தை கூட கடிஞ்சு பேசாம செல்லமா வளத்தாங்க. அதுக்கு மாறா இங்க அனுபவிக்கறேன்."

இது அவளது பெற்றோருக்கும் தெரியாமல் இல்லை. மேலும் அடிக்கடி வந்து போவது இருந்தால் மனசங்கடம் கொள்வார்களே என்றுதான் அதையும் தவிர்க்கிறாளாம்.

இந்த சம்பூர்ணத்தம்மாள் இல்லாவிட்டாலாவது பரவாயில்லை. சிவகாமியக்கா படநேர்கிற துயரம் கொஞ்சம் குறையும். மகள் வீட்டில் சில நாள், மகன் வீட்டில் சில நாள் என மாறி மாறித் தங்குபவள் அந்த அம்மாள்.

மகள் வயிற்றுப் பேத்திக்கு சீர் சென்ற வாரம் வைத்திருந்தது. தாய் மாமன் முறையாக தண்டபாணி அண்ணன் எக்கச்சக்கமாகச் செலவு செய்தார் என்று முன்பே சொல்லியிருந்தாள் சிவகாமியக்கா. சம்பூர்ணத்தம்மாளும் வந்து பீற்றிக் கொண்டதில் சீர் வகையறாக்கள் போக ஃபோட்டோ எடுத்தது, மண்டபச் செலவு முதலியவற்றையும் இவரே ஏற்றுக் கொண்டதாகக் கேள்வி.

இப்போதே இப்படி செலவு செய்துவிட்டால் இனியும் வரவிருக்கிறவற்றை எவ்வாறு சமாளிப்பது? என்கிறவிதமாக சிவகாமியக்கா நேற்றிரவு கேட்க, இப்போது இப்படி விடிந்திருக்கிறது. இங்கே என்ன கொட்டியா வைத்திருக்கிறது என்கிற பேச்சைப் பேசக்கூடியவளே அல்ல அவள். அது இந்தக் கிழவியின் திரிப்பாகவே இருக்கும். இங்கேயே வந்து இல்லாததைச் சொல்கிறவள் மகனிடம் என்னவெல்லாம் ஓதிக் கொடுத்தாளோ? தெளிவற்ற சிவகாமியக்காவின் குரலும் இவர்களின் உரத்த குரலுமாகக் கேட்டது, கடைசியில் அடிக்கிற சப்தத்துடன் முடிந்திருந்தது.

அடிகொண்டவள் அழுதிருப்பாளோ என்னவோ. வலி மிகுந்தால் ஒழிய அவளது அழுகுரல் வெளியே கேட்காது. தனிமையின் சில பொழுதுகளில் கிணற்றடியின் துவைக்கிற கல்லில் அமர்ந்து விசும்புவாள். யாராவது பார்த்துவிட்டால் கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து போய் விடுவாள்.

"தனா... ரொம்ப மும்முரமாப் பின்னிட்டிருக்கறயாட்ட இருக்குது?"

தன்யா ஸ்வெட்டர் ஊசியில் நூலைச் சுற்றுகள் போட்டபடியே நிமிர்ந்தாள். உட்கார்ந்த தோரணையிலிருந்து சற்றே முன்னகர்ந்து கேட்டுவிட்டு, மீண்டும் சாய்ந்து கொண்டாள் சம்பூர்ணத்தம்மாள். அவள் வந்தால் எப்போதும் அமர்வது இந்தப் பிரம்பு நாற்காலியிலேயே. உட்காருமிடம் சற்றுக் குழிவாக இருப்பதும் வாகாக சாய்ந்து கொள்ள முடிவதும் வசதியாக உள்ளதால் அதை அவளே சொல்வாள்.

"யாருக்கு தனா இது?"

இவள் பதில் சொல்லாமல் விட்டாலும் கிழவி விடுகிறபாடில்லை. .பேர் வாயில் வராமல் தன்யாவை தனா, தனா என்று துளைக்கிறது.

"அடுத்த வீதில ஒரு அய்யங்கார் வீடு இருக்குல்ல. புதுசாக் குடிவந்தவங்க. அவங்க பேரக்கொழந்தைக்கு வேணும்னாங்க. அதுக்குத்தான் இந்த ஸ்கார்ப்பப் பின்னிட்டிருக்கறா." அம்மாவே சொல்லி விட்டாள்.

"மணி பதினொண்ணு இருக்குமா?"

கேட்டுத் தெரிந்துகொண்டு, "நான் கௌம்பறன் லச்சுமி" என்று புறப்பட்டு விட்டாள் சம்பூர்ணத்தம்மாள். காற்றுக்குச் சற்றே மூடியிருந்த கதவை நன்றாகத் திறந்து விட்டு எட்டிப் பார்த்தபோது நேரே வடக்கே அவள்



"எங்க தலைவரு, உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரத்துல, கில்லாடி..."

"அப்படி என்ன வியாபாரம்?"

"வெளிநாட்டுக்குக் கடத்தல்; உள் நாட்டுல சாராயம்!..."

– தேவந்தி துரைராஜ்

போவது தெரிந்தது. தேவகியம்மாளிடமாக இருக்கும். அவளுக்குச் சம வயதை ஒத்தவள் அவள். எப்படியும் மதியம் வரைக்கும் அங்கே கழியும். இருவரும் தத்தமது மருமகள்களைப் பற்றி வெற்றிலை வாயில் குதப்பித் துப்பு வார்கள்.

அம்மா எழுந்து சென்ற பிறகு தன்யா ஸ்கார்ப் பின்னுதலைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். பாத்ரூமுக்குப் போக வேண்டி நேர்ந்து வெளியே வரும்போது வெயில் உறுத்தலாகத் தாக்கியது. இத்தனை நேரம் நிழலில் இருந்த உடம்பில் வெயில் படவும் லேசாகக் குளிர்கிற உணர்வு.

திரும்ப வரும்போதுதான் கவனித்தாள் தன்யா. சிவகாமியக்கா அவர்கள் வீட்டில் முன் கட்டிலேயே நிற்பதை. தலை வாரிக் கொண்டிருந்தாள். போன தீபாவளிக்கு மஹாராஜாவில் எடுத்த சேலை. எங்காவது வெளியில் போகிறபோது மட்டும் அவள் உடுத்துவது அது.

தன்யா அவளது வீட்டை நெருங்கினாள். உள்ளே செல்லவில்லை. படிக்கட்டில் நின்று கொண்டாள். "எங்கேயோ பொறப்பட்டாச்சு போல, எங்க சிவகாமியக்கா?"

"எங்க போறது? நமக்குத்தான் இந்த வீடு, விட்டாப் பொறந்த வீடுன்னு ஆயிப் போச்சே. அங்கதான் போகணும்."

"இருந்தாப்ல போறீங்க. வீட்ல விசேஷமா? சொல்லவே இல்லையே."

''விசேஷம் ஒண்ணுமில்ல தன்யா'' சலித்தாள் அவள். கையிலிருந்த சீப்பு தலை முடியைக் கவ்வி உட்கார்ந்தது. உடனே கண்களில் ஆச்சரியம் காட்டினவளாக, "உனக்கு விஷயம் தெரியுமா?"

"என்ன?"

"நேத்து ரவி அப்பா என்னை அடிச்சுட்டாரு."

இதைச் சொல்லவா இந்த ஆச்சர்யம். "அதுதான் உங்க மாமியார் செய்தி வாசிச்சுட்டுப் போயிட்டாங்களே."

''இன்னைக்கும் சண்டைதான். நான் ராத்திரி பேசனதோட விட்டுட்டேன் தன்யா. காலைல எங்க மாமியாரு மறுபடியும் தொடங்கி வெச்சுட்டாங்க. பசங்க ஸ்கூலுக்குப் போற அவசரம், அவரும் ஆஃபீஸ் போகணும். இதுல மாமியாருக்கு வேற குளிக்க தண்ணி சுட வெச்சுக் குடுக்கணும். உங்கிட்ட சொல்றதுக்கென்ன? ராத்திரி பூரா அழுதுட்டே கெடந்தனா, தூங்கறதுக்கு லேட்டாயிருச்சு. எந்திரிக்கும்போது ஆறு மணி. அடிச்சுப் புடிச்சு எல்லாத்தயும் செஞ்சுட்டிருந்தேன். சரி, ஒரு நாள்தானேன்னு அவுங்களே தண்ணியச் சுட வெக்கலாமில்ல. அதுக்குத்தான் தனியா வெறகடுப்பு இருக்குதே. அதுவும் முடியலன்னா எங்கிட்ட சொல்லணும். முணுமுணுன்னு தானாப் பேசிட்டிருந்தாங்க. அவரு கேட்டுட்டாரு. அம்மா புள்ளையாச்சே. அப்புறம் ஒரே சத்தம். நானும் நல்லாக் குடுத்து விட்டுட்டேன்."

தன்யா பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"நீ சொல்றாப்ல எத்தனை நாளைக்குத்தான் இத சகிச்சுக்கறது தன்யா. ஒருநாளா, ரெண்டு நாளா. வெறுத்துப் போச்சு எனக்கு. என்னோட ரெண்டு பசங்களயும் நெனச்சுத்தான் இத்தன நாளும் பாத்துட்டிருந்தேன். இனிமே பாக்கறதா இல்ல."

இப்போது தன்யா ஆச்சரியமாகப் பார்த்தாள் அவளை. சிவகாமியக்காதானா இது என்று நம்பக் கூடாமல்.

''அவரு மத்தியானம் சாப்பிட வரு வாரில்ல. சொல்லிட்டுப் போயிறலாம்னு இருக்கேன்'' என்றவள் மேஜை மேல் சுவரில் சாய்த்திருந்த கண்ணாடியை முகம் பார்க்க ஆரம்பித்தாள். தலைச் சீப்பு கைக்கு வந்தது.

''அப்பத்தான் சரிப்பட்டு வருவாங்க.'' புன்னகைத்து விட்டுத் திரும்பினாள் தன்யா.

பக்கத்து வீட்டு பவித்ராக்கா கொடியில் துணிகளை விரித்து க்ளிப் மாட்டி முடிந்தும் கூட சுருக்கங்களை நீவிக் கொண்டிருந்தாள். இவள் பார்க்கவும் வலியச் சிரித்துவிட்டு, "இது நல்ல கதையால்ல இருக்கு. சீராடிப் போறவ வீட்டுக்காரர்கிட்ட சொல்லிட்டுத்தான் போகணுமா?" என்றாள்.

தன்யா எரிச்சலைக் காட்டாமல் பொருள் கொள்ளாத தலையசைப்புடன் நகர்ந்து விட்டாள். அம்மா உட்பட ஏன் இந்தப் பெண்கள் இப்படி இருக்கிறார்கள் என்று நினைத்தவாறே.

ஸ்கார்ஃபைத் தொடர்ந்தாள். மதியம் சாப்பிட சைக்கிளில் வியர்த்து வந்த தண்ட

''என்ன ஸார் இது? கொள்ளைக்காரன் வேஷம் போட்டுக்கிட்டு எங்க கிளம்பிட்டீங்க!''
''வேஷமில்லே ஸார், நிஜமாவே வழிப்பறி செய்யத்தான் புறப்படறேன்! என் மகனை சுயநிதி கல்லூரியிலே சேர்த்தாகணுமே?''
– வி. அர்ஜுன்குமார்





''தலைவர்தான் உங்களை மதிக்கிறதே இல்லையே, அப்படியும் ஏன் நீங்க அந்த கட்சியிலேயே இருக்கீங்க?''

''வேற கட்சிக்குப் போனா, இதை விடக் கேவலமா மதிப்பாங்களே!''

– சீர்காழி வி. ரேவதி

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

பாணி அண்ணனைப் பார்த்தபோது அவளுள் சிரிப்பு தானாகவே உண்டாயிற்று. சிவகாமியக்கா கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போகவிருப்பது தெரிந்ததும் அவரது முகம் போகும் போக்கைக் கற்பனை செய்து பார்க்கவும் பிடித்திருந்தது அவளுக்கு.

கிட்டத்தட்ட அந்த மாதிரியான இறுக்கத்துடன் அப்புறமாய் அவர் திரும்பிப் போகவும் செய்தார். சற்று நேரத்தில் மாற்றுத் துணிகளை உள்ளடக்கியதாக இருக்கக்கூடிய நைலான் ஒயர் கூடையுடன் சிவகாமியக்கா விறுவிறுவென நடந்து செல்வதையும் ஜன்னலில் பார்த்தாள்.

அந்தக் கூடை தன்யா பின்னிக் கொடுத்தது. இளிப் பச்சை நிறப் பின்னணியில் இருபுறங்களிலும் அணில் உருவம் கொண்ட கூடை. வெளிர் சந்தன நிற அணில்கள். கொறிக்கிற பழம் மட்டும் சிவப்பு.

''அணில தோட்டத்துல பாத்தாலும், அணில் படத்தப் பாத்தாலும் உன் ஞாபகம் தான் வருது தன்யா'' என்று சிவகாமியக்கா பல தடவை சொல்லியிருக்கிறாள். சோமந்துறை சித்தூரிலும் அணில்கள் இருக்கத்தானே செய்யும். அதில் ஒன்றாவது சிவகாமியக்காவின் கண்களுக்குத் தட்டுப்படும். நிச்சயமாக அப்போதும் தன்னை நினைத்துக் கொள்வாள் என்று தோன்றியது.

''போமடி, போ. போக்கத்தவளே. நீ போயிட்டா இங்க கூரையா இடிஞ்சு உளுந்துரும்? இல்ல எங்களுக்கு சோறு தண்ணி எறங்காதா? பின்னயும் நிம்மதியா இருப்போம்டி, 'நானும் எம் புள்ளையும். ரொம்பத்தான் ஆடறயே. ஆடுடீ, ஆடு. உன்ற ஆட்டத்த நிறுத்திக் காட்டறனா இல்லையா பாரு. ம்ஹூம்?''

சம்பூர்ணத்தம்மாளின் குரல் மட்டும் அனாதியாய் வெம்மையான காற்றோடு கலந்து வந்தது. வேறு யாரும் அங்கே இருக்க மாட்டார்கள். அவளின் தனி ஆவர்த்தனம்தான்.

''பசங்கள நல்லா கவனிச்சுக்கங்க அத்தேன்னு சொல்லிட்டுப் போறயே நீயி? நீ என்னடி எனக்கு உத்தரவு போடறது. நான் உனக்கு மாமியாரா - இல்ல நீ எனக்கு மாமியாரா? சொல்ல வந்துட்டா பெருசா. பசங்கள கவனிச்சுக்கறதாமா... பசங்கள. எங்களுக்குத் தெரியாதா அது. கரிசனம் கட்டீட்டு அழுகுதாமா...''

தனிமையோடு பேசுகிறதாலோ என்னவோ அவளது குரல் சற்று உரத்திருந்தது. தெளிவாகக் கேட்டது. விஷயம் அம்மாவுக்குத் தெரிய வந்தது இதன் பிறகே.

''சிவகாமி கோவிச்சுட்டுப் போயிட்டா போல'' என்றாள். தன்யா காதில் விழாத பாவனையானாள்.

''வந்து சாப்பிடும்மா. நேரமாகுதில்ல?'' ஊசி, நூல்களை வைத்துவிட்டு அம்மாவுடன் சென்றாள் தன்யா.

சாப்பிடும்போதும் அம்மா தொடர்ந்தாள். சம்பூர்ணத்தம்மாள் பற்றியும், தண்டபாணி அண்ணன் பற்றியுமான அவளது அதிருப்திகள் வெளிப்பட்டன. தன்யா, ''கொஞ்ச நாளைக்கு அந்தக்கா இங்க வராம இருந்தாத்தான் தெரியும் இவங்களுக்கு'' என்றதை அம்மா ஒப்புக் கொண்டதுபோல் பட்டது.

பாத்திரங்களையும் தட்டுகளையும் கழுவ தன்யா வெளியே கொண்டு சென்று வைத்தாள். தண்டபாணி அண்ணனின் வீடு கிழவியின் தனி ஆவர்த்தனமும் நின்று நிசப்தத்தில் ஆழ்ந்துவிட்டிருந்தது.

பாத்திரம் கழுவுதல் முடிந்து நிமிர்ந்தவள் காம்பௌண்ட் சுவரை ஒட்டி சிவகாமியக்கா நிற்பதைப் பார்த்தாள். சாதாரண காட்டன் புடைவைக்கு மாறியிருந்தாள்.

''என்னங்கக்கா இது? ஊருக்குப் போகலையா?''

கைகளை சுவரின் மட்டத்தில் ஊன்றிக் கொண்டவள், ''ரவி அப்பா ஆஃபீஸ் போனதுமே பொறப்பட்டுப் போனேன். பஸ் ஸ்டாப்புல நின்னுட்டிருக்கும்போது பாத்தா... ஆஃபீஸ் போகாம அங்க வந்து சைக்கிள நிறுத்தறாரு. கீழ எறங்கக் கூட இல்ல. கால ஊனி நிறுத்திட்டு, 'ஏறு, வீட்டுக்குப் போலாம்'னாரு. நானும் ஏறி உக்காந்துட்டேன்'' என்றாள் சாதாரணமாக. கைகள் எட்டி கறிவேப்பிலைகள் ஒன்றிரண்டைப் பறித்தன.

தன்யா குழப்பமாக அவளைப் பார்த்தாள். பாத்திரங்களை நீர் வடியக் கவிழ்த்து வைத்துவிட்டு ஈரக் கைகளைத் துடைத்தபடி வீட்டுக்குள் நுழையத் திரும்பினாள்.

கதவு நிலையைப் பற்றியவாறே நின்றிருந்தாள் அம்மா. அவளது முகத்தில் மெலிதான புன்னகையும் இருந்தது.

2

சென்ற வாரம்...

சென்னையிலிருந்து வருகிற தமது பேத்தி நர்மதாவைக் அழைத்து வருவதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்கிறார் 'சர்தார்ஜி' என்று அழைக்கப்படுகிற அனந்தாச்சாரி. எதற்காகப் பேத்தியை அவசரமாக வரச் சொன்னார்? மேலே படியுங்கள்...

ரயில் போய்விட்டது. கூட்டம் கரைந்து கடைசி டிக்கெட்டையும் வாங்கிய டி.சி., அனந்தாச்சாரியும் நர்மதாவும் கையில் சூட்கேஸுடும் தோளில் தொங்குபையுமாக இன்னும் அங்கேயே நிற்பதைக் கவனித்தார். அருகே நெருங்கி வந்தார்.

"என்ன சர்தார்ஜி, யாரையாவது எதிர்பார்த்து நிக்கறீங்களா?" அவர் குரலில் பவ்யம்.

தாத்தாவின் ஈர்ப்பு சக்தி சுற்றிலும் பல ஊர்களில் பரவியிருப்பது நர்மதாவுக்குப் புதிதல்ல. எனினும் ஒரு பிரிவுக்குப் பின் அதைச் சந்திப்பது அவளுக்குப் பெருமையாய் இருந்தது. அவரையே பார்த்தாள்.


"ஆமா... நம்ம ஊர்ப் பையன் ஆட்டோ ஓட்டறான். யாரையோ 'ட்ராப்' பண்ணிட்டு எங்களைக் கூட்டிட்டுப் போறதா சொல்லிட்டுப் போனான்."

"ஏதாவது கூல் ட்ரிங்க்ஸ் அனுப்பட்டுமா?"

"ஐயய்ய... அதெல்லாம் வேணாம். நீங்க போங்கோ... ரொம்ப நன்றி."

டி.சி. வணங்கி விட்டுப் போனார்.

நுழைவாயில் அருகே இருந்த பெஞ்சைக் காட்டி,



கன்னியராகி நிலவினில் ஆடி...

"எத்தனை நாழி நிக்கறது? உட்காருவமா?" என்று கேட்டுக் கொண்டே அனந்தாச்சாரி உட்கார்ந்தார். அவளும் உட்கார்ந்தாள்.

"எதுக்கு எஸ்டிடி போட்டே?" என்று ஆரம்பித்தாள் நர்மதா.

"—"

"கேக்கறேனே! காதில விழல்லியா... ஹியரிங் எய்ட் வாங்கியாகணுமோ?"

கலையாத புன்முறுவலுடன் நறுக்கென்று கேட்டாள்.

"வயசாச்சேடா கிழவா... நீ மட்டும் ஏன் ஹியரிங் எய்டுக்கும் மூக்குக் கண்ணாடிக்கும் டபாய்ச்சுண்டிருக்கேங்கறியா?"

நர்மதா நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"ஐ'யாம் ஸாரி அனந்து!"

திடீரென்று எப்போதாவது அவள் அவரை அனந்து என்று கூப்பிடுவாள். அது நெருக்குருகிய சமயமாயிருக்கும். அவருடைய அம்மா பத்மாவதி மாதிரி. பாட்டி ரங்கநாயகி மாதிரி.

"என்னை எப்படி இருக்கே எப்ப ரயில் ஏறி

வையவன்



னேன், பிரயாணம் சௌக்யமாருக்கான்னு ஒன்னும் கேக்காதே!" சட்டென்று உணர்வு மாறியது.

ஒரு செடியிலும் ஒரு கணம் தங்காத தேன் சிட்டின் படபடப்பு மீண்டும் தொடங்கிவிட்டது. கேள்விகளின் அணி வகுப்பு தொடர்ந்தது.

"அம்மா எப்படியிருக்கா? போன லட்டர்ல லேசாத் தலை சுத்தறதுன்னு எழுதியிருந்தாளே... பிபி செக்-அப் பண்ணச் சொல்லி பதில் போட்டேன். பண்ணிண்டாளோ? அப்பாவுக்கு முழங்கால் பிடிப்பு கொணம் தானா? மேல்பூச்சுக்கு கோட்டயத்திலேர்ந்து ஆயுர்வேத மருந்து வாங்கி கூரியர்லே வேலூருக்கு அனுப்சிருந்தேனே... யூஸ் புல்லா?"

அனந்தாச்சாரி பதில் சொல்லவில்லை. மூச்சு விட்டால் தானே அவன்! பரபரவென்று நாலாபுற வயலுக்கும் பாயவேண்டிய கடமை இருக்கிற ஜீவநதி போல் என்ன உயிர் ஓட்டம் இது?

அவர் தன்னை... தன் பதற்றத்தை வேடிக்கை பார்க்கிறார் என்று புரிந்தது.

"ஸாரி தாத்தா! என்னால கண்ட்ரோல் பண்ண முடியல... மூணு மாசம்னா... மூட்டையாக் கட்டி வச்சிண்டதெல்லாம் ஒன்னப் பாத்ததும் தானா அவுந்து கொட்டறது. நோக்கென்ன, நீ பிரும்ம ஞானி. கல் ஆமை மாதிரி ஒடுக்கி உட்கார்ந்துண்டு வேடிக்கை பார்ப்பே."

அனந்தாச்சாரிக்கு சிரிப்பு வந்தது.

"பாரு... பாரு அசட்டுப்பண்டாரம்னு தானே சிரிக்கறே" என்று எச்சரிப்பது போல் சுட்டு விரலை ஆட்டினாள்.

"அதில்லே"

"பின்னே?"

"ரெண்டு உபமானம் அன்னிவிளாசினே! ரெண்டும் தங்க மெடல். இதிலே எது சிலாக்கியம்? இல்லே ரெண்டுமே கோல்ட் கவரிங்கான்னு யோசிக்கறேன்."

"ஆமா நான் சொல்லித்தான் நீ புதுசா ஏதாவது ஆகணுமாக்கும். அது கெடக்கட்டும் விடு... எதுக்காக இங்க தேவுடு காத்துண்டிருக்கணும்? மோகன்ராஜ் ஆட்டோவில் ரிப்பேரோ என்னமோ? வேற ஆட்டோ பாத்துக்கலாம் தாத்தா" என்று வீட்டுக்குப் போகும் ஆவலில் பறந்தாள் நர்மதா.

"சேச்சே! மோகன்ராஜ் சொன்னா சொல்லில நிப்பன். வேற ஆட்டோவை யாவது புடிச்சுண்டு

வந்துடுவன். நாம போயிட் டோம்னா அவன் மனசு நொந்துடும். சித்த நாழி வெயிட் பண்ணுவம்" என்று கூறி பேச்சை மாற்றினார்.

"ஒன்னோட ப்ராஜக்ட் முடிஞ்சுடுத்தா?"

"நீ ஏன் எஸ்டிடி பண்ணே?"

''சொல்லத்தானே போறேன்... என் கேள்விக்குப் பதில் சொல்லு."

''எது முடியப் போறது? சமூகத் தொண்டு பண்றவாளுக்கு எப்ப முடிவு? சேரன்மாதேவி மேடம் இருக்காளே... க்ரேட்... பாதாளச் சேத்துல பொதஞ்சிருக்கற பெண்களை உசிரைக் கொடுத்து மேல இழுத்துண்டிருக்கா. சும்மா எலவசமாக சோறு போட்டு, சேலை குடுத்து கண்ணைத் தொடச்சு விடறவ இல்லே அவ. போராடக் கத்துக் குடுத்துண்டிருக்கா. சுய மரியாதையையும் சுதந்திரத்தையும் கத்துக் குடுத்திண்டிருக்கா."

நூறு நூறு ஜன்னல்கள் திறந்தது போல் அவன் கண்களில் வெளிச்சம்.

சட்டென்று அவள் அனந்தாச்சாரியை மோவாய் மூக்கு நெற்றி திருசூர்ணம் என்று நோட்டமிட்டு வெயில் தணியாத வானத்திற்குப் பார்வையை உயர்த்தினாள்.

''தாத்தா... நீ ஏன் சுதந்திரப் போராட்டத்திலே கலந்துண்டே? ஏன் ஜெயிலுக்குப் போனே? ஏதோ மகாப்பிரமாதமான சுதந்திரம் வாங்கித் தந்துட்டதா பீத்திக்கிறேன்... என்னோட வாங்கோ! நீங்க வாங்கித் தந்த சுதந்தரம் எந்த லட்சணம்னு..."

நர்மதாவின் பார்வையில் சூடு பறந்தது. உணர்ச்சிமயமானாள். அனந்தாச்சாரி அதை நீடிக்க விடவில்லை.

"நான் சுதந்திரம் வாங்கித் தந்தேனா? யார் சொன்னது? சுதந்திரம்னா என்னை வாங்கிண்டது. போனாப் போறதுன்னு நேக்கும் ஒரு பொட்டு வச்சாப்பிலே."

"இந்த அவையடக்கம்லாம் எங்கிட்டே வேண்டாம்! நீ ஏன் போய் பொட்டு வை பொட்டு வைன்னு போராட்டத்திலே நெத்தியைக் காட்டிண்டு நின்னே?"

நல்லவேளையாக அதற்குப் பதில் சொல்கிற சங்கடத்தைக் காப்பாற்ற ஆட்டோ மோகன்ராஜ் வந்து இரண்டு தடவை 'ஹார்ன்' அடித்து வண்டி நிறுத்தி உள்ளே வந்தான்.

''ரொம்ப லேட்டாக்கிட்டனா சர்தார்ஜி! வழியிலே வண்டி மக்கர் பண்ணப் பார்த்துது" என்று சூட்கேஸைத் தூக்கினான்.

நர்மதாவின் பக்கத்திலிருந்த தொங்கு பைக்கு, கைநீட்டினான்.

"வாண்டாம்! நான் எடுத்துண்டு வர்றேன்."

ஆட்டோவில் ஏறி அமர்ந்ததும் சீறிக் கொண்டு கிளம்பினான் மோகன்ராஜ்.

கல்யாண நாள். அவன் அவசரம் புரிந்தது.

''சிஸ்டர் மெட்ராஸிலிருந்து வர்றாப் பலியா?"

மோகன்ராஜ் அவர்கள் குடும்பத்திற்கே பழக்கம்.

''ஆமாம் மோகன்! நீ சௌக்கியமா?" என்று குசலம் விசாரிக்க வேண்டியவளானாள் நர்மதா.

"நல்ல சௌக்கியம்."

மோகன்ராஜ் கேட் விழுவதற்குள் வேகமாக ரயில்வே லைனைக் கடந்தான்.

சிறிது நேரம் ஆட்டோவின் இரைச்சல் தவிர பேச்சொலியற்ற அமைதி.

அனந்தாச்சாரி நர்மதாவின் கேள்விகளை நினைத்தார். "நீ ஏன் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டாய்? ஏன் ஜெயிலுக்குப் போனாய்?"

யாரும் அப்படிக் கேட்டதில்லை இது வரை. கேட்கிற தாபமோ, சிரத்தையோ யாருக்கும் எழுந்ததில்லை. ஏன் கேட்கிறாள் இவள்?

நாட்டில் நடக்கிற கோளாறுகளுக்கும் சின்னாபின்னங்களுக்கும் சுதந்திரம்தான் பொறுப்பு என்கிற மாதிரி!

பிரிட்டிஷ்காரன் ஆட்சித் திறமை, அவன் நிர்வாக ஒழுங்கு இவற்றை இன்று நடக்கும் சுந்தர கோலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து விட்டு அவன் மாதிரி வருமா? எதுக்கு ஐயா நமக்குச் சுதந்திரம் என்ற பிலாக்கணங்கள் அவருக்குப் பரிச்சயம்தான்.

ஆனால் இது வேறு.

இதெல்லாம் நடக்கும் என்று நீ ஏன் எதிர்பார்க்கவில்லை என்று சட்டைக் காலரை உலுக்கிக் கேட்கிற கேள்வி இது.

என் வேலை முடிந்து விட்டது; என் பொறுப்பு தீர்ந்து விட்டது என்று சட்டையை உதறிக் கொண்டு தப்பிக்க முடியாத கேள்விகள்.

ஆலந்தூர் தாண்டியிருக்கும். சட்டென்று பேச்சைத் தொடங்கினான் மோகன்ராஜ். ஏதோ அவர் மாதிரியே ஒரு சிந்தனையிலிருந்து விடுபட்டவன் போல.

''தேரடி மண்டபத்தாண்ட இளைஞர் சங்கம் கூட்டம் போட்ட 'நூஸ்' போலீஸ் வரிக்கும் பூட்சு போலக் கீது தலைவரே!" என்று குரல் செருமிக் கொண்டு தொடங்கினான்.

''எப்படிச் சொல்றே?" என்று கேட்டார் அனந்தாச்சாரி.

''நேத்திக்கு ராவு சவாரி முடிச்சுட்டு வந்துனு கிறேன்! மில்லுக்குக்கிட்டே பெசல் பிராஞ்சு போலீஸ்காரு மடக்கி நிறுத்துனாரு.

அருள் வாக்கு

ஒவ்வொரு ஊரிலும் அநேக சங்கங்கள், மன்றங்கள், குழுக்கள் நிறுவப்படுகின்றன. ஒவ்வொன்

றுக்கும் ஒவ்வொரு குறிக்கோள் உண்டு. இவை ஒவ்வொன்றும் பற்பல சமயங்களில் மற்றவைகளுடன் முரண்பட்டு, ஊரிலும் நாட்டிலும் வெறுப்பு, கசப்பு, புரட்சி முதலியவைகளுக்குக் காரணமாக முடிகிற நிலைக்குக் கொண்டு விடுவதையும் நிறையப் பார்க்கிறோம். ஆதலால் எல்லாக் கசப்பையும் இனிப்பாக மாற்றக்கூடியதும், எல்லாப் புரட்சிகளையும் அன்பாக மாற்றக்கூடியதுமான ஒரு கழகம் நமக்குத் தேவையாகிறது. பக்தி மார்க்கம் என்னும் வழிபாட்டைப் பரப்பும் கழகங்களே இவை. இந்த வழிபாட்டுக் கழகங்களே இப்போதும், எப்போதும் தேவை. மற்ற எல்லா வாழ்க்கை அம்சங்களையும், மற்ற எல்லாக் கழகங்களையும் சாந்த முறையில் சீர்ப்படுத்தும் சாதனம் வழிபாட்டுக் கழகங்களே.

எனவே நம் தேசத்திலுள்ள அத்தனை லக்ஷம் கிராமங்களிலும் சாந்தம் பரவ, ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு வழிபாட்டுக் கழகம் நிறுவ வேண்டும். நாம் எல்லோரும் முனைந்து முயற்சி செய்து ஈசன் அருளைத் துணைகொண்டு இப்பணியை முடித்தாக வேண்டும். இதனால் நாமும் சீர்ப்பட்டு, நம் நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் மக்களும் சீர்ப்பட்டு நாடே அன்பு மயமாகும். நம் ஒரு நாட்டின் உதாரணத்தின் மூலம் உலகமும் சாந்தியாகி, "லோகா : ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து" "வையகம் துயர் தீர்கவே" என்ற நமது வேத நெறியின் சிறப்புக் கொள்கை புத்துயிர் பெற்று நிலவும்; நாம்தான் அப்படி நிலவ வைக்க வேண்டும். இப்பணிக்கே நம் ஆயுளை அர்ப்பணிக்க வேண்டும்.

நவீன விஞ்ஞான வளர்ச்சிகளாலோ, பண வீக்கம் முதலியவைகளாலோ, பரஸ்பர அவநம்பிக்கைகளாலோ ஏற்படக்கூடிய எந்தப் புரட்சியையும் வெகு சாந்தமான முறையில் சமாளிக்கக்கூடிய வழிபாட்டுக் கழகங்களை நிறுவும் பணியில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு, எஞ்சியிருக்கும் நமது வாழ்நாட்களை இதிலே பயன்படுத்தித் தொண்டு புரிவோமாக! "நம் கடன் பணிசெய்து கிடப்பதே!"

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



சவாரி வராதாங்காட்டியும்னு எங்க சார் போவணும்னு கேட்டேன்."

அவன் நாடக பாணியில் காட்சி விவரம் தொடங்கினான்.

"அப்புறம்?"

"எறங்குடான்னாரு. எறங்கினேன். இன்னா போராட்டம் பண்ற திட்டமான்னாரு. புரியலீங்களேன்னேன். இப்பத்தான் லோன்ல சொந்த வண்டி வாங்கிக்கிரே... ஒயுங்கா நாலு காசு சேத்து லோனை அடச்சி குடும்பத்தைக் காப்பாத்திக்காமே இன்னாடா போராட்டம்னாரு."

எதிரில் எருமை மந்தை ஒன்று வரவும் ஆட்டோவை நிதானமாக்கி அவை கடந்து போக வழி விட்டான்.

"அப்புறம்?" அனந்தாச்சாரி துருவினார்.

"ஒனக்குக் கல்யாணமாயிடுச்சாடான்னாரு. பொண்ணு இருக்கான்னு கேள்வி, நுனி நாக்கிலே வந்துடுச்சு."

"கேட்டுட்டியா?"

"கேப்பனா... இருக்குதுடா, கட்டிக்கிறியான்னுட்டானா?"

அனந்தாச்சாரியின் புன்முறுவல் அவனை மெச்சுவதை நர்மதா கவனித்தாள்.

"இல்லேன்னேன்." தொடர்ந்தான்.

"அதாண்டா துன்ற! போராட்டம்னா இன்னானு தெரியுமா... போலீஸ் அடின்னா இன்னானு தெரியுமா? ஏழு ஜென்மத்துக்கு மறக்க மாட்டே. போலீஸ் ரிமார்க் வாங்கினியானா இந்த மாவட்டம் இல்லே. ஹோல் இண்டியா பூரா லைசன்ஸ் வாங்கி வண்டி ஓட்ட முடியாதுன்னு மெரட்டினாரு."

"அவ்வளவுதானா... இன்னும் ஏதாவது சொன்னாரா?"

"சொன்னாரே... கெமிகல் ஃபேக்டரி கட்டறது செண்ட்ரல் கவர்மெண்ட்! ஒங்க மாமனோ எம் மச்சானோ இல்லே. ஆளுங்கட்சியும் சப்போர்ட்டு. எதிர்க்கட்சிக்காரனுங்க நம்ம ஏரியாவுக்கு வேலை வாய்ப்பு வர்றதை நாம ஏன் தடுக்கணும்னு வாயை மூடிக்கினானுங்க. நீங்க ஏண்டா துள்றீங்கன்னான்."

"நீ ஒன்னும் பேசலியா?"

"நாம ஏன் தலைவரே... ஒன்னு கெடக்க ஒன்னு இவனுங்ககிட்டே பேசி மாட்டிக்கணும்?"

மோகன்ராஜ். அழுத்தமானவன். பேசில்

நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். ஏனெனில் நான் யாரிடமும் எதுவும் எதிர்ப்பார்ப்பதில்லை.

— ஐன்ஸ்டைன்

தகவல்: வலங்கைமான் அப்பாஸ்

வாயை விட மாட்டான்.

"அப்புறம்?" என்று கேட்டார் ஆர்வம் குறையாமல்.

"அப்புறம் எல்லாம் எங்க தலைவர்கிட்ட பேசிக்க வேண்டிய சமாசாரம்னேன். அதுக்கு... அவன்..." மோகன்ராஜ் இழுத்தான்.

"சொல்லேண்டா. அவன் என்ன சொன்னா என்ன... என்னைப் பத்தி சொல்லியிருப்பான்..."

"அது மட்டும் என் வாயில வராது."

நர்மதா கவனித்துக் கொண்டிருந்தாள். ஸ்பெஷல் பிராஞ்ச் நபர் ஏதோ தாத்தாவைப் பற்றி அகௌரவமாகச் சொல்லியிருக்க வேண்டும். அதனால்தான் இவன் தவிர்க்கிறான்.

"சரி விடு... அப்ப போலீஸ் குறுக்கீடு இருக்கும்னு புரிஞ்சுப் போச்சு. அவ்வளதானே! நாம இதை எதிர்பார்க்கலியா என்ன?"

"இதுல இன்னொரு 'ட்விஸ்டு' இருக்கு தலைவரே?"

"என்னது?"

"அந்த ஃபேக்டரி பில்டிங் கட்ற இஞ்சினியரு யாரோ பத்ரி நாராயணனாமே! நீங்க பாத்திங்க்னா தலைவரே அவனை?"

"இல்லியே... யாரோ ஒரு டிபார்ட்மெண்ட் ஆளு. எம்டின்னு ரெண்டு பேரு அவன் பையையும் சூட்கேஸையும் தூக்கிட்டு வீட்டுக்கு வந்தானுங்க..."

"அவன் இல்லே தலைவரே. இவன் வேற. கன்ஸ்ட்ரக்ஷன் இஞ்சினியராம். கூலிங்கிளாஸ் போட்டு ட்ரிம்மா இருப்பான்."

"சொல்லு..."

"அவன் வந்து நம்ம மாவட்ட டி.எஸ்.பி. அம்மா இருக்காங்களே..."

"யாரு ஷீலா பிரசாத்தா?"

"ஆமா... அவங்க 'பிரதரா'ம் இவன்.

"இருந்துட்டுப் போவட்டுமே! யாராவது யாருக்காவது பிரதரா இருக்கறதுலே நமக்கென்ன ஆட்சேபணை?"

யாரோ கையை ஆட்டினார்கள்.

மோகன்ராஜ் வண்டியை நிறுத்தினான்.

நிறுத்தியவன் கொடுவாள் மீசையும் பச்சைத் துண்டும் போட்டிருந்தான். உள்ளே யார் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று ஒரு பார்வை பார்த்துவிட்டு மோகன்ராஜை இறங்கி வரச் சொல்லிச் சைகை காட்டினான்.

"தலைவரே ஒரு நிமிசம்..." என்று அனுமதி கேட்டான் மோகன்ராஜ்.

"நீ போய்ட்டு வா மோகன்."

அனந்தாச்சாரி அனுமதி பெற்று அவன் இறங்கிப் போனான்.

"இதுக்குத்தான் எஸ்டிடி போட்டியா?" என்று வெடுக்கென்று கேட்டாள் நர்மதா.

"இல்லே..."

"பின்னே?"

"நோக்கு அவசியமாத் தெரிஞ்சாகணுமோ?"

"எஸ்... எஸ்... எஸ்"

"வர்ற வெள்ளிக்கிழமை ஒன்னைப் பொண் பாக்க திருவனந்தபுரத்திலேர்ந்து ஒரு வரன் வரப்போறது." பளிச்சென்று சொன்னார் அனந்தாச்சாரி.

"அப்படியா... ரொம்ப சந்தோஷம்!" பளிச்சென்று கன்னத்தில் அறைகிற மாதிரி சொன்னாள் நர்மதா.

"பேத்தியின் பேர்ல என்ன கரிசனம்! அவளைக் கேக்காம அவளுக்கு எவ்வளவு சிரேஷ்டமான ஒபகாரம் பண்ணிட்டேள் சர்தார் அனந்தாச்சாரிவாள்" என்று சத்தம் போடாமல் இரு கைகளையும் அறைந்து கண்ணில் ஜ்வாலையுடன் ஒரு கும்பிடு போட்டாள் நர்மதா.

அதற்குள் மோகன்ராஜ் வந்து விட்டதால் இருவரும் மௌனமாக வேண்டி வந்தது.

(தொடரும்)



"கல்யாண சீர்வரிசையிலே பழைய துணிகளை ஒரு பெரிய மூட்டை கட்டி வச்சிருக்கே எதுக்கு?"

"அதுவா... அவசரத்துலே எவர்சில்வர் அடுக்கு வாங்க மறந்துட்டாங்களாம். மாப்பிள்ளை வீட்டார் அப்புறமா வாங்கிக்க சௌகரியமா இருக்குமேன்னுதான்!"

— வலங்கைமான் நூர்தீன்

கல்கி, தி.மு.க.வின் அதிகாரபூர்வ வார இதழா?

✉ சேலம் மாநாட்டு ஸ்பெஷல் வெளியிட்டு கல்கி ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்து விட்டது. 'ஜால்ரா' அடிப்பதில் தன்னை மிஞ்ச ஆளில்லை என்பதை நிரூபணம் செய்து விட்டது. தி.மு.க.விற்கென்று 'அதிகாரபூர்வ வார இதழ்' இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்துவிட்டது.

சென்னை – 57, சு. ராஜா.

✉ கடந்த ஓராண்டுக் காலத்தில் அரசு சறுக்கியிருக்கும் விஷயங்களைத் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளதும், அரசுக்கெதிரான கருத்துக்களைக் கூற பீட்டர் அல்போன்ஸிற்கு வாய்ப்பளித்திருப்பதும் கல்கி இதழ் நடுநிலைமையோடிருப்பதைக் காட்டியது.

கள்ளிப்பாடி, கே. ஸ்டாலின்.

✉ எப்போதும் கலைஞரின் பதில்களில் சூடும் சுவையும் இருக்கும். ஆனால் இந்தப் பேட்டியில் அமைதியும், அழகும், சுவையும் சேர்ந்து, பேட்டி இன்னமும் கொஞ்ச நேரம் நீடித்திருக்கக் கூடாதா என்ற ஆதங்கத்தை ஏற்படுத்தியது.

திருப்பரங்குன்றம், டி. கே. சுப்பிரமணியன்.

✉ எதிர்பார்க்கவில்லை... கல்கி அட்டையில் கலைஞரின் வண்ணப்படம்! சிறப்பு மாநாட்டுக்கு முன்பே கலைஞரின் சிறப்புப் பேட்டி. தங்களின் கேள்விகளிலும் சரி, கலைஞர் அளித்துள்ள பதில்களிலும் சரி, எவர் மனதையும் புண்படுத்தாத, யதார்த்தமான, நகைச்சுவையும் கலந்து மிளிர்ந்தது. கலைஞரின் கடைசி வரி பதில், சிரிப்பை வரவழைத்து விட்டது!

உடுமலை, எஸ். பொன்னுசாமி.

✉ 'மேகங்கள் கருக்க ஆரம்பித்ததே தவிர மழை பொழியவில்லை' என்ற தலைப்பில் பீட்டர் அலபோன்ஸின் அலசலும் அதற்கு 'நாளும் பொழிகிறது நல்லாட்சி மழை' என ஆலடி அருணா அளித்த பதிலடியும் நிர்வாக நிலையை நிதர்சனமாக எடுத்துக்காட்டும் நிலைக்கண்ணாடிகளாகும்.

பொறையாறு, கானா.

✉ சேலம் மாநாட்டைப் பற்றி கவர் ஸ்டோரியாய் ட்ரெய்லர் கொடுத்தாலும், கார்ட்டூனில் குறைகளைச் சுட்டிய விதம் சூப்பர்!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ இன்னா வாத்யாரே உனுக்குக் கல்யாண ஜோக் போட்டி கூப்பன் வெளியிட வேற இடம் கிடைக்கலையா? கூப்பனை கட் பண்ண மனசே வரலை. இன்னாபா முழிக்கறே... அதான் பின்னாடி ரம்பாவோட போட்டோ இருந்துச்சே..!

ஔவையார்பாளையம், ஏ.எஸ். யோகானந்தம்.

✉ 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' எனும் தலையங்கம் உண்மையிலேயே கருத்துக்களின் பொக்கிஷம். கருங்கக்கூறி விளங்க வைத்தல் மட்டுமின்றி, தலையங்கத்திற்குத் தக்க தலைப்புக் கொடுப்பதிலும் கல்கி சிறந்து விளங்குகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

விழுப்புரம்-2, வெ. ஆனந்தி.

✉ தின, வார இதழ்கள் திருநாவுக்கரசைப் பற்றி எப்படி எப்படியோ எழுதிக் கொண்டிருக்கின்ற நிலைமையில், கல்கி தனக்கேயுரிய நடுநிலையில் 'திரு' வைப் பற்றி நாடாளு மன்றத்தில் கனி, நீதிமன்றத்தில் காய், சட்ட மன்றத்தில் பிஞ்சு என்று மெய்யாகக் கனித்ததன் மூலம் கல்கியை அனைவரும் நேசிக்கவும் யோசிக்கவும் செய்து சபாஷ் பெற்று விட்டீர்கள்.

சேலம் – 5, எ. ஹஸன்முஹம்மத் அஸனப்பா.

வட்டமேஜை

✉ தன் பிறந்த நாளைக் கூட மறந்து போகும் அளவுக்கு அலுவலக மற்றும் குடும்பச் சூழலில் சிக்கி உழலும் ஒரு பெண்ணின் மன உணர்வுகளைத் தன் 'சிநேகம்' கதையில் அழகாக வடித்துக் காட்டியிருந்தார் சிதா ரவி.

மதுரை – 14, எஸ். வைத்தியநாதன்.

கல்கி, ஒரு நடுநிலைப் பத்திரிகை!

✉ பாரதி சந்திரன் எழுதிய 'அங்கே என்ன அரட்டை' அருமையான சிறுகதை. பத்திரிகை உதவி ஆசிரியர் பணியில் சேரும் விதத்தை நயம்படச் சொல்லியிருக்கிறார்கள்.

சேத்துபட்டு, பா. குணா.

✉ பேட்டி செய்தி ஒன்றில் சேலம் மாநகராட்சியில் ரூ.75 கோடி செலவில் சோடியம் வேப்பர் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்று பிரசுரமாகியுள்ளது. விளக்குகள் ஒரு கோடியே எண்பத்தைந்து லட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளன என்பதுதான் உண்மையாகும்.

பகபதியூர், வி. கோவிந்தராசு.



• தொடரும் பிடிவாதம்!



• வேஸ்ட்!

● தேனம்மாள் ராம சாமி, திருவில்லிப்புத்தூர்.

? லல்லு பதவி விலக மாட்டேன் என்று பிடிவாதமாக இருப்பது ஏன்...?

! பதவியை ராஜினாமா செய்ய மாட்டேன்; அதைவிடத் தூக்கு மேடை ஏறத் தயாராயிருக்கிறேன் என்கிறார். தர்ம நியாயங்களைக் கழுவில் ஏற்றிவிட்டுக் காரியம் செய்பவர்கள் இப்படித்தான் பேசுவார்கள்.

● சி. ஆர். நாகராஜன், பொள்ளாச்சி.

? சேலம் தி.மு.க. அலங்கார வண்டி ஊர்வலத்தில் ஜெ – சசி நீதிமன்றக் காட்சி தேவைதானா...? அநாகரிகம் இல்லையா?

! அது அநாகரிகம் இல்லை; நடந்த உண்மை. ஆனால், அதிலே கருணாநிதியை நீதிபதியாகச் சித்திரித்ததுதான் அநாகரிகம்.

● கே. ஆர். உதயகுமார், சென்னை – 1.

? வெற்றி தோல்விகளை எதிர்பாராமல் உழைத்தால் எதிலும் நிறைவு கிடைக்கும் என்பது சரியா?



• ...திராவகம்!



• அரசியல்...

! வெற்றி இலக்கு நோக்கி வெறித்தனமாய் உழைக்கத்தான் வேண்டும். அப்படி திட்டமிட்டு உழைத்த பிறகும் அது கிடைக்காவிட்டால் சலிக்கவோ சோர்வுறவோ கூடாது. 'எங்கே தவறு செய்தோம்' என்று ஆராய்ந்து நம்மை நாமே திருத்திக் கொண்டு மீண்டும் உழைக்க வேண்டும். That's the idea!

● சூர்யநிலா, சேலம் – 2.

? பதினாலாயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரிகையை வாசிக்கவோ, அதைப் பற்றி யோசிக்கவோ 'அம்மா'வுக்கு நேரம் கிடைக்குமா?

! அவையெல்லாம் ஏற்கெனவே அம்மாவுக்குத் தெரிந்த விஷயங்கள்தானே...! நீதிபதிக்குத்தான் சிரமம்.

● கே. ராஜாதிருவேங்கடம், காப்பரத்தாம்பட்டி.

? தஞ்சை தீ விபத்தில் பெண்கள் அதிகம் உயிரிழக்க 'சேலை'தான் காரணம் என்கிறார்களே?

! அஜாக்கிரதையாகவும் அசட்டையாகவும் இருந்துவிட்டு சேலைதான் காரணம் என்றால் எப்படி ஏற்பது! கோயில் கும்பாபிஷேகத்துக்கு வரும் பெண்கள் ஜீன்ஸ் அணிந்தா வருவார்கள்?

● தி. மகராசன், கடமலைக்குண்டு.

? 'த.மா.க.வினர் எங்களைப் பற்றிப் பேசுவது தட்டிக் கேட்பது போலும் இல்லை; தடவிக் கொடுப்பது போலும் இல்லை – வெட்டிக் கொல்வது போல் இருக்கிறது...' என்



• அதர்ம ஆசை!

திராவகம் பன்னீராக மாறி விட்டதே..?

கிறாரே தமிழக முதல்வர்?

பல்வேறு சம்பவங்கள் உங்களுக்கு வெவ்வேறு குறள்களை நினைவூட்டலாம். அப்படி சமீபத்தில் ஞாபகத்துக்கு வந்த குறள் ஒன்றைக் கூறுங்கள் என்று கேட்டபோது கலைஞர் சொன்னது :

நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை

திருக்குறளைத் தேடி எடுத்து அர்த்தம் பாருங்களேன்!

● புத்தனாம்பட்டி சி. மணி, திருச்சி – 3.

? இந்தியாவில் ஒரு லட்சம் கோடி ரூபாய் கறுப்புப் பண நடமாட்டம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதே... இப்போது சொல்

லுங்கள் - இதுவா ஏழை நாடு?

! இந்த மாதிரி கோடி கோடியாகக் கறுப்புப் பணம் முடங்கிப் போவதால்தான் இந்தியா ஏழை நாடாகவே இருந்து வருகிறது மிஸ்டர் மணி. அந்தப் பணமெல்லாம் 'வெளுப்பாகி', தொழில் - வர்த்தகத்தில் முதலீடானால்தானே நாடு செழிக்கும்!

● எம். இராஜேந்திரன், லால்குடி.

? தர்ம யுத்தத்தில் லல்லு வெற்றி பெறுவார் என்று வீரமணி சொல்கிறாரே...?

! தர்ம யுத்தத்தில் லல்லு வெற்றி பெறுவார் என்று கூறியிருக்கிறாரே தவிர, தர்மம் ஜெயிக்கும் என்று சொல்லவில்லையே! அதர்மம் வெற்றி பெற வேண்டும் என்பது வீரமணியின் நோக்கம் போலும்!

● கே. முருகேசன், மதுரை - 1. ☐

? திராவகம், பன்னீராக மாறிவிட்டதே?

! இவர்கள் ஒருவர் மீது ஒருவர் பன்னீர் தெளித்துக் கொண்டு அரசியலை திராவகமாக மாற்றி மக்கள் மீது தெளிக்கிறார்கள்! மக்கள்தான் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும்.

● எம். கதிஜா ஹனிபா, திருச்சி - 6.

? தமிழகத்தில் 'ஸ்ரீ' என்று ஆரம்பிக்கும் எட்டு திருகோவில்களின் பெயர்களை 'திரு' என தொடங்குபவையாக மாற்றப் போகிறார்களாமே...? - தமிழ்க் குடிமகன் சொல்லியிருக்கிறாரே?


! வேஸ்ட் ஆஃப் டைம்! கோவில்களைச் சிறப்பாக நிர்வகிப்பதில் கவனம் செலுத்தினாலாவது புண்ணியம் உண்டு!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? ஜெயலலிதா - ராமமூர்த்தி அன்று அடித்துக் கொண்டதற்கும் இன்று கருணாநிதி கருப்பையா மூப்பனார் இடித்துக் கொள்வதற்கும் என்ன வித்தியாசம் சார்...?

! அன்று தலைவர்களே ஒருத்தரையொருத்தர் நேரடியாகத் தாக்கிக் கொண்டார்கள். இன்று தாக்குதலெல்லாம் தொண்டர்கள் மட்டத்தில்தான் - தலைவர்கள் நிலையில் இன்னும் தகராறு கிளம்பவில்லை. அவர்கள் ஒருத்தரையொருத்தர் விட்டுக் கொடுக்கவில்லை.





● அன்று தலைவர்கள்...



...இன்று தொண்டர்கள் ●

☐ ரூ. 50 பரிசு பெறுபவர்:
கே. முருகேசன்,
155, சித்திரக்காரத் தெரு (2வது மாடி)
மதுரை — 625 001.

● தஞ்சை பெஞ்சமின், தஞ்சாவூர் - 7.

? காப்பிப் பொடி, சர்க்கரை எல்லாம் நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமாக விலை ஏறிக் கொண்டே வருகிறதே...?

! தினமும் என் பெண்டாட்டி இந்தக் கேள்வியைக் கேட்டுக் கேட்டு உசிரை வாங்குவது போதாதா? நீர் வேறு...!

● ஜெ. கண்ணன், சென்னை - 101.

? பகுத்தறிவுப் பாசறையிலிருந்து வந்ததாகச் சொல்லிக் கொள்ளும் தி.மு.க.வினர், சேலம் மாநாடு நடைபெறவிருக்கும் இடத்தில் திருஷ்டி பொம்மைகளைத் தொங்கவிட்டுள்ளனரே?

! அதைவிட மோசம் - முதுகில் அலகு குத்திக் கொண்டு தொண்டர்கள் தொங்கியபடி வந்தது தான். ஏற்கெனவே ஒருமுறை அமைச்சரின் தீமிதி தொடர்பாகப் பேசப் போக, எதிர்ப்புக் கிளம்பியதல்லவா...? அதனால் கருணாநிதி இதைக் கண்டுகொள்ளாமல் விட்டிருக்கலாம். ஆனால் இந்த மூடநம்பிக்கைகளை விட்டொழிக்குமாறு கேட்டுக் கொள்வதில் தராசுவுக்குத் தயக்கமில்லை.

● எஸ். யமுனா பார்வதி, பொள்ளாச்சி.



? சர்வ வல்லமை படைத்த இறைவனால் ஏன் நாத்திகத்தை ஒழிக்க முடியவில்லை...?

! சர்வ வல்லமை படைத்த இறைவன் உருவாக்கியது தான் நாத்திகமும்! நாத்திகவாதம் இருந்தால் தான் ஆத்திகத்தின் அருமை புரியும் என்பதற்காக உருவாக்கியிருக்கலாம்!

● எம். எம். கோபால், மும்பை - 29.

? கவிதையைப் பற்றிச் சொன்னீர்கள் - கதைகளின் முக்கியத்துவம் பற்றியும் சொல்லுங்கள்...

! கவிதைகள் கனிந்த வாழை என்றால்... (கொஞ்சம் உரிக்கிற வேலை உண்டுங்க...) கதைகள் காபுல் திராட்சை மாதிரி... அப்படியே ஒவ்வொன்றாக வாயில் போட்டுக் கொண்டு, இலேசாக நாக்கால் ஓர் அழுத்து அழுத்தினால் போதும்... சுவை ஊற்று பனிச்சென்று புலப்படும். அப்படியே மின்னல் போல விஷயம் மனத்தில் பதிந்து போகும். அப்படி நடந்தால் மட்டுமே அது நல்ல கதை.

“குறைந்தபட்சம் ஐந்து கோடி ரூபாய்!”

சி.பி.ஐ. இயக்குநர் ஜோகிந்தர் சிங்கின் பதவியைப் பலவந்தமாகப் பறித்து, பதவி உயர்வு என்ற சாக்கில் அவரை உள்துறை அமைச்சகச் சிறப்புச் செயலராக, கையைக் காலைக் கட்டி, அட்டாணியில் தூக்கிப் போட்டு விட்டது குஜ்ரால் அரசு. (ஒரு மரியாதைக்காகக் கூட உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவிடம் இது பற்றி குஜ்ரால் முன்னதாகவே தெரிவிக்கவில்லை!)

அதுவும் எப்படி?

சிங் தில்லியில் இல்லாத போது!

அவர் ஃபிரான்சில் இன்டர்போல் எனப்படும் சர்வதேச போலீஸ் அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் சமயம், அவருக்கே தெரியாமல் அசால்ட்டாகப் புரட்டிப் போட்டுவிட்டது மத்திய அரசு.

பீகார் முதல்வர் லாலு பிரசாத் யாதவை திருப்திப்படுத்த, குஜ்ரால் செய்த ராஜதந்திரமான செயல் இது என்று ஒரு கிசுகிசு. போஃபர்ஸ், செயின் கிட்ஸ் விசாரணைகளில் ஒரு முட்டுக்கட்டை போட வழி என்றும் இதன் பின்னணிக் கதைகள் அடிபடுகின்றன.

ஆனால், ஜோகிந்தர்சிங் செயல்படுகிற முறையில் ஏக பப்ளிசிடி. அவர் பெயர் வராத செய்தித்தாள்களும், டீவி நியூஸும் இல்லை என்கிற மாதிரி ரொம்பவும் உயரத்தில் பறந்தது ஒரு குற்றமாகவே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் ரொம்பவும் அலட்டிக் கொண்டதை அவரது துறை அதிகாரிகளே ரசிக்கவில்லை என்பது, அவர் இடத்தை இப்போது பிடித்திருக்கும் ஆர்.சி. சர்மாவின் பேச்சு தெளிவாகச் சொல்லுகிறது. “சில வருடங்களாகவே சி.பி.ஐ. எப்படி இயங்க வேண்டுமோ, அப்படி இயங்கவில்லை. இனிமேல் அப்படி இராது. சத்தம் இருக்காது. ஆனால் வேலை நடக்கும்!” என்று சொல்லி விட்டார் சர்மா.



• ஜோகிந்தர் சிங்

மறுநாள் இந்தியா திரும்பிய அன்று விடிகாலை நாலு மணிக்குத்தான் ஜோகிந்தர் சிங்குக்குத் தமது பதவி பறிபோன செய்தியே தெரியும்!

“ஒரு மாதம் லீவு போட்டுவிட்டு மகனின் கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்” என்றார் சிங்.

கோபமோ, வெறுப்போ வெளிக்காட்டாமல், “அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அவர்கள்

கொசுறுகள்:

• ஜெயந்தி நடராஜன் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டது முதல், அமைச்சர் சி.எம். இப்ராகிம் எதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல் தாமரை இலைத் தண்ணீர் போல இருந்து வருகிறார். ஆனால் ஜெயந்தி நடராஜன் இடும் எந்த உத்தரவையும், தாம் பார்த்து ஓகே செய்யாமல் செயல்படுத்தக்கூடாது என்று ஒரு நிபந்தனை! பாவம் ஜெயந்தி.

• பாரிஸ்லிருந்து இந்தியா திரும்ப இருந்த ஜோகிந்தர் சிங்கின் விமானம், சில கோளாறுகள் காரணமாக ஒருநாள் தாமதமாகத்தான் புறப்பட்டது. அதனால், ஆள் ஊரில் இல்லாதபோது, வேலை மாற்றல் உத்தரவு பெற்ற முதல் சிபிஐ இயக்குநர் என்ற 'சிறப்பு' ஜோகிந்தர் சிங்குக்குக் கிடைத்திருக்கிறது!

• முன்னாள் தமிழக ஆளுநர் எஸ்.எஸ்.

முடிவு செய்து விட்டால், நாம் ஒன்றும் செய்து கொள்ள முடியாது!" என்றார் சிங் அமைதியாக.

இதற்கிடையே, பிரதமரைச் சந்திக்க அப்பாயின்ட்மென்ட் கேட்டிருக்கிறார், சிங். புதிய பதவியை ஏற்பதா வேண்டாமா என்று கொஞ்சம் குழம்பித்தான் போயிருக்கிறார். (ஆனால் தொண்ணூறு சதவிகிதம் புதிய பதவியில் சேர மாட்டார் என்றே, அவர் மனத்தை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்!) இந்திரஜித் குப்தா, எஸ்.ஆர்.பி. இருவரையும் சந்தித்துப் பேசவும் நேரம் கேட்டிருக்கிறார்.

மகளின் கல்யாணத்தை முடித்த கையோடு, தமது சுயசரிதையையும் எழுதி முடித்துவிட வேண்டும் என்பது சிங்கின் விருப்பம். 300 பக்கங்களை ஏற்கெனவே எழுதி முடித்து விட்டார். மீதி 300 சொச்சம் பக்கங்களையும் தமது திலக் லேன் சாலை இல்லத்தில், கதவைப் பூட்டி உட்கார்ந்து கொண்டு, தினசரி இரண்டு மணி நேரமாவது எழுத வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார் சிங். நிறைய வெளிநாட்டுப் பதிப்பகங்கள், அவரது சுயசரிதையை வெளியிட, போட்டா போட்டி போடுகின்றன - குறிப்பாக பிரிட்டிஷ் பதிப்பகங்கள். "குறைந்தபட்சம் ஒரு மிலியன் பவுண்ட் (சுமார் ஐந்து கோடி ரூபாய்) சம்பாதித்து விடுவேன்!" என்கிறார் ஜோகிந்தர் சிங்.

- சித்தார்த்

பர்னாலாவை, துணை ஜனாதிபதி ஆக்க முன்வந்திருப்பதற்கு ஒரு காரணம், அவருக்கு டில்லியில் வீடு எதுவும் இல்லையாம்! துணை ஜனாதிபதி ஆனால் அரச மாளிகை இடைக்குமல்லவா?

● ஐந்தாவது சம்பளக் கமிஷன் சிபாரிசின் படி ரிடையர் ஆகும் வயதை 58 லிருந்து 60 ஆக உயர்த்த வேண்டும். ஆனால் இதற்கு ஆதரவும் எதிர்ப்பும் இட்டத்தட்ட சரி சமமாக இருக்கிற நிலையில், 58-ம் வேண்டாம், 60-ம் வேண்டாம் என்று 59 ஆக நிர்ணயிக்க அரசு யோசித்து வருகிறது!

— நியூஸ்வாலா



• ஜெயந்தி நடராஜன்

டிவி பாக்கறீகளா?

சன் - தமிழ்!

சன் டி.வி.யில் தமிழ் உச்சரிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை என்பது பழைய விஷயம். இப்போது எழுத்துப் பிழைகளும் வந்து விட்டன. 'இடைவேளைக்குப் பிறகு' என்று போட்டிருந்தார்கள். ('ள' மேல் புள்ளி வைத்து!) முன்பு ஒரு சமயம் 'காணத் தவராதீர்கள்' என்று வந்திருந்தது. இதைப் பார்த்து, மோட்டார் ஆயில் கம்பெனியும் தன் விளம்பரத்தில் 'ஸ்டார்ட்டிங்' என்பதை 'ஸ்டாட்டிங்' என்று 'ர்'ரை விழுங்கி வெளியிட்டிருக்கிறது!

மேலும் முன்னேற்றமாக, இங்கிலீஷிலும் தவறுகள் வர ஆரம்பித்து விட்டன. (வளர்ச்சியின் அறிகுறி?) Extravaganza விற்கும் Extravagance என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை ஹாங்காங் விழா பற்றி சன் டி.வி.யில் அறிவிப்பைப் போட்டவருக்கு யாராவது சொல்லித் தர வேண்டும். எக்ஸ்ட்ராவகன்ஸ் என்றால் ஊதாரித்தனம். எக்ஸ்ட்ராவகன்ஸா என்றால் கோலாகலமான கொண்டாட்டம். சன் டி.வி.யில் எக்ஸ்ட்ராவகன்ஸ் என்று போட்டிருந்தார்கள்.

ஹார்ட் - இங்கிலீஷ்!

ஹார்ட் டி.வி.யில் ஆங்கிலப் பாடம் நடத்துபவர்களுக்கு ஒரு சின்ன கேள்வி. உங்கள் அறிவிப்புகளில் வரும் ஆங்கிலப் பிழைகளை நீங்கள் ஏன் கண்டுகொள்வதேயில்லை? அவைகளையும் உங்கள் ஜெனரல் மானேஜராக(!) நினைத்துக் கொண்டு விட்டீர்களா? கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு.

டப்பிங் சீரியலுக்கு முற்றுப்புள்ளி!

ஏதோ தமிழாக்கம் செய்யப்படும் சீரியல்கள்தான் கன்றாவியாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு தகவல். வங்காள மொழியாக்கமும் தொல்லைதானாம். அங்கு உள்ள 'பெங்காலிக்குடிமகன்'கள் குரல்கொடுத்து அதற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டார்கள். பிரபல டைரக்டர் மிருணாள்சென் சொன்னது : "அப்பாடி பெரிய ரிலீஃப்!"

ஷ்ரீன் வந்து விட்டார்

குட்மார்னிங் இண்டியா நிகழ்ச்சி டில்லியிலிருந்து தினமும் காலையில் ஒளிபரப்பாகிறது. ஷ்ரீன், அமர் சுறுசுறுப்பாகப் பேசுகிறார்கள். சமீபத்தில் சுமார் 15 தினங்கள் 'ஷ்ரீன்' வரவில்லை. அவர் மறுபடியும் வந்த தினம், அமரின் அறிவிப்பு : "இன்றைய முக்கிய செய்திகள் : 15 நாள் ஓய்வுக்குப் பிறகு புத்துணர்ச்சியுடன் ஷ்ரீன் வந்துள்ளார்... 950 கோடி, இத்யாதி... இத்யாதி..." மெலிதான புன்னகையை வரவழைத்த அறிவிப்பு!

- சேந்தன் அமுதன்

பள்ளிக்கூடங்கள் திறந்தாகி விட்டன.

கிண்டர்கார்டன், எல்.கே.ஜி. போன்ற வகுப்புகளில் சேர்ந்துள்ள குழந்தைகள் பள்ளி செல்ல அடம்பிடித்து அழுவதும், அப்படியே அம்மாவுடன் போனாலும் பள்ளிக்கூட வாசலில் விட்டுவிட்டு டாடா காட்டிவிட்டு அம்மா திரும்பியதும் குரலெடுத்துக் கதறுவதும் – குழந்தைகளுக்கு அந்தப் பருவத்தில் இயல்பாக வரக்கூடியதுதானா? அல்லது இதற்குப் பின்னால் ஏதேனும் சைக்காலஜி இருக்கிறதா?– இந்தக் கேள்வியை மனோ தத்துவ நிபுணர் டாக்டர் மாத்ருபூதத்திடம் கேட்டோம்...

நிறைய விஷயங்கள் இதில் இருக்கின்றன. சைக்காலஜி நிச்சயம் உண்டு. உலகில் எந்தக் குழந்தைக்கும் இப்படிப்பட்ட ரியாக்ஷன் இருக்கும். அது வளர்கிற சூழலில் அதிகம் அல்லது குறைவாக இருக்கலாமே தவிர, அடிப்படை மனோதத்துவம் ஒன்றுதான்.

இன்றைக்குப் பெரும்பான்மையான தாய்மார்கள் வேலைக்குப் போகிறவர்களே. பெற்ற குழந்தையுடன் அதிக நேரம் செலவழிக்க முடியாதவர்களே. இதை அந்தக் குழந்தையின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் 'நம் அம்மா நம்முடன் அதிக நேரம் இருக்க மாட்டேங்கிறாளே' என்ற ஆதங்கம் புரியும்.

பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும் போது 'இருப்பதே கொஞ்ச நேரம். அதையும் அம்மா நமக்கு மறுக்கிறாளே' என்ற உள் ஆதங்கமே அழுகையாக வெடிக்கிறது. இது பிரதான காரணம்.

பள்ளி செல்லும் குழந்தைகள்:

சிலர் விஷயத்தில் பள்ளிக்கூடம் என்றாலே அலர்ஜி போல ஆகிவிடும் அளவுக்கு இந்தப் பிரிவு பாதிக்கும். 'ஸ்கூல் ஃபோபியா' என்று இதை நாங்கள் சொல்வதுண்டு. பள்ளிக்கூடம் பரிச்சயமாகி, அடம் நீங்கி சகஜ நிலை வர ஓரிரு ஆண்டு கூட ஆகலாம் சில குழந்தைகளுக்கு.

இன்னொரு அம்சம் ஆயாக்களோடு குழந்தைகளை பள்ளிக்கூடம் அனுப்புவது. பல குடும்பங்களில் குழந்தையைப் பள்ளிக்கூடம் அழைத்துப் போய் வர ஆயாக்கள் இருப்பார்கள். சில சமயங்களில் பொறுமை இழந்து இந்த ஆயாக்கள் குழந்தைகளைக் கடிந்து கொள்ளலாம். இல்லையெனில் முதுகில்



வீ நெய்!

ஒரு வீணை வித்துவான் வீட்டு விசேஷத்திற்கு இரண்டு படி நெய் தேவைப்பட்டது. அந்த ஊர் ஜமீந்தாரிடம் நிறையப் பசுமாடுகள் இருந்தபடியால், அங்கு போனால் நெய் கிடைக்கும். அவரிடம் போய் கேட்டுப் பார்க்கலாம் என்று அங்கு சென்றார்.

ஜமீன்தார் சில பெரிய மனிதர்களிடம் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார். எல்லோர் முன்பும் எப்படிக் கேட்பது என்று வித்துவானுக்குத் தயக்கமாக இருந்தது!

''நல்ல சமயத்தில் வந்திருக்கிறீர்... எங்கள் வீணை அந்த அறையில் இருக்கிறது. அதை எடுத்து வந்து ஒரு பாட்டு வாசியுங்கள்'' என்றார் ஜமீன்தார்!

வீணையை எடுத்து வந்து வைத்து அதை மேலும் கீழுமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் வித்துவான்!

''ஏன், வாசியுங்கள்!'' என்றார் ஜமீன்தார்.

''வீணையிலும், விரலிலும் நெய் தடவினால் தான் வாசிக்க முடியும்!'' என்றார் வித்துவான்!

சமையல்காரரைக் கூப்பிட்டு, ''வித்துவானுக்கு எவ்வளவு நெய் வேணுமோ கொடு!'' என்று உத்தரவிட்டார் ஜமீன்தார்.

சமையல் அறைக்குள் சென்ற வித்வான் 'இரண்டு படி நெய் வேண்டும்' என்று வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டார்! பிறகு ஜமீன்தார் முன் ஒரு பாட்டு வாசித்து விட்டு, நெய்யுடன் கிளம்பினார்!

– 'நிமிடக் கதைகள்' நூலில் இருந்து: எஸ். பொன்னுசாமி



டன் போகும் சில குழந்தை களின் அழுகை அதிகமாக இருக்கக் கூடும்.

அடுத்து பள்ளிக்கூடத்தில் நுழையும்போதே அதன் கண்ணில் படும் சூழ்நிலை. நான் பார்த்த ஒரு கேஸில் ஸ்கூல் கேட் வரை குழந்தை சமர்த்தாகப் போகும். வாட்ச் மேனைப் பார்த்தவுடன் அலறும். காரணம் அவரது முறுக்கு மீசையும், யூனிபார்மும். இதை அறிந்த நான் ஸ்கூல் நிர்வாகத்துடனும், வாட்ச் மேனுடனும் பேசினேன். அந்தக் குழந்தைக்கு வாட்ச் மேனை தினமும் சாக்லேட் வாங்கிக் கொடுக்கச் சொன்னேன். மெல்ல மெல்ல குழந்தை அவருடன் சிநேகமானது. பள்ளிக்கூட வாட்ச்மேன்கள் பயமுறுத்தும் தோற்றத்தில் இருக்கக் கூடாது. இது முக்கியம்.

பள்ளிக்கூடத்துக்குப் போகும் வழி கூட குழந்தையின் அழுகைக்குப் பின்னால் இருக்கும் ஒரு மனோ தத்துவ காரணமாக அமையலாம். இதமான, ரம்மியமான பாதையில் போவதையே சின்னஞ் சிறு குழந்தைகள் விரும்புகின்றன.

இப்படி அழுகின்ற குழந்தைகள் பின்னாளில் மூன்றாம் வகுப்பு நான்காம் வகுப்பு போகும் போது, 'உனக்கு ஒன்றுமே தெரியாது. எங்க மிஸ்தான்

சமாளிப்பது எப்படி?

ஒரு தட்டுக் கூட தட்டலாம். ஒரு குழந்தை தன் தாயிடம் பலமாக அடி வாங்கினாலும் உடனே சில நிமிடங்களில் தாயைப் போய்க் கட்டிக் கொள்ளும். தாயும் அப்படியே. ஆனால் ஆயா அடிப்பதையோ முறைப்பதையோ குழந்தை மனம் தாங்கிக் கொள்வதில்லை. தாயின் ஸ்ட்ரோக் - ஆயாவின் ஸ்ட்ரோக் இரண்டுக்கும் இடையே உள்ள உணர்வுபூர்வமான வித்தியாசத்தைக் குழந்தைகளால் உணர முடியும். ஆயாக்களு

சொன்னாங்களே, இதுதான் சரி' என்று அம்மாவிடமே பிள்ளை விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

அதுவும் ஒரு சைக்காலஜிதான். அம்மாவிடம் இருக்கும் நேரத்தை விட அதிக நேரம் தன் ஆசிரியைகளோடு இருக்கும் குழந்தைகளுக்கு - மிஸ்ஸுக்கு எல்லாம் தெரியும் என்கிற எண்ணம் ஏற்படுவதுண்டு.

போட்டோ : **ராணிமைந்தன்**

குமுறல்



●● திரு.வி.க. நினைவாக திருவாரூர் அரசு கலைக் கல்லூரிக்கு அவர் பெயரிடப்பட்டிருக்கிறது. தவிர, தஞ்சை செல்லும் சாலையில் மார்பளவு சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஓரமாக ஒரு மூலையில் அமைந்திருப்பதால் அப்பகுதி சிறுநீர் கழிக்கும் இடமாக மாறிவிட்டது. இது தமிழ்த்தென்றல் திரு.வி.க.வுக்கு இழைக்கப்படும் அவமரியாதையாக விளங்குகிறது. எனவே அச்சிலை அங்கிருந்து அகற்றப்பட்டு, ரவுண்ட்டானா மத்தியில் அமைக்கப்பட வேண்டும்.

மன்னார்குடி, மு. தனகோபால்.

●● தி.மு.க. அரசு பதவி ஏற்று ஓராண்டுக்கு மேலாகிறது. ஆனால் இதுவரை அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகம் சீரடைய வில்லை. அரசு பஸ்கள் விபத்துக்கு உள்ளாகும் செய்திகள் அடுத்தடுத்து வந்த வண்ணம் இருக்கின்றன. போதுமான அளவில் உதிரி பாகங்கள், டயர்கள் சப்ளை இல்லாததால், பேருந்துகளின் பராமரிப்பு பாதிக்கப்படுகிறது. புதிய பஸ்கள் விடுவதும் மிகக் குறைவு. திருப்பூர் நகரில் நாற்பதுக்கும் மேற்பட்ட ஜீவா டவுன் பஸ்கள் உள்ளன. ஆனால் கடந்த ஓராண்டில் ஒரே ஒரு புதிய டவுன் பஸ்தான் விடப்பட்டது. ஏற்கெனவே பல வருடங்கள் ஓடித் தேய்ந்த வெளியூர் பஸ்களின் இருக்கைகளில் மாற்றம் செய்து டவுன் பஸ்களாகச் செலுத்துகின்றனர். எப்போதுதான் நிலைமை சீரடைவது?

திருப்பூர், எஸ்.ஆர்.வி.

திரு.வி.க.வுக்கு அவமரியாதை!



• திரு.வி.க

●● சென்னை தூர்தர்ஷனில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த காலை நேர இசைத் தொகுப்பினை நிறுத்தி விட்டார்களே என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில் சானல் - 2ல் காலை 5.30 முதல் 6.30வரை ஒளிபரப்பாவது கண்டு மனசு சந்தோஷப்பட்டாலும் வேறுவிதத்தில் துயரமே உருவாகிறது. சானல்-1ல் இந்த நிகழ்ச்சியை தமிழ்நாடு முழுவதும் கண்டு கேட்டுக் களித்தது. சானல்-2ல் சென்னை வாசிகள் மட்டுமே ரசிக்க முடியும். போதாக்குறைக்கு கச்சேரி கேட்க ஆசைப்படுவோர் காலை ஐந்து மணிக்கே எழுந்தால்தான் உண்டு. தயவு செய்து தூர்தர்ஷன் இதனை மீண்டும் சேனல் - 1ல் காலை ஆறு மணிக்கு ஒளிபரப்புமா?

சென்னை-28, ரேவதி ராஜாமணி.

●● சன் டீவியில் ஒளிப்பரப்பாகும் 'மலரும் மொட்டும்' பார்த்தேன். தனியார் தொலைக்காட்சிகள் பலவும் சினிமா பாடல்களுக்குச் சிறுவர் சிறுமியரை நடனமாடச் செய்து விடுகின்றன. சினிமா பாடல்களோ பெரும்பாலும் ஆபாச இரட்டை அர்த்தத்துடன் உள்ளன. நல்ல தமிழ்ப் பாடல்கள் எவ்வளவோ இருக்க, குழந்தைகளைச் சாக்கடைக்கு அழைத்துச் செல்லலாமா?

சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

●● திருவனந்தபுரத்தில் போலீஸாருக்கும் மாணவருக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு, நேரடி யுத்தமே நடக்கும். நியாயமற்ற முறையில் சட்டசபை முன்பு யார் போராட்டம் நடத்தினாலும் போலீஸ் சக்கையாகப் பிழிந்து எடுத்துவிடும். சமீபத்தில் ஓர் அமைப்பு போராட்டத்தில் இறங்க, போலீஸார் இடியாக அடி முழக்கமிட்டார்கள். பொதுமக்களுக்கு இடையூறாக யார் போராட்டம், மறியல் நடத்தினாலும் கேரளாவில் தர்ம அடிதான். தமிழகத்தில் இப்படி காவல்துறை அச்சமின்றி நடவடிக்கை எடுக்க முடிகிறதா?

விளாத்திகுளம், வேடப்பட்டி சற்குவேல்.



இனிய
பொழில்கள்
நெடிய வயல்கள்
மட்டும்தான்
இந்தியாவா...?

- பிரச்னைகளை விவரித்து...
- தீர்வுகள் சொல்லி...
- பழைய காலத்தை நினைவூட்டி
- எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்பு ஏற்படுத்தி...
- உங்களை நிமிர்ந்து உட்காரச் செய்யும்

கல்கி சுதந்தரப் பொன்விழா மலர்

இன்றே கல்கி விற்பனையாளரிடம் சொல்லி வையுங்கள். வாராந்திர கல்கி அளவில் 320 பக்கங்கள். விலை ரூ. 30. பதிவுத் தபாலில் பெற ரூ. 13 சேர்த்து அனுப்ப வேண்டும். கடைசி தேதி : ஆகஸ்ட் 11.

நிர்வாகி, கல்கி, சென்னை - 600 097

சனிக்கிழமை : காலை நாலரை மணிக்கெல்லாம் எழுந்து விஜய் தொலைக்காட்சியில் 'இதயம் தொட்ட இலக்கியம்' என்ற தலைப்பில் பேசுவதற்காகக் குறிப்புகள் தயாரித்தேன். ஏடுகளைப் புரட்டியபோது, 'புறம்போக்கு நிலத்தைப் பயிர் நிலமாக மாற்றிய ஒரு பெண்ணுக்கு அந்த நிலத்தை முதல்வர் பட்டா போட்டுக் கொடுத்து விட்டார்' என்ற செய்தி 'சபாஷ்' என்று பாராட்டத் தூண்டியது. இரவு மலைக் கோட்டை ரயிலில் திருச்சிக்குப் பயணம். 12 மணி வரை படித்துக் கொண்டிருந்தேன். பின்னர் ஒலிநாடாவில் எம்.எஸ்.ஸின் சுப்ரபாதம் கேட்டுக் கொண்டே தூங்கிப் போனேன். ஆம்! பள்ளி எழுச்சி இறைவனுக்கு; இந்த எளியவனுக்கு இசைத் தாலாட்டு!

ஞாயிற்றுக்கிழமை : முதல் நாள் இரவு எத்தனை மணிக்குத் தூங்கினேன் என்று தெரியவில்லை. விழித்துப் பார்த்தால் ரயில் ஓடிக் கொண்டிருந்தது. ஒலிநாடா முடிந்திருந்தது. கண்ணதாசனின் 'கனகதாரா' ஒலிநாடாவைப் போட்டேன். கேட்டபோது, மனம் லேசாக இருந்தது. பாரதியைப் படித்தேன். திருச்சி ஸ்டேஷனில் நண்பர் எஸ். கிருஷ்ணன் தலைமையில் பலர் வந்திருந்தது மகிழ்ச்சியைத் தந்தது. இன்று தமிழகத்தில் கட்சி இருக்கும் நிலை பற்றி அவர்கள் பேசியபோது கனல் தெறித்தது! நண்பர் வண்டு பெரியசாமி, வெக்காளி அம்மன் கோயிலுக்கு அழைத்தார். வழிபட்டு விட்டுப் புறப்படும்போது, தோளில் ஏதோ விழுந்தது போல் இருந்தது. விழுந்து தங்கிவிட்ட அதை எடுத்துப் பார்த்தால் தேங்காய் சிரட்டை. தேங்காயைச் சுரண்டிவிட்டு, கோபுரத்தின் மேலிருந்து காக்கை சிரட்டையைப் போட்டிருக்கிறது. தோளிலே விழுந்த சிரட்டை அங்கேயே தங்கி விட்டதை எண்ணி வியந்தேன். பின்னர் பூசாரியார் கொடுத்த மஞ்சள், குங்குமம், சந்தனத்தை அதில் வைத்து எடுத்து வந்தேன். பெரியசாமி, அவரது தந்தையார் 82 வயதிலும் ரேக்ளா குதிரைப் பந்தயத்தில் கலந்து கொண்டதையும், வண்டி கவிழ்ந்து இறந்த நிகழ்ச்சியையும் விவரித்தார். ஒருநாள் முழுக்க திருச்சியில் இருந்தும் டால்மியாபுரத்தில் இருந்த மகள் பொன் அமுதாவையும் மருமகன் முருகேசனையும் பேரன் முகுந்தனையும் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் எழுந்தது.

திங்கட் கிழமை : நண்பர் உதயன், குரோம்பேட்டையிலிருந்து சீனிவாசன் என்ற ஒரு சிறுவனை அழைத்துக் கொண்டு வந்திருந்தார். 1330 குறளையும் மனப்பாடமாகச் சொல்லும் ஆற்றல் உள்ள அந்தச் சிறுவன் 'திருக்குறள் சீனிவாசன்' என்று அழைக்கப்படுபவன். பள்ளிக்கு, மாதக் கட்டணமாக 150 ரூபாயைக் கூட கட்ட முடியாமல் சிரமப்படும் குடும்பமாம் அந்தச் சிறுவனின் குடும்பம். அமைச்சர் தமிழ்க்குடிமகனுடன் தொலைபேசியில் பேசினேன். சிறுவன் சீனிவாசனுக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டேன். தம்மிடம் அனுப்புமாறும், உதவ முயற்சிப்பதாகவும் கூறினார். தமிழ் நெஞ்சம் கண்டு மனநிறைவு கொண்டேன்.

இந்திய விடுதலைப் போர் வரலாற்றைப் பற்றி பல்வேறு நூல்களைப் படித்துக் குறிப்புகள் எடுத்தேன். பொன்விழா ஆண்டில் ஏதாவது பத்திரிகையில் விடுதலைப் போராட்ட வரலாற்றைத்



தொடர் கட்டுரையாக எழுதும் உத்தேசம் இருக்கிறதே, அதற்காக!

செவ்வாய்க்கிழமை : செய்தித்தாள்களைப் பிரித்தால் சேலம் தி.மு.க. மாநாட்டுச் செய்திகள். 'காங்கிரஸ் தமிழகத்தில் அழிக்கப்பட்டது. இதன் மூலம் தந்தை பெரியாரின் ஆசை நிறைவேறியுள்ளது' என்ற மத்திய அமைச்சர் மாறனின் பேச்சு மிகவும் வருத்தத்தை அளித்தது. பெருந்தலைவர் காமராஜரின் ஆட்சியை பச்சைத் தமிழனின் ஆட்சி என்று பெரியார் போற்றியதும் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக காமராஜர் பொறுப்பேற்க இருந்தபோது, 'பதவி ஏற்காதீர்கள்; தமிழகம் சீர்குலைந்து போகும்' என்று பெரியார் சொன்னதும் நினைவுக்கு வந்தது. பொறுப்பில்

குமரி அனந்தன் டைரியிலிருந்து...

சனி to வெள்ளி

இருப்பவர்கள் பதில் சொல்லவில்லை. ஆகை யால் நான் அறிக்கை எழுதி வெளியிட்டேன்.

இரவு தொலைக்காட்சியில் 'ஹாங்காங்' சீனாவுக்குக் கைமாறுவதைப் பார்த்த காட்சிகள் மீண்டும் மனக்கண்ணில் வலம்வந்தன. நான் ஹாங்காங் சென்று வந்த நினைவுகளை அசை போட்டேன். 150 ஆண்டுகளுக்கு முன்னர் போதைப் பொருளுக்கு சீனாவை சந்தையாக் கியது இங்கிலாந்து. அதை எதிர்த்தது சீனா. விளைவு : போரில் தோற்ற சீனா, ஹாங் காங்கை குறிப் பிட்ட ஆண்டுகளுக்கு என்று விட்டுக் கொடுத்து விட்டது. இது வரலாறு.

மேலவளைவு பஞ்சாயத்துத் தலைவர் முரு கேசன் உட்பட ஆறு பேரைப் பட்டப் பகலில் வெட்டிக் கொன்ற நிகழ்ச்சி உள்ளத்தில் பலத்த காயத்தை உண்டாக்கியது!

புதன் கிழமை : மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வைக்கப்பட் டிருந்த தலைவர்களின் பெயர் நீக்க நடவடிக்கை மிகவும் துணிச்சலானது. மனம், வியந்து பாராட் டியது. ஆனால் அதே சமயத்தில் பெயர்களைச் சூட்டும் போது எந்தக் காரணத்தினாலோ, கல வரங்கள் வரும்; பெயர்கள் நீக்கப்படும் என்று கனவிலும் கருதவில்லையே என்று மனம் நொந் தது. சிந்தனையாளர் மன்றத்தின் அமைப்பாள ராக இருந்த பானு - பாலசுப்பிரமணியம் தம்பதி களின் மகள் நாட்டியச் செல்வி வித்யா திருமணத்தில் கலந்து கொண்டேன். அங்கு வந்திருந்த நாட்டிய ஆசிரியர் உடுப்பி லட்சுமி நாராயணன் அவர்களுடன் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. "கொன்னக்கோல்" என்பது வாத்யக் கருவிகள் ஏதுமில்லாமலேயே, வாயாலேயே சொல்லும் கலை என்றும், அது முன்பு மிக பிரபலமாக இருந்தது என்றும் எடுத்துச் சொன் னார். இப்போது நாட்டியத்திற்கு நட்டுவாங்கம் சொல்லும்போதுதான் இது வெளியாகிறதாம். முன்பெல்லாம் கச்சேரியில் 'கொன்னக் கோலுக் கும்' தனி ஆவர்த்தனம் உண்டாம்.

வியாழக் கிழமை : காலையிலிருந்து மாலை வரை விஜய் தொலைக்காட்சிக்காக 'இதயம் தொட்ட இலக்கியம்' உரைப் பதிவு நடந்தது. பெருந்தலைவர் காம ராஜ் பிறந்த நாளான ஜூலை 15-ம் தேதியிலிருந்து ஒளிபரப்பாகும் என்றார்கள். இலக்கிய அன்பர் கள், திருமதி பாரதி பாஸ்கரன், சரஸ்வதி ராமனாதன் ஆகியோ ரைச் சந்திக்கும் வாய்ப்பு!

வெள்ளிக்கிழமை : தமிழ் மாநில காங்கிரஸ் பொருளாளர் சுதர்சனத்தின் மகன் கோபிநாத்தை ஒருவன் கத்தியால் குத்தி விட்டான். ஆஸ் பத்திரிக்குச் சென்று அவரைப் பார்த் தேன். எஸ்.எஸ். மாரிசாமி அவர்கள் இல் லத்திற்குச் சென்றேன். காமராஜர் காலத்து நிகழ்ச்சிகள் சிலவற்றை அசைபோட்டு பேசிக் கொண்டிருந்தோம். நண்பர், சாமிநாதன் மற்றும் ஆம்பலூருடன் நடிகர் திலகம் வீட்டுக்குச் சென் றேன். 'பால்கே' விருது பெற்றதற்குப் பொன் னாடை போர்த்தி வாழ்த்தினேன். "என்ன குமரி, சங்கு கணேசன் மகள் சௌக்கியமா?" என்று என் மனைவியைப் பற்றி விசாரித்தார் நடிகர் திலகம். வாழ்த்த வந்த கவிஞர் வைரமுத்துவைப் பார்த்தேன். 'இங்கு எல்லா ஜாதியும் இருக்கிறது; இல்லாதது மனித ஜாதிதான்' என்ற அவரது கவிதை வரிகளை எடுத்துச் சொல்லி, இறுதியாக, 'இப்போதைக்குத் தேவை ஒரு வெண்புறா: திரும் பத் திரும்பத் தெற்கில் பறக்க' என்று அவர் முடித் திருப்பதைக் குறிப்பிட்டு, 'இப்போதைக்கு' என் பதை 'இந்த போதைக்கு' என்றும் பொருள் கொள்ளலாம்' என்ற போது, 'ஒருவர் எழுத்தில் இன்னொருவர் புதுப்பொருள் காண்பது ஒரு தனிக் கலைதான்' என்று வைரமுத்து கூறி மகிழ்ந்தார்.

தொகுப்பு : ப்ரியன்

மூலம் : டேனியல் ஸ்டீல்

தமிழில் : ரா. கி. ரங்கராஜன்

பிராட் எப்போது போன் செய்வான், ஆலிஸனைப் பற்றி எப்போது தகவல் சொல்வார்கள் என்பது எதுவும் தெரியாதவளாகக் காத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் பேஜ்.

மேலும் ஒரு மணி நேரம் சென்றபின், ஆலிஸனைப் பற்றிய தகவல் வந்தது. ஆபரேஷன் நல்லபடி முடிந்திருக்கிறது என்றும், ஆனால் இன்னும் பலமுறை ரத்தம் செலுத்தும்படி இருக்கும் என்றும் சொன்னார்கள்.

'நல்லகாலம், எனக்கும் ஆலிஸனுக்கும் ஒரே ரத்த குரூப். கடவுள் காப்பாற்றினார்' என்று நினைத்துக் கொண்டவளாகப் பேஜ் ரத்த தானம் செய்தாள். ஒரு பைன்ட் ரத்தம் அவளிடமிருந்து எடுத்துக் கொண்டார்கள்.

வெயிட்டிங் அறைக்குத் திரும்ப வருவதற்கும் பிராடிடமிருந்து போன் வருவதற்கும் சரியாக இருந்தது.

"என்ன இது, பேஜ்? நீ எங்கேயிருந்து பேசுகிறாய்?'' என்று திகைப்புடன் கேட்டான் பிராட். வீட்டுக்கு அவன் போன் செய்தபோது, ஜேன் அவனிடம் பேஜ் இருக்கும் டெலிபோன் எண்ணை மட்டும்தான் சொல்லியிருக்கிறாள் என்று புரிந்தது. அது ஆஸ்பத்திரி என்பதைச் சொல்லவில்லை.

"என்னமோ மெரீன் ஜெனரல் ஆஸ்பத்திரி என்கிற மாதிரி காதில் விழுந்தது. நீ ஆஸ்பத்திரியிலா இருக்கிறாய்?" என்று மீண்டும் கேட்டான்.

"ஆமாம்...'' என்றாள் பேஜ். களைப்பும் சோர்வும் அவளைத் திண்டாட வைத்தன. அவற்றைச் சமாளித்துக் கொண்டு, வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடித்துப் பேசுவதே பெரும்பாடாக இருந்தது. ஒரு நிமிடம் திணறியபின், "டியர்... நம்ம பேபி...'' என்று சொல்லத் தொடங்குமுன் அழுகை வந்து விட்டது.

"என்ன பேஜ்? என்ன ஆச்சு? உனக்கு ஒன்றுமில்லையே?" என்றான் பிராட். ஏதாவது அபார்ஷன் ஆகியிருக்குமோ? ஏணியில் ஏறிக் கீழே விழுந்து காலை முறித்துக் கொண்டிருப்பாளோ? பல பித்துக்குளித்தனமான எண்ணங்கள் அவனைக் குழப்பின.

"டியர்... வந்து... ஆலிஸனுக்கு ஒரு விபத்து..."

அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. ஆனால் பிராட் காத்திருக்கவில்லை.

"பயங்கரமாய் ஒன்றுமில்லையே?" என்றான்.

இரண்டு கன்னங்களிலும் கண்ணீர் வழிந்தோடத் தலையை அசைத்தாள் அவள். "வந்து... பலமான காயம்... நேற்று ராத்திரி அவளும் சிநேகிதர்களும் காரில் போன போது... உடனே உங்களுக்குச் சொல்ல லாமென்றால் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. கால்ஃப் ஆடப் போவதாகச் சொல்லியிருந்தீர்கள். அங்கே வரவில்லை என்றார்கள்..."

"ஓ... அதுவா... அது வந்து... பிரஸிடெண்ட் பிஸியாக இருந்தார்... நீ யாரைக் கூப்பிட்டுக் கேட்டாய்?"

"உங்களுடன் வேலை செய்கிறாரே, பாலன்ட்டின் அவரைக் கூப்பிட்டேன். அவர் க்ளீவ்லந்தில் உங்கள் கம்பெனி பிரஸிடெண்ட்டைக் கூப்பிட்டுக் கேட்டாராம். நீங்கள் அங்கே இல்லையாம். வந்ததும் பேசச் சொல்லியிருக்கிறேன் என்றார். நீங்கள் தங்கப் போகிற ஓட்டல் பெயரோ, டெலிபோன் நம்பரோ எதுவும் குறித்து வைக்கவில்லை..."

"மறந்து விட்டேன். அதனால் என்ன?" என்று அவன் சொன்ன தோரணை பேஜுக்கு ஆச்சரியமாக இருந்தது. க்ளீவ்லந்தில் விசாரிக்கும்படி பாலன்ட்டினிடம் சொன்னது அவனுக்கு எரிச்சல் ஏற்படுத்துவானேன் என்று அவளுக்குப் புரியவில்லை.

"கார் விபத்து என்று சொன்னாயே? காரை ஓட்டிக் கொண்டு போனது யார்? தாரென்ஸா?'' என்றான் அவன்.





'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்

"இல்லை. ஆலி நம்மிடம் அப்படிச் சொல்லி விட்டுப் போனாளே தவிர மூன்று நாலு பசங்களாகச் சேர்ந்து வெளியே போயிருக்கிறார்கள். எதிரில் வந்த காருடன் நேருக்கு நேராய் மோதி..." மறுபடியும் தயக்கம் ஏற்பட்டது. சொல்லலாமா வேண்டாமா என்று. ஆனால் எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்? "தலையில் பலமான அடி. ரொம்ப சீரியஸ்... ஆபரேஷன் செய்து கொண்டிருக்கிறார்கள்..."

"என்னது? ஆபரேஷனா? ஆபரேஷனுக்குச் சம்மதித்தாயா, என்ன? என்னைக் கேட்க வேண்டாம்?" என்று இரைந்தான் அவன்.

அர்த்தமில்லாமல் அவன் கத்துகிறான் என்று அவளுக்குப் புரிந்தது. ஆனால் அவ்வளவு பெரிய அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் அவன் அப்படிப் பேசுகிறான் என்று நினைத்துக் கொண்டாள்.

"பிராட், வேறே வழியே இல்லை. ஆபரேஷன் செய்யாவிட்டால் இன்று காலை ஆறு மணிக்கு மேல் ஆலி உயிருடன் இருக்க மாட்டாள் என்று சொன்னார்கள்."

"அபத்தம்! வேறு டாக்டர்களிடம் செகன்ட் ஒபீனியன் கேட்க வேண்டாமா? நீ செய்தது நியாயமில்லை."

"வேறு டாக்டர்களைக் கேட்க நேரம் இருந்தால்தானே?" என்றாள் பேஜ் பரிதாபமாக. "எதற்கும் நேரம் இல்லை, பிராட். எதற்குமே நேரம் இல்லை."

ஆம். அற்புதங்கள் நிகழ்த்தி ஆலிஸனைக் காப்பாற்றும்படி தெய்வத்திடம் பிரார்த்திக்க மட்டுமே நேரம் இருந்தது. இனி எல்லாம் கடவுளின் கையில். சர்ஜன்களின் கையில்.

"ஆலி இப்போது எப்படி இருக்கிறாள்?" என்றான் அவன்.

"தெரியாது. ஆபரேஷன் நடந்து கொண்டிருக்கிறது. பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேலாகிறது."

'கடவுளே!' என்றான் அவன். பின்னர் ஒரு நீண்ட நிமிடத்துக்கு மௌனம் நிலவியது. அழுகையை அடக்கிக் கொள்கிறான் போலும்.

"விபத்து எப்படி நேர்ந்தது? காரை யார் ஓட்டினார்கள்?"

அதைத் தெரிந்து கொண்டு என்ன ஆக வேண்டும் இப்போது? பேஜ் பெருமூச்சு விட்டாள்.

"பிலிப் சாப்மன் என்று ஒரு பையன்."

"யாரவன் அயோக்கிய ராஸ்கல்? குடித்து விட்டுக் கார் ஓட்டியிருப்பான். கேஸ் போட்டு உண்டு இல்லையென்று பண்ணி விடுகிறேன் அவனை?" அடக்க முடியாத கோபத்தில் அவன் குரல் நடுங்கியது.

"அந்தப் பையன் இறந்து விட்டான், பிராட்" என்றாள் பேஜ் தீனமாக. "காரில் நாலு பேர் இருந்திருக்கிறார்கள். காரை ஓட்டிய பிலிப் என்கிற பையன் இறந்து விட்டான். இன்னொரு பையனுக்குக் கொஞ்சம் அதிர்ச்சி. ஆலிஸன் சினேகிதிக்குக் காலில் பலமான அடி. ஆனால் சரியாகிவிடும்... ஆலி... ஆலி தான்... அவள் பிழைப்பாளா என்று தெரியவில்லை. பிழைத்தாலும்... பிழைத்தாலும்... நீங்கள் சீக்கிரம் வாருங்களேன்..."

"ஒரு மணி நேரத்தில் வந்து சேருகிறேன்," என்றான் பிராட்.

பேஜுக்குத் திகைப்பாக இருந்தது. அவரைப் பிடித்து இவரைப் பிடித்து, க்ளீவ்லந்திலிருந்து கிளம்புகிற முதல் விமானத்தில் டிக்கெட் வாங்கி விடும் சாமர்த்தியம் பிராடுக்கு உண்டு. ஆனால் அப்படியே வந்தாலும் இங்கே வந்து சேர ஆறு மணி நேரம் பிடிக்குமே? ஒரு மணி நேரத்தில் வருகிறேன் என்று எப்படி இவர் சொல்கிறார்?

ஆனால் அதைப் பற்றிக் குழப்பிக் கொள்ள இது சமயமல்ல.

"உங்கள் குரலைக் கேட்டதே எனக்குத் தெம்பாக இருக்கிறது. சீக்கிரம் வாருங்கள்," என்றாள்.

"சரி," என்று சொல்லிப் போனை வைத்தான் பிராட்.

அதே சமயம், ஆலிஸனின் நிலைமையைப் பற்றி டாக்டர்களும் வந்து சொன்னார்கள்.

"ஆலிஸன் ஆபரேஷனில் பிழைத்து விட்டாள். அந்த வரையில் முன்னேற்றம்தான். ஆனால், அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரம் அவள் தாக்குப் பிடிக்க வேண்டும். அதற்கு மேலும் கூடச் சில நாட்கள் ஆகலாம். ரொம்ப ரொம்ப ஆபத்தான நிலைமையில் அவள் இருப்பதால், இன்னும் கொஞ்ச நாள் வரை அபாயத்தைக் கடந்து விட்டாள் என்று சொல்ல முடியாது," என்றார்கள். தற்சமயம் ஆலிஸன் உயிருடன் இருப்பதே திருப்தியான விஷயம் என்று அவர்கள் எண்ணுவது தெரிந்தது.

பிராடிடம் சொல்ல இந்த அளவாவது நல்ல செய்தி கிடைத்ததே என்று பேஜ் ஆறுதல் பட்டாள்.


சொன்னது போலவே, போனில் பேசிய ஒரே மணி நேரத்துக்கெல்லாம் பிராட் வந்து சேர்ந்தான்.

எப்படி? க்ளீவ்லந்திலிருந்து பேசியவர் எப்படி இவ்வளவு சீக்கிரம் சான்பிரான்ஸிஸ் கோவுக்கு வர முடிந்தது என்று குழம்பித் தவித்தாள் பேஜ். ஆறு மணி நேரப் பிரயாணம் எப்படி ஒரு மணியில் முடிந்தது...?

வந்தவுடனே பிராட் சர்ஜன்களைப் பார்த்துப் பேசினான். சம்பந்தப்பட்ட ஒவ்வொரு டாக்டரிடமும் ஆலிஸனைப் பற்றிக் கேட்

புதிய அளவுகள்!

ஒன்று, இரண்டாம் வகுப்பு - 1.1 கிலோ. மூன்றாம் வகுப்பு - 1.25கிலோ, நான்காம் வகுப்பு - 1.35 கிலோ, ஐந்தாம் வகுப்பு - 1.95 கிலோ, ஆறு, ஏழு, எட்டு வகுப்புகள் - 1.85 கிலோ முதல் 2.25 கிலோ வரை. ஒன்பது, பத்தாம் வகுப்புகள் - 2.15 கிலோ முதல் 2.55 கிலோ வரை.



- இதெல்லாம் என்னவென்று யோசிக்கிறீர்களா? மஹாராஷ்டிர மாநில அரசு, பள்ளிக்குழந்தைகளின் புத்தகச் சுமையைக் குறைக்க, வகுப்பு வாரியாக வெளியிட்ட அதிக பட்ச எடையளவு அட்டவணைதான் இது!

— பூங்கோதை கிருஷ்ணராஜ்.

டான். அவர்கள் தக்கபடி பதில் சொன்னார்கள். ஆனால் ஆலிஸனைப் பார்ப்பதற்கு அனுமதி தரவில்லை. மறுநாள் காலை அவனை வார்டுக்கு அழைத்து வந்த பிறகுதான் பார்க்க முடியும் என்று சொல்லி விட்டார்கள்.

கேன்ட்டீனை நோக்கிக் கணவனுடன் நடந்தாள் பேஜ். அவள் உள்ளத்தில் ஒரே கேள்விதான் வெட்ட வெட்ட முளைத்துக் கொண்டிருந்தது.

காலையில் தாரென்ஸனின் வற்புறுத்தலுக்காகக் கொஞ்சம் காப்பி சாப்பிட்டதைத் தவிர முழுக்க முழுக்கப் பட்டினியாக இருந்தவள் அவள். என்றாலும் இப்போது எதுவும் சாப்பிடத் தோன்றவில்லை. காப்பியை உறிஞ்சிய படி கேட்டாள்.

"எப்படி உங்களால் இவ்வளவு சீக்கிரம் வர முடிந்தது?"

அவன் அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கிக் கொண்டானேயொழிய, அவள் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. அவள் கண்களை நேருக்கு நேராக அவன் சந்திக்கவுமில்லை. ஆலிஸனைத் தவிர வேறெதைப் பற்றியும் பேசவில்லை.

திடீரென்று, பேஜின் அடிவயிற்றை ஒரு பயம் கவ்விக் கொண்டது. "நேற்று சற்று முன் எங்கே போயிருந்தீர்கள்? எங்கேயிருந்து பேசினீர்கள்?" என்று குரல் நடுங்கக் கேட்டாள்.

க்ளீவ்லந்திலிருந்து சான்பிரான்ஸிஸ்கோவுக்கு ஒரு மணி நேரத்தில் வருவதென்பது முடியவே முடியாத காரியம். அது அவளுக்குத் தெரியும். அவனுக்கும் தெரியும்.

"அதுவா இப்போது முக்கியம்?" என்றான் பிராட் அமைதியாக. "ஆலிதான் முக்கியம்."

"இல்லை," என்று சொல்லி அவன் கண்களை ஆராய்ந்தாள் பேஜ். ஆனால் அதில் விடையேதும் கிடைக்கவில்லை. "ஆலி மட்டுமல்ல. நம் இருவருடைய வாழ்க்கையும் முக்கியம்தான். எங்கே போயிருந்தீர்கள்?"

புத்தம் புதியதொரு பீதி ஏற்பட்டதால் அவள் குரலில் பதற்றம் உண்டாயிற்று. ஏற்கெனவே ஒரு ராத்திரி பூரா நரக வேதனை அனுபவித்தாயிற்று. அதற்குள்ளே இன்னொன்றா?

"பிராட், நான் கேட்பது உங்கள் காதில் விழுந்ததா?"


"அதற்கு நான் பதில் சொல்லத் தயாராயில்லை. புரிகிறதா? ஆலிஸனைப் பற்றிச் செய்தி கிடைத்தவுடனேயே, எவ்வளவு சீக்கிரம் இங்கே வர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வந்து விட்டேன். என்னால் செய்ய முடிந்தது அதுதான். வேறென்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

அவன் கண்களில் அதுவரை கண்டிராத ஒரு பிடிவாதத்தைப் பேஜ் கண்டாள். பழுக்கக் காய்ச்சிய இரும்பை இருதயத்தில் செருகிய மாதிரி சுரீரென்று வலித்தது. தெய்வமே! இது என்ன சோதனை? ஒரே நாளில் என் மகளையும் பறிகொடுத்து, கணவனையும் இழந்து நிற்கப் போகிறேனா?

"நீங்கள் க்ளீவ்லந்துக்கே போகவில்லை! அப்படித்தானே?" என்றாள் பயத்தினால் உறைந்து போன குரலில்.

பிராட் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

(தொடரும்)



சொந்த நாட்டில் நடக்குமா?



சுனில் காவஸ்கர், கபில் தேவ் போன்ற கிரிக்கெட் வீரர்களைச் சிறப்பிக்கும் வகையில் செயின் வின்சென்ட் என்ற சின்னஞ் சிறிய நாடு (389 சதுர கிலோ மீட்டர்) தபால் தலைகளை வெளியிட்டிருக்கிறது. ஆனால், சொந்த நாடான இந்தியாவில்...?

—'1001 வியக்க வைக்கும் அதிசய உண்மைகள்' என்ற நூலிலிருந்து:
இரா. ரமேஷ்பாபு

மீண்டும் நாய்

எஸ். கே. கணேசன்

மனைவியின் மடியில் நாயைப் பார்த்ததும் திடுக்கிட்டான், ராகவன். நாய் என்றால் அத்தனை அலர்ஜி அவனுக்கு.

"ஸ்ரீராத்தேளா, ஃபோனியா?"

பேஷ். அதுக்குள்ள பெயர் வேறு வைத்தாகிவிட்டதா?

"இராஸமாம். விலைக்கு வாங்கினா ஐந்நூறு ரூபாய்க்கு மேலாகுமாம். என் மேல இருக்கற பிரியத்துல, பங்கஜம் தான் தந்தாள்."

"புண்ணியாவாசனம் பண்ண வேண்டாமாடா, ராகவா?" அம்மாவின் நக்கல்.

"ம். கழுதைக்குத் தெரியுமோ....?" என்ற அளவில் நாயின் பிரியத்தால் அதோடு விட்டாள் வத்சலா.

"ஆமாம், இனம், இனத்தோடுதான் சேரும்!" பட்டிமன்றத்துக்குப் பதில் அளிப்பது போல அம்மாவும் தயாராக.

"வீணா என்கிட்ட குரைக்க வேணாம். வால நோட்ட நறுக்கிடுவேன்."

"ம். இந்த வீட்ல நான் நாய் படாதபாடு பட வேண்டியிருக்கு. கண்ட நாய்களுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டியிருக்கு..."

இந்த அமளியில் ராகவன் தன் எதிர்ப்பைக் காட்ட முடியாமல் போய்விட்டது. நாய் வளர்க்க வேண்டாம் என்றால், வத்சலா கேட்டு விடவா போகிறாள்?

அடுத்தவர்கள் உசுப்பி விட இவன் எது வேண்டுமானாலும் செய்வான். அவனுக்கு எண்ணங்கள் உதிக்க வேண்டியதுதான் தாமதம். நடைமுறை சாத்தியத்தைப் பற்றி கவலைப் படாதவன்.

அவ்வப்பொழுது ஏதாவது தோன்றும். அதை எப்படியாவது நடைமுறைப்படுத்த - அங்கேதான் சிக்கல்கள் ஆரம்பம்...

இப்படித்தான்... தையல் கூலி அதிகமாகி விட்டது என்று 'ஞானோதயம்' ஏற்பட, டைலரிங் கற்றுக் கொள்கிறேன் என்று புறப் பட்டான்.

"எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை.

"நீங்க சும்மா இருங்க. நான் நன்னா கத்துண்டு 'எலிஸபெத் டெயிலர்' மாதிரி வர வேண்ணாப் பாருங்களேன்..."

இனி அவனைத் தடுப்பது அத்தனை சுலபம் அல்ல. இந்த விளையாட்டிலிருந்து அவனே விலகினால்தான் உண்டு! -

ஒரு வருடத்தில் சுமாராக, புடைவைக்கு ஓரம் அடிக்கவும் (இதற்காகவே இவனை நச்சரித்து புதுப் புடைவைகளைச் சேகரித்துக் கொண்டாள்.) உள் பாவாடை தைக்கவும் கற்றுக் கொண்டாள்.

பெண்கள் உடைதான் முதலில் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்பதால் இவனால் கௌரவமாக உலாவ முடிந்தது.

"கவலைப்படாதீங்க. இன்னும் கொஞ்ச நாளாச்சினா நானே உங்க துணியெல்லாம் தைச்சுத் தந்துடுவேன்" என்று அவ்வப்போது வேறு பயமுறுத்தினாள்.

இந்த விளையாட்டு ஒருவழியாக முடிவுக்கு வந்தது.

"என்ன வத்சலா நீ நன்னா தைப்பேன்னு நம்பித்தானே ஜாக்கெட் தைக்கக் கொடுத்தேன். இப்படி தைச்சுட்டியே? போட்டுக்கவே முடியாம போயிட்டது!" ஃபாரின் துணி போன துக்கத்தில் அந்த ஜாக்கெட்டையே வாயில் அடக்கிக் கொண்டு அழுகையோடு கேட்டவளுக்கு -

"நான்தான் சொன்னேனே மாமி, துணி அளவு பத்தாது, இன்னும் கொஞ்சம் வேணும்னு. அதுக்கு இதுபோதும் 'சிக்'னு தைச்சுடுனு, சொன்னேளே? சரின்னு சின்னதா, சிக்குனு தைச்சுட்டேன்."

"அதுக்காக இத்தனை சின்னதாவா? நவராத்திரி பொம்மைக்கு போடத்தான் லாயக்கு..." என்று மாமி புலம்பிக் கொண்டே போனாள்.

அடுத்தவர்கள் வயிற்றெரிச்சல் வேண்டாம் என்று அவளாகவே தீர்மானித்து, அந்த அளவில் டைலரிங்கை அத்தோடு முடித்துக் கொண்டாள்.

வீட்டில் மெஷின் இருப்பதைப் பார்த்து யாராவது கேட்டால், "ம்! கல்யாணத்துக்கு முன்னால தைச்சிண்டிருந்தேன். இவரை கல்யாணம் பண்ணி, இப்பெல்லாம் முடியறதில்லை" என்று இவன் தலையில் பழியை ஏற்றி விட்டாள்.

வேதாளம் முருங்கை மரம் ஏற- இந்தமுறை சித்த வைத்தியம் கற்றுக் கொள்கிறேன் என்று கிளம்பி விட்டான்.

ஒரு மாலை நேரம் இவன் வீடு திரும்



வால்

பும்போது (இரண்டாவது மாடி) வீடு முழுக்க இலையையும் தழையையுமாக பார்த்து அதிர்ந்து போனான்.

வீடு மாறி வந்து விட்டோமோ என்று பயந்து பின்பு தெளிந்து 'ஒருவேளை வத்சலாவிற்கு மாடு வளர்க்க வேண்டும் என்று விபரீத ஆசை தோன்றி விட்டதா என்று கலங்க...

பின்புதான் புரிந்தது சித்த வைத்தியம் கற்றுக் கொள்கிறாள் என்று. இரண்டாவது மாடியில் மாடு வளர்ப்பதை விட இது தேவலாம் என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டான்.

"மூலிகைக்கு இத்தனை சக்தி இருக்கறது இப்பத்தான் தெரிஞ்சது. இத்தனை நாள் வேஸ்ட் பண்ணிட்டோமேன்னு இருக்கு. இனிமே நம்ம வீட்ல டாக்டர் செலவே இல்லாம நான் பார்த்துக்கிறேன்..." தன்வந்திரியாய்

அபயம் அளித்தாள்.

நாளொரு கஷாயமும் பொழுதொரு லேகியமுமாய் வளைய வந்தாள்.

இவள் மருந்துக்குப் பயந்து வியாதி எது வந்தாலும் சொல்லாமல் பொறுமையாக இருக்கக் கற்றுக் கொண்டான்.

இதுவும் ஒருவழியாக முடிவுக்கு வந்தது.

தலையில் இருக்கும் சொட்டைக்கு தைலம் தயாரித்து ஒரு பெண்ணுக்குக் கொடுக்க –

அதைப் பயன்படுத்தி இருக்கிற முடியும் கொட்டிப் போய் தலையே புண்ணாய்ப் போனதுதான் லாபம்!

தலையில் முக்காடிட்டு வந்து முறையிட்டு, சாபமிட்டுப் போனாள் அவள். இனி அந்தப் பெண்ணை வெளியே தலைகாட்டவே முடியாத அளவுக்குச் செய்து விட்டாள். தலைமுடி அத்தனை கச்சிதமாக உதிர்ந்து போயிருந்தது.

இதெல்லாம் கொஞ்ச நாள்தான் அவளை செயலிழக்க வைத்தது. மீண்டும் சுதாரித்துக் கிளம்பி விட்டாள். இந்த முறை தியானம்.

செடியில் இருக்கும் பூவையெல்லாம் (இதற்காகவே விடியற்காலையில் எழுந்து அடுத்தவர் வீட்டுச் செடியில் இருக்கும் பூவையெல்லாம்) பறித்து வீட்டில் இருக்கும் தட்டில் வைத்து, ஊதுவத்தி கொளுத்தி, ஒரு மினி ஆசிரமம் வைத்து விட்டாள். ஆனால் இவளுக்கு தியான கரம் வந்ததில் வீடு மிகவும் துப்புரவாய் இருந்ததைத் தவிர வேறு எந்தப் பலனும் இல்லை.

இதில் 'மாஸ்மெடிடேஷன்' என்று நாலைந்து பெண்கள் வந்து வம்புக்குப் பிறகு தியானம். இல்லையென்றால் தியானத்திற்குப் பிறகு வம்பு என்று ஓர் அமைப்பை உருவாக்கிக் கொண்டார்கள்.

தியானம் முடிந்த கையோடு அவரவரின் அனுபவத்தைக் கேட்டு, அவர்களும் தங்கள் கற்பனை சக்திக்கேற்ப பொய் சொல்ல –

(அவர்கள் அனுபவத்தையெல்லாம் கேட்கும்போது – இவள் வாயிலாகத்தான் – அரவிந்தர், ரமணர், ராமகிருஷ்ணர், விவேகானந்தர், இவர்கள் எல்லாம் ஒன்றுமே இல்லை!)

மாலை ஆனதும் விளக்கை அணைத்து, வாசல் கதவைத் திறந்தபடியே தியானம் செய்ய – தாமதமாக வருபவர்களுக்காக இந்த ஏற்பாடு!

இவர்களின் கண்மூடித்தனமான தியானத்தால் வீட்டில் இருந்த புத்தம் புது டேப் ரிகார்டர் காணாமல் போக, தியானமும் காணாமல் போனது.

கொஞ்ச நாட்கள் பரீட்சை முடிந்த ஸ்கூலாய் வீடு அமைதியாய் இருக்க, இதோ இப்போது நாய் வளர்ப்பு.

அதென்னவோ சின்ன வயசிலிருந்தே இவனுக்கு நாய் என்றால் அத்தனை அலர்ஜி.

சிறு வயதில் இரண்டாவது காட்சிக்குப் பெற்றோர்கள் அனுமதித்தால் கூட தெரு நாய்கள் அனுமதிக்காது. ஓங்காரமாய்க் குரைத்து ஆவேசமாய்த் துரத்தி, வீரமாய் உறுமி – பகலில் பார்த்து வாலாட்டிய பரமசாது நாயா என்ற திகைப்பை ஏற்படுத்தும்.

இவனைச் சுற்றி நாலைந்து நாய்களின் பாலே நடனம் வேறு! ஓடவும் முடியாமல், வேகமாக நடக்கவும் முடியாமல் – அன்றிலிருந்து நாய் என்றால் அத்தனை வெறுப்பு.

உடம்பு முழுக்க வெண்மையான ரோமம். தலை வால் புரியாமல் இருந்தது. நெற்றிக்குப் பொட்டிட்டு கழுத்தில் ரிப்பன் கட்டி, 'சுமங்கலி'யாய் மாற்றியிருந்தாள்.

"இப்ப லேடீஸ் கிளப்புக்கு நாயை அழைச்சுண்டு போறதுதான் ஃபேஷன்! மாலதிக்கு தன்கிட்டதான் நாய் இருக்குன்னு ரொம்பத் தான் கர்வம். இந்த ஸன்டே நம்ம ஃஜோனியைப் பார்த்துட்டுச் செத்துடுவா."

மணமகளை அலங்கரித்து மணமேடைக்கு அழைத்துப் போவது போல நாயை லேடீஸ் கிளப்புக்கு அழைத்துப் போனாள்.

வாக்கிங் கூட்டிக் கொண்டு போவதற்காக காலையில் சீக்கிரமே எழுந்திருக்க ஆரம்பித்தாள். என்னமோ தெய்வமே இவள் பின்னாடி நடப்பதைப் போல அத்தனை பெருமிதம்.

இவர்களின் வீடு அடையாளத்திற்காக நாய் வீடு என்று அழைக்கும் அளவுக்கு பிரசித்தி பெற்று விட்டது.

ஆஸ்துமா வந்த கிழவரின் இருமலைப் போல ஓயாத குரைப்பு மிகவும் இம்சையாக இருந்தது.

"ஒண்ணு இந்த வீட்ல நான் இருக்கணும். இல்ல நாய் இருக்கணும்," என்று கடைசியில் அம்மா வீட்டை விட்டு வெளியேறி விட்டாள்.

வீட்டில் விருந்தாளிகளின் வரவு கணிசமாகக் குறைந்திருந்தது மட்டும் கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது.

தெரு நாய் போலப் போட்டதைச் சாப்பிடாமல் மீந்ததைப் போட முடியாமல், இந்த நாய்க்காவே மெனு தயாரித்துப் போட்டாள்.

இப்படியெல்லாம் கட்டிக் காத்த நாய், ஒரு நாள் ஊரிலிருந்து வந்திருந்த அவளுடைய அம்மாவைக் கடித்து வைக்க, ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லுகிற செலவு என் தலையில்.

என்றாலும், "ஏன்டியம்மா, யாரோ ஒருத்தர் பூனைக்குட்டி தர்றேங்கறாங்க... வாங்கி வளர்க்கிறயோ!" என்ற பக்கத்து வீட்டு மாமி இவளிடம் கேட்டபோது, "இந்த நாயைக்கூட யாராவது கேட்டா, கொடுத்திடலாம்னு இருக்கேன் மாமி! இதுவரைக்கும் பட்டதெல்லாம் போதும்!" என்று இவள் சொன்னதில் எனக்குப் பெரிய நிம்மதி.

பழம் பழம், இது 'தேவதை' பழம்!

அசப்பில் எஸ்.பி.பி.யைப் போலவே தோற்றம் என்றாலும் அவரைவிட சற்றே குண்டு. ("நீ என்னுடன் இருந்தால் எனக்கு ஒரு சௌகரியம். நான் கொஞ்சம் ஒல்லியாகத் தெரிவேன்!" இது எஸ்.பி.பி. அடித்த கமெண்ட்). சரீரம்தான் எஸ்.பி.பி. போல என்று இல்லை. சாரீரத்திலும் எஸ்.பி.பி.யின் சாயல் நிறைய. அவர்தான் மோகன். தேவதை படம் ரிலீசான பின்பு, ரசிகர்கள் மத்தியில் 'பழம்' என்று பெயர். காரணம், தேவதை படத்தில், மோகனுக்குப் 'பழம்' என்றழைக்கப்படும் பழனியப்பன் கேரக்டர்.

மோகனின் குடும்பத்துக்கும், சினிமாவுக்கும் சம்பந்தமில்லை. சொந்த ஊர் உடுப்பி. முப்பதுகளில் சென்னைக்கு வந்து ஆரம்பித்த ஓட்டல் பிசினஸ், இன்று அமோகமாய் அபிவிருத்தியாகிவிட்டது.

குடும்பத்தில் ஏழு ஆண் மகன்கள். ஒருவர் மட்டும் டாக்டர். மோகன் தவிர மற்றவர்கள் எல்லோரும் பிசினஸில் பிஸி.

சில வருடங்களுக்கு முன்னால், தங்கள் ஓட்டலின் மாடியில் ஜாலியாய் பாட்டுப் பாடிக் கொண்டிருந்த மோகனை, கவனித்து, 'நல்லா பாடுறயே!' என்று பாராட்டியதோடல்லாமல், ரேடியோவில் பாட வாய்ப்பு வாங்கிக் கொடுத்தார் இசையமைப்பாளர் டி.ஆர். பாப்பா. (மோகன் முறைப்படி, பாடக் கற்றுக் கொண்டவர்). அதனைத் தொடர்ந்து, ஆர்வம் காரணமாக மெல்லிசைக் குழுக்களில் பாடத் துவங்கினார். பிறகு சொந்தமாய் ஒரு மெல்லிசைக் குழு துவங்கினார். பெயர் : மோகனப் பிரியா.

மோகனின் நெடுநாளைய ஆசை, இளையராஜா இசையில், பாட்டு ஒன்று பாடி விட வேண்டும் என்பது. அதனால், சினிமாவில் நடிக்கக் கூப்பிட்ட போது, "எனக்கு பாடத்தான் விருப்பம். நடிக்க விருப்பமில்லை" என்று மறுத்துவிட்டார்.

"தேவதை படத்தில் மட்டும் எப்படி நடிக்க ஒப்புக் கொண்டீர்கள்?"

"முழு கிரெடிட்டும் நாசருக்குத்தான். அவர்தான், ரொம்ப முயற்சி செய்து என்னை கன்வின்ஸ் செய்தார். 'உங்களை மனத்தில் வைத்துக் கொண்டு உருவாக்கின கேரக்டர்தான் 'பழம்' என்கிற பழனியப்பன். எனவே மறுக்காதீர்கள்' என்று நாசர் கூறியபோது என்னால் மறுக்க முடியவில்லை!"

வீட்டில் அம்மா, மனைவி என்று எல்லா தரப்பிலிருந்தும் ஏகப்பட்ட எதிர்ப்பு. (இருவரும், மோகனுக்குத் தெரியாமல், நேரடியாய் நாசருக்கு டெலிபோன் செய்து, அவரை சினிமாவுக்கு இழுக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டார்களாம்.) ஆனால், சினிமா என்பது ஏகமாய் மாறிவிட்டது. அது ஒரு கௌரவமான ஃபீல்டு. தயக்கம் வேண்டாம் என்று எல்லோரையும் கன்வின்ஸ் செய்து மோகனை நடிக்க வைத்து விட்டார் நாசர்.


"எனக்கு நடிப்பு என்றால் என்னவென்றே தெரியாது. ஆனாலும், 'அட, ரொம்ப கேஷுவலாய் நடித்திருக்கிறாரே' என்று அனைவரும் பாராட்டும்படி என்னை நடிக்க வைத்து விட்டார் அவர். தியேட்டரில் போய், படம்

பார்த்தபோது, 'பழம், பழம்' என்று ரசிகர்கள் சூழ்ந்து கொண்டபோது, நிஜமாலுமே ரொம்ப சந்தோஷமாய் இருந்தது. தேவதை படத்தில் எனக்கு ஒரு பாடல் காட்சியும் உண்டு. எனக்குரிய பாடல் வரிகளை நானேதான் பாடியுள்ளேன். இளையராஜா இசையமைப்பில் பாட வேண்டும் என்கிற என் நெடுநாளைய ஆசையும் தேவதை மூலம் நிறைவேறியது எனக்கு டபுள் மகிழ்ச்சி."

மோகன் நினைவு கூறும் ஒரு மறக்க முடியாத சம்பவம். "ஒரு பெண் ரசிகை, அடிக்கடி, டெலிபோன் செய்து, தனது அபிமான பாடலான 'நிலாவே வா'வை பாடும்படி என்னிடம் கேட்பார். நானும் பாடுவேன். திடீரென்று அவரிடமிருந்து டெலிபோன் வருவது நின்று போனது. விசாரித்த போது அந்தப் பெண் ரசிகை, மஞ்சள் காமாலை வந்து இறந்து விட்டதாகச் செய்தி கிடைத்தது!" என்கிறார் வருத்தத்துடன்.

சந்திப்பு : மௌஷ்மி





வித்தியாச மாணவர்கள்....

சத்தியமங்கலம் தாலுகா, காசிப் பாளையம் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஒரு நாள் திடீரென வகுப்புக்குள் செல்லாமல் வெளியே நின்று போராட்டம் நடத்தினார்கள். எதற்குத் தெரியுமா? "ஆசிரியர்களும், தலைமை ஆசிரியரும் இனி தாமதமின்றி குறித்த நேரத்தில் பள்ளிக்கு வர வேண்டும். ஆசிரியர்கள் பள்ளி வளாகத்தில் புகை பிடிக்கக் கூடாது" என்பதற்காகத் தான்!

நன்றி : ஹிந்து
தகவல் : க. மாரியப்பன்

கோரா

கும்பரிடம் சிலர் வந்து, ''தீர்த்த யாத்திரை செல்ல இருக்கிறோம்; நீங்களும் வருகிறீர்களா?'' என்று கேட்டனர்.

கோராகும்பர் ஒரு பாகற்காயை எடுத்துக் கொடுத்து, ''நீங்கள் போகுமிடங்களிலெல்லாம் இதைப் புனித நீரில் நனைத்துக் கொண்டு வாருங்கள்'' என்றார்.

அப்படியே செய்தார்கள். கோராகும்பர் பாகற்காயை நறுக்கி ஆளுக்கு ஒரு துண்டம் கொடுத்து உண்ணச் சொன்னார்.. ''எப்படி இருக்கிறது?'' என்றார்.

எல்லோரும் முகம் சுளித்து, ''ஒரே கசப்பு'' என்றனர்.

கோராகும்பர் சிரித்துக் கொண்டே, ''அத்தனை புனித நீரில் முங்கியும் பாகற்காயின் இயல்பு போகவில்லையே? உங்களுடைய காமம், குரோதம், லோபம், மோகம் போன்ற கசப்பு உணர்வுகள் நீங்கிற்றா?'' என்று கேட்டார். தலை குனிந்தார்கள்.

— ஆர். பார்த்திபன்





காலத்தை

மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டையே கொளுத்தியிருக்கிறது ரிசர்வ் வங்கி!

வாசகர்கள் 'என்னது?' என்று புருவம் உயர்த்துவது தெரிகிறது. நடந்திருப்பதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

பல்வேறு நிறுவனங்களின் பங்குகளை வாங்கி வைத்திருப்பவர்கள் நிதியாண்டின் முடிவை (மார்ச் 31) ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். அவரவர் வைத்துள்ள ஷேர்களுக்கு ஏற்ப லாபத்தில் பங்கு (டிவிடண்ட்) அறிவிக்கப்பட்டு, வந்து சேர ஆரம்பிக்கும் நேரம் அதுதானே! இந்த டிவிடண்ட் தொகையை warrant (அச்சாரம்) வடிவில் சம்பந்தப்பட்ட நிறுவனம் அனுப்பி வைப்பது ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொள்வோம். அதை வழங்கும் நிறுவனம் எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளதோ அந்த வங்கியின் எந்தக் கிளையிலும் அத்தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

நமது வங்கிக் கணக்கில் warrantஐச் செலுத்தி விட்டால் ஓர் உள்ளூர் காசோலை போல அதை பாவித்து கிளியரிங்குக்கு அனுப்பி, உடனடியாக நமது கணக்கில் வரவு வைத்து விடுவார்கள்.

இப்போது ரிசர்வ் வங்கி இந்த வசதியைப் பிடுங்கி விட்டது! டிவிடண்ட் தொகைக்கான வாரண்ட்டை இனி குறிப்பிட்ட சில பெரிய நகரங்களில் உள்ள வங்கிக் கிளைகளில் மட்டுமே காசாக்கிக் கொள்ளலாம் என்று புதிய விதியை அறிவித்திருக்கிறது.

இதனால் என்ன கெட்டுப் போய் விட்டது? எப்படியும் பங்குதாரருக்குப் பணம் வந்து சேரத்தானே போகிறது என்று வாதாட முடியாது. 91-92 இல் பங்கு மார்க்கெட் சுறுசுறுப்படைந்தபோது பல சிறு சிறு ஊர்களில் வசிப்பவர்களெல்லாம் பங்குகள் வாங்கிப் பயனடைய ஆரம்பித்தார்கள். இப்படிப்

கல்கி கன்ஸல்டன்ஸி

பட்ட சிற்றூர்வாசிகளையும் கிராம வாசிகளையும் இந்த விதி பாதிக்கும். தங்களுக்கு வரப் பெறும் டிவிடண்ட் வாரண்டுகளை வங்கிக் கணக்கில் கட்டிவிட்டுக் காத்திருக்க வேண்டும். அந்த வங்கி அதை ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ள கிளைக்கு அனுப்பி பரிவர்த்தனை முடிய தாமதமாகும்..

இதனால் பங்குதாரருக்கு மட்டும்தான் இழப்பு என்றில்லை. அவர்கள் கணக்கு வைத்துள்ள வங்கிகளுக்கும் நஷ்டம்தான்! உடனடியாகப் பணம் பரிவர்த்தனை ஆகாததால் வங்கிகளில் பணப்புழக்கம் குறைந்து போகிறது.

இந்த இரு தரப்பினருக்கு நஷ்டமும் கஷ்டமும் ஏற்படுத்தியது போதாதென்று, டிவிடண்ட் வழங்கும் நிறுவனங்களுக்கும் இவ்வறிப்பினால் நஷ்டம் உண்டாக்கியிருக்கிறது ரிசர்வ் வங்கி. ஏற்கெனவே 'payable at par' (கைக்கு கை பணம் பெறலாம்) என்று அச்சிட்டு வைத்த டிவிடண்ட் வாரண்டுகளையெல்லாம் குப்பையில் போட்டுவிட்டு புதிதாக வேறு வாரண்டுகளை அச்சடிக்கும் கட்டாயத்துக்குச் சில நிறுவனங்கள் தள்ளப்பட்டிருக்கின்றன. நேரமும் செலவும் விரயம் என்பதோடு பங்குதாரர்களுக்கு டிவிடண்ட் வாரண்ட் போய்ச் சேரவும் தாமதமாகும்.

பின்னுக்குத் தள்ளும் ரிசர்வ் வங்கி!

ரிசர்வ் வங்கியின் இந்த அவசர ஆணையின் பின்னணி என்ன...?

சி.ஆர்.பி. காபிடல் மார்க்கெட் என்ற நிதி நிறுவனம் திவாலாகி ஏராளமான வாடிக்கையாளர்கள் நஷ்டப்பட்டுப் போனதை 'ஓடிப்போன செல்லப்பிள்ளை' என்ற தலைப்பில் சில வாரங்களுக்கு முன் விவரித்தேன்.

அந்த நிறுவனம் அளித்த டிவிடண்ட் வாரண்டுகளின் பேரில் பாரத ஸ்டேட் வங்கி ஏராளமான பணத்தை வினியோகித்திருக்கிறது. நிறுவனத்தின் கணக்கிலோ போதுமான அளவு பணம் இல்லை. சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் கணக்கில் பணமிருக்கிறதா என்று உறுதி செய்யாமல் பணத்தை வினியோகித்தது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் தவறு! அதைக் கண்டித்து நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, இனி வங்கிகள் ஏமாற்றப்படக் கூடாது என்று பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும் போர்வையில் சிறு முதலீட்டாளர்களின் அடி மடியில் கை வைத்திருக்கிறது ரிசர்வ் வங்கி!

வங்கிகள் கம்ப்யூட்டர் மயமாகி, பட்டனைத் தட்டினால் கணக்கு நிலவரம் தெரிகிற காலம் இது. ரிசர்வ் வங்கியோ காலத்தை வற்புறுத்திப் பின்னுக்குத் தள்ளுவதில் குறியாய் இருக்கிறது!

இப்போது சொல்லுங்கள் - 'மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தி'ய உவமை சரிதானே!

— வி. கோபாலன்



"நீ ஒரு கேஸிலு ஐம்பது ரூபாய் லஞ்சம் வாங்கியதற்காக உன்னை சஸ்பெண்ட் செய்யுறேன்!"

"என்ன... ஸார்..., இது?"

"இந்த ஸ்டேஷன்லே குறைந்தபட்ச லஞ்சமே நூறு ரூபாய்ன்னு தெரியதா?"

— எஸ். விமலா



"என்னது, உன் மவனை போலீஸ் உத்தியோகத்தில் சேர்க்கப் போறியா!"

"ஆமாம்; நான்தான் சுவர் ஏறிக் குதிச்சு கஷ்டப்பட்டேன்; என் மவனாவது உட்கார்ந்த இடத்திலிருந்தே கொள்ளை அடிக்கட்டுமேன்னுதான்!"

— களந்தை விஜயகோபால்



என் குடும்பத்தைக் கவனிக்க ஏது நேரம்?

தடுப்பு போடப்பட்ட பாதையில் போக வேண்டும் என்ற அந்தப் பெண்மணியைத் தடுக்க முயன்றார் ஒரு போலீஸ்காரர். போலீஸ்காரரின் கன்னத்தில் பளார் என்று ஓர் அறை விட்டார் அந்தப் பெண்மணி. அதிர்ந்து போனது காக்கிச் சட்டை. ஆச்சரியப்பட்டது டெல்லி.

அந்தப் பெண்மணிதான் மத்திய குடும்பநல இணை அமைச்சரான ரேணுகா சௌத்ரி. ஆகஸ்ட் வந்தால் 43 வயதாகிறது. மேற்கூறிய 'அறை' சம்பவம், பின்னர் பலவித வதந்திகளுக்கும் காரணமானது. என்.டி.ஆர் ஆட்சியைக் கவிழ்த்த பாஸ்கர ராவ் மீது செருப்பை வீசினார் என்பது அவற்றில் ஒன்று. "என் கால் அகலமானது. என் கால் அளவுக்குப் பெரிய சைஸ் செருப்புக் கிடைப்பதே கஷ்டம். இந்த நிலையில் நான் ஏன் என் செருப்பை வேறு ஒருவர் மேல் எறிந்து, நஷ்டப்படுகிறேன்?" என்று அசால்டாய் விளக்கமளித்தார் ரேணுகா.

தேர்தல் கூட்டங்களுக்குப் போகும்போது எப்போதும் புடைவைக்குள் கத்தியை மறைத்து வைத்திருப்பார் என்பது இன்னொரு பிரபல கிசுகிசு.

எப்படியானாலும், ரேணுகா புத்திசாலி. சிறந்த பேச்சாளர். தீப்பொறி பறக்கப் பேசிய இவரது ராஜ்யசபா பேச்சுக்கள் வெகுபிரசித்தம். கட்சி வேறுபாடுகளைத் கடந்து, பல அரசியல் நண்பர்களைப் பெற்றிருப்பவர் ரேணுகா.

இவரை மத்திய அமைச்சராக்குவதில், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு அத்தனை உடன்பாடில்லையாம். அழகுப் பதுமையான ஜெயபிரதாவை அமைச்சராக்கினால், தமக்கு அரசியல் ரீதியாகப் பிரச்னை வராது என்று அவர் கருதினாலும், ரேணுகா சௌத்ரிதான் பொருத்தமானவர் என்று பிரதமர் குஜ்ரால் அடித்துச் சொல்லி, அமைச்சராக்கி விட்டாராம்.

பதவிப் பிரமாணம் முடிந்தும், பொறுப்பேற்க ஏன் தாமதம்? "பலவிதமான வதந்திகளும் உண்மையல்ல. நான் பொறுப்பேற்பதற்கு முன்பு என் துறை பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள விரும்பினேன். ஜெர்மனியிலிருந்த கணவரும், அமெரிக்காவில் இருந்த மூத்த மகளும் உடன் இருக்க வேண்டும் என நினைத்தேன். முக்கியமாக என் அறையின் அமைப்பை, ஒரு வாஸ்து நிபுணர் கொண்டு முடிவு செய்ய விரும்பினேன். அதனால்தான் தாமதம்."

இளம்வயதில் ரேணுகாவின் ஹாபி, மோட்டார் சைக்கிளில் ஊர் சுற்றுவது. படிப்பு : எம்.ஏ. உபரியாய் நாலைந்து டிப்ளமோக்கள். ரேணுகாவின் அம்மா வசுந்தரா, தமது மகள் டாக்டராக வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டார். "அஞ்சு வருஷ படிப்பெல்லாம் எனக்கு சரிப்பட்டு வராது!" என்று மறுத்துவிட்டார் ரேணுகா.

"என் குடும்பத்தை கவனிக்க நேரமே கிடைக்க மாட்டேன் என்கிறது. என் பெண் தேஜஸ்வினி, ஸ்கூலில் பரிசு பெற்றாள். நானும் அந்த விழாவுக்கு வரவேண்டும் என்று ரொம்ப ஆசைப்பட்டாள். ஆனால் நான் பாராளுமன்றத்தில் நடந்த பெண்கள் இடஒதுக்கீடு மசோதா பற்றின விவாதத்தில் பிஸி. விழாவில் நான் கலந்து கொள்ள முடியாமல் போனதில் என் பெண்ணுக்கு வருத்தம். என் பெண்ணை ஏமாற்றி விட்டதில் எனக்கும் வருத்தம்!" என்கிறார் அமைச்சர். ஸாரி, அம்மா ரேணுகா சௌத்ரி.

— கௌதம் ராம்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு).

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

இந்தியாவின் மிகப் பெரிய தங்க நகைக் கடை

சரவணா ஸ்டோர்ஸ்

(தங்க நகைகள், ஜவுளிகள், பாத்திரங்கள்)
ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-17.

தங்க, வெள்ளி நகைகளுக்கு செய்கூலி இல்லை

பழைய பொன் நகைகளை கொடுத்து புன்னகையோடு புதிய பொன் நகை பெறவும்.



22. ct. தங்கம்
1 கிராம் ரூ.406

அதிகம் கல் எடையுள்ள
நகை களுக்கு மட்டும்
10% தள்ளுபடி மேலும்
செய்கூலி, சேதாரம் இல்லை

நாங்கள் விற்கும் தங்க
நகைகள் மற்ற எந்த
கடைகளையும் விட
உயர்வான தரம் என்று
சவால் விட்டு
உறுதி கூறுகிறோம்.

இந்தியாவின் மிகப் பெரிய பட்டு ஜவுளி மாளிகை

பட்டுபுடவைகளுக்கு 10% தள்ளுபடி

ஜவுளிகள், ரெடிமேட் ஆடைகள், பாத்திரங்கள், டி.வி,
ரேடியோ, ஃபிரிஜ், ஃபேன்

உண்மையே உயர்வு

ஞாயிறு விற்பனை உண்டு

L.R.SWAMI / PP